மகாவித்துவான்

# ரா. ராகவையங்கார்



பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழறிஞர் வரிசை – 11

# மகாவித்துவான்
# ரா. ராகவையங்கார்

பதிப்பாசிரியர்

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ச. சிவகாமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA

திங்கள் (தொடர்) ஆய்வுக் கருத்தரங்கம் - தமிழறிஞர் வரிசை - 11
மகாவித்துவான் ரா. ராகவையங்கார் (27-02-2004)


| | | |
|---|---|---|
| Title of the Book | : | **Makā Vittuvāṉ Rā. Rākavaiyaṅkār** |
| Editors | : | Dr. S. Krishnamoorthy<br>Director<br>IITS, Taramani, Chennai - 600 113.<br>Dr. S. Sivakami<br>Associate Professor<br>IITS, Taramani, Chennai - 600 113. |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Ph: 22542992 |
| Publication No | : | 536 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 kg TNPL Map litho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii +96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 30/- (Rupees Thirty Only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road,<br>Chennai - 600 004. |
| Subject | : | Biography & Criticism on<br>Mahavidhvan Ra. Ragavaiyangar |


---


கட்டுரையாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஒல்லும்வகையெல்லாம் தமிழை வளர்ப்பதில் அயராது பாடுபட்டுவருகிறது. வாரக்கருத்தரங்கு, திங்கள் கருத்தரங்கு, ஆண்டுக்கருத்தரங்கு, அறக்கட்டளைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி அக்கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாக வெளியிட்டுத் தமிழுக்கு வளம் சேர்த்து வருகிறது. தமிழாய்வுக்கு உடனடித் தேவை என்ன என்பதை உணர்ந்து அதைச் செயல்படுத்திவருவதே இதற்குக் காரணமாகும்.

இந்நிறுவனம் தொடக்கக் காலத்திலிருந்து பல்வேறு பொருண்மைகளில் கருத்தரங்குகளை நடத்திவருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். தமிழுக்கென்று அமைந்த மரபையும் பாரம்பரியத்தையும் எடுத்துக்காட்டும் வகையில் தமிழ் இலக்கியக் கொள்கை என்ற தொடர்கருத்தரங்கை இந்நிறுவனம் நடத்திவந்தது. தமிழர் கலைச் செல்வங்கள் என்ற தலைப்பில் தொடர் கருத்தரங்காகத் தமிழ் மரபினை உணர்த்தும் வகையிலும் கருத்தரங்குகளை நடத்திவந்தது. இவையன்றியும் பல்வேறு இலக்கியப் பொருண்மைகளில் கருத்தரங்கை நடத்திவந்தபெருமை இந்நிறுவனத்திற்கு உண்டு. இந்நிறுவனம் தன் அளவிலும் பிற நிறுவனங்களோடு சேர்ந்தும் இத்தகைய கருத்தரங்குகளை நடத்தித் தமிழாய்வுக்குச் சிறப்புச் சேர்த்து வந்துள்ளது. இக்கருத்தரங்குகளைத் தொடர்ந்து தமிழறிஞர்களை மையப்படுத்திய நிலையில் தொடர்கருத்தரங்கு ஒன்றைத் தொடங்க எண்ணியது. இவ்வகையில் **'தமிழறிஞர் வரிசை'** என்ற பெயரில் தொடர் கருத்தரங்கை நடத்துவதன்மூலம் அறிஞர் பலரின் அரிய தமிழ்த் தொண்டுகளை எல்லாம் இவ்வுலகிற்கு எடுத்துக்காட்ட முடியும் என்ற நிலையில் இக்கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது.

வரலாறு எழுதப்படாத தமிழறிஞர்களுக்கு ஒரு வரலாற்றை உருவாக்குவதன் மூலம் அத்தமிழறிஞர்களைப் பற்றிய செய்திகள் ஆவணப் படுத்தப்படும். அவ்வாறு ஆவணப்படுத்தப்படுவதால் இத்தமிழறிஞர்கள் இம்மண்ணில் பிறந்த பயனும், இம்மண்ணிற்கும், மொழிக்கும், இனத்திற்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகளும் பின்வருவோரால் போற்றப்படும் நிலை உருவாகும். இதனால் இத்தமிழறிஞர்

வரிசைக்கருத்தரங்கை வாழ்க்கை வரலாற்றுக் கருத்தரங்காக அமைக்காமல் ஆய்வுக்கருத்தரங்கமாக அமைத்துக்கொள்ள முடிவு எடுக்கப்பட்டது. அவ்வகையில் தமிழுக்கு உழைத்து மறைந்த அறிஞர்கள் பலநூறுபேர் நம்முன் வந்தனர். அவர்கள் அனைவரைப் பற்றியும் இத்தொடர் கருத்தரங்கம் அமையவேண்டும் என்பது எங்கள் அவா. எனவே அனைவரையும் பட்டியலிட்டுப் பகுதி பகுதியாக இத்தொடர் கருத்தரங்கை நடத்த முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் கட்டமாகப் பதினாறு அறிஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இத்தமிழறிஞர்களின் முதல் பட்டியலைக் கொண்டு தமிழறிஞர் களைப் பற்றிய கருத்தரங்கு நடைபெறும் நாள், கட்டுரை வழங்க வேண்டிய நாள் பற்றிய குறிப்புகளுடன் முதல் அட்டவணை தயார் செய்யப்பட்டது.

இப்பதினாறு தமிழ் அறிஞர்களைப் பற்றியும் கட்டுரைகள் வழங்கத் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் பணி புரியும் ஆசிரியர்கள் அழைக்கப்பட்டனர்.

ஒரு திங்களுக்கு ஒரு தமிழறிஞர் என ஒருவரைப் பற்றிய கருத்தரங்கில் 5 அல்லது 6 பேர் ஆய்வு செய்யவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கட்டுரைகள் கோரப்பட்டன. ஒருவரைப் பற்றிப் பலர் ஆய்வுசெய்து கட்டுரை வழங்குவதால் அவ்வறிஞருடைய பன்முக ஆளுமையை வெளிக்கொணர முடியும். அத்தமிழறிஞர்களின் வாழ்க்கை வரலாறு முதலில் அமையவேண்டும்; பதிப்பு, மொழிபெயர்ப்பு, திறனாய்வு போன்ற நிலைகளில் அவ்வறிஞர் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெறவேண்டும் என்ற நோக்கில் கட்டுரைகள் பெறப்பட்டன. இக்கருத்தரங்கில் மிகுந்த விருப்பத்துடன் ஆய்வாளர்கள் கட்டுரை வழங்க முன்வந்தமை உண்மையிலேயே எங்களுக்கு வியப்பு அளித்தது. முறையாகத் திட்டமிடப்பட்டுச் செயல்படத் தொடங்கிய **இத்திங்கள் தொடர் ஆய்வுக்கருத்தரங்கு - தமிழறிஞர் வரிசை** புதுப்பொலிவுடன் எண்ணிய வண்ணம் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இம்முதல் பட்டியலைத் தொடர்ந்து இரண்டாவது பட்டியல், மூன்றாவது பட்டியல் எனத் தமிழறிஞர் வரிசை ஆண்டுக் கணக்கில் நடைபெறும் தொடர் கருத்தரங்காக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய, நாளைய தலைமுறையினர்க்கும் தமிழ் உலகிற்கும் ஒரு சிறந்த ஆவணமாக அமைய இருக்கும் இத்தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்கக் கட்டுரைகளை நூலாகத் தொடர்ந்து வெளியிடுவதில்

இந்நிறுவனம் பெருமை கொள்கிறது. எப்போதும் ஒரு பணியைத் திட்டமிட்டு எதிர்கால நோக்கில் செயல்படுத்தினால் அத்திட்டம் வெற்றியடைவது உறுதி என்பதற்குச் சான்றாக இத்தமிழறிஞர் வரிசைத் தொடர் கருத்தரங்கு அமையலாம்.

தமிழறிஞர் வரிசையின் பதினொன்றாம் கருத்தரங்காக மகாவித்துவான் ரா. ராகவையங்கார் அவர்கள் பற்றி இக்கருத்தரங்கு அமைகிறது. இக்கருத்தரங்கில் அறுவர் கட்டுரை வழங்கியுள்ளனர். இக்கட்டுரைகள் மகாவித்துவான் அவர்களின் வாழ்க்கை வரலாற்றையும், தமிழ்ப் பணியையும். அவர்தம் பாரிகாதை எனும் நூலைப் பற்றியும், வரலாற்று நோக்கில் அவரது பதிப்புப்பணியையும், சங்க இலக்கிய ஆய்வுகளையும், வரலாற்று நூல்களையும் ஆய்வு செய்யும் நோக்கில் அமைந்துள்ளன. மகாவித்துவான் ரா. ராகவையங்கார் அவர்கள் சிறந்த தமிழ் ஆர்வலராகவும் வரலாற்று அறிஞராகவும் பதிப்பாசிரியராகவும் விளங்கியிருக்கிறார். மகாவித்துவான் என்ற இப்பட்டம் மேலைச்சிவபுரி சன்மார்க்க சங்கத்தில் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் முன்னிலையில் அவருக்கு வழங்கப்பட்டது.

இப்பட்டம் வழங்கப்பட்ட நாள்முதல் இவர் சேதுசமஸ்தான மகாவித்துவான் என்று அழைக்கப்பட்டார். இவர் பாஷா கவிசேகரர் என்ற சிறப்பையும் பெற்றிருந்தார்.

இன்றுவரை சிறந்த ஆய்வு இதழாகத் திகழ்ந்துவரும் மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழ் இதழின் பதிப்பாசிரியராகச் சுமார் இரண்டரை ஆண்டுகள் பணிபுரிந்தார். இக்காலக்கட்டத்தில் இவர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைளும் பதிப்பு நூல்களும் தமிழ் உலகிற்குப் பெருமைசேர்ப்பனவாக அமைந்தன.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் பாடப் புத்தகக் குழுவில் அங்கம் வகித்தார். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1941 வரை பணியில் இருந்து மாணவர்களுக்குப் பயிற்றுவித்தலின் மூலம் அரிய செய்திகளை வழங்கினார். இக்காலக் கட்டத்தில் தான் இவர்தம் 'பாரிகாதை' என்ற நூல் வெளிவந்தது.

அகநானூறு, குறுந்தொகை, பெரும்பாணாற்றுப்படை போன்ற சங்க நூல்களையும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும் நேமிநாதம், தொல்காப்பியம் செய்யுளியல் உரை ஆகியவற்றையும் பதிப்பித்த பெருமை இவருக்குண்டு. இவர் தம் ஆராய்ச்சி உணர்வும், கடுமையான உழைப்பும் கண்டோரை வியக்கவைத்தன.

இப்பெருந்தகை செய்ந்நன்றி மறவாதவராகவும், சமயநோக்கு உடையவராகவும் விளங்கினார் என்பதை இவர்தம் படைப்புகளில் இருந்து அறிய முடிகிறது.

இத்தகைய பண்புகள் நிரம்பிய இப்பெருந்தகை 1946இல் சூலை 13இல் வீடுபேறு அடைந்தார். இப்பெருந்தகையாரின் சிறப்புகளை வெளிக்கொணரும் முகத்தான் மகாவித்துவான் ரா. ராகவையங்கார் எனும் இந்நூல் வெளிவருகிறது. தமிழறிஞர் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படுத்தும் இத்தகு அரிய முயற்சியில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தன்னை முழுமையாக ஈடுபடுத்தித் தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்தி நூல்களை வெளிக்கொணர்வதில் பெருமையடைகிறது.

இத்தொடர் கருத்தரங்கிற்கு ஒருங்கிணைப்பாளராக இருந்து கருத்தரங்கு சிறப்புற நடைபெற முழு ஒத்துழைப்பு நல்கிய இலக்கியம் மற்றும் சுவடிப்புல இணைப்பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி இரா. வெண்ணிலாவிற்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் என் பாராட்டுகள்.

சென்னை

23-02-05

**இயக்குநர்**

# கட்டுரையாளர்

முனைவர் வ. இராசரத்தினம்
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்

முனைவர் கோமதி சூரியமூர்த்தி
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
மதுரை

திருமதி சு. கௌசல்யா
ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை

முனைவர் வீ. நிர்மலா ராணி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்

முனைவர் ப. பத்மநாப பிள்ளை
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்

முனைவர் முத்து இலக்குமி
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி
மதுரை

# உள்ளே


வாழ்க்கை வரலாறு 1

– கோமதி சூரியமூர்த்தி

தமிழ்ப்பணி 24

– முத்து இலக்குமி

வரலாற்று நோக்கில் பாரிகாதை 48

– வ. இராசரத்தினம்

பதிப்புப்பணி 62

– கௌசல்யா

சங்க இலக்கிய ஆய்வுகள் 73

– வீ. நிர்மலா ராணி

வரலாற்று நூல்கள் 89

– ப. பத்மநாப பிள்ளை

# வாழ்க்கை வரலாறு

*கோமதி சூரியமூர்த்தி*

## பிறப்பு

> "தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
> தோன்றலின் தோன்றாமை நன்று" (236)

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்பப் புகழொடு தோன்றியவர் ரா.ராகவையங்கார். இவர் 1870ஆம் ஆண்டில் செப்டம்பர் 20ஆம் நாள் இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகங்கைச் சமீனைச் சார்ந்த தென்னவராயன் புதுக்கோட்டையில் நைத்துருவ காசிப கோத்திரத்தில் பிறந்தார்.

## பெற்றோர்

இவருடைய தந்தையார் இராமானுஜ ஐயங்கார். தாயார் பத்மாசினி அம்மையார். இவர் தாம் பாடிய பாரிகாதையில் கடவுள் வாழ்த்தை அடுத்துத் தம் பெற்றோர் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களைப் போற்றிப் பாடியுள்ளார்.

## மரபின் மேன்மை

இவருடைய தந்தை, தாய் இருவரின் மரபினரும் சிறப்பு மிக்கவர்கள். இவருடைய தந்தை வழி முன்னோர் செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சி திருப்புட்குழியினைச் சேர்ந்தவர்கள். தமிழ், சமஸ்கிருதம் என்ற இரு மொழிகளிலும் புலமை மிக்கவர்கள். "மாடபூசி" என்னும் குலப்பெருமையினர். நம்மாழ்வார் அவதரித்த திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆழ்வார் திருநகரிக்குக் குடிபெயர்ந்தவர்கள்.

தாய் வழி முன்னோருள் மூன்று தலைமுறைக்கு முற்பட்டும் புகழ்பெற்று விளங்கியவர் சின்னப் பிரதானி கிருஷ்ணையங்கார். இவர் இராமநாதபுர சமீனுக்கு அமைச்சர். அவர் காலம் முத்துராமலிங்க சேதுபதியின் காலமாகிய பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியாகும். அப்போது பிரதானியாக விளங்கிய முத்திருளப்ப பிள்ளைக்கு அடுத்த நிலையில் சின்னப் பிரதானியாக விளங்கியவர். மேனாட்டினரும் வியந்து பாராட்டும் வேலைப்பாடு அமைந்த இராமேசுவரக் கோயிலிலுள்ள "சொக்கட்டான்

மண்டபம்" இவர்கள் மேற்பார்வையில் கட்டப்பட்டதாகும். இவர்களின் திருப்பணிகளை நினைவூட்டும் வண்ணம் சேதுபதி முத்துராமலிங்கர், பிரதானி இருளப்பபிள்ளை, சின்னப்பிரதானி கிருஷ்ணையங்கார் ஆகியோரின் உருவங்கள் இம்மண்டபத்தில் அழகுற அமைந்துள்ளன.

## குடிப்பெருமை

வள்ளுவர் குடிசெயல்வகை என்னும் அதிகாரத்தில் "குடிப்பெருமைக்குரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது ஒன்றும் இல்லை" (1021) என்கின்றார். மேலும் குடிமை என்னும் அதிகாரத்தில்,

> "நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
> வகை என்ப வாய்மைக் குடிக்கு" *(953)*

என்றும் மொழிகின்றார். முகமலர்ச்சி, ஈகை, இனியசொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் உயர்குடிப் பிறந்தார்க்குரிய நல்ல பண்புகள். இதற்கு எடுத்துக்காட்டாக ராகவையங்காரின் குடி விளங்கியது.

இவருடைய குடும்பம் பரம்பரையாய் வளமிக்கது. பெருமை மிக்கது. மிகுந்த வருவாய் தரும் நிலபுலன்களை உடையது. அவை சேது செல்லும் பாதையில் அமைந்திருந்தன. "செல்வத்தின் பயன் ஈதல்'' என்று புறநானூறு கூறியபடி இவரது குடும்பத்தினர் இராமேசுவரம் செல்லும் யாத்திரிகர்களுக்கு வழிவழியாகப் பலவகைத் தருமங்களைச் செய்து வந்தனர்.

> "சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
> ஆக்கம் எவனோ உயிர்க்கு" *(31)*

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப அறவழிச் சென்ற இவரது குடும்பத்தினர் சிறப்புடையவர்களாகத் திகழ்ந்தனர். இவருடைய தாய்மாமன்மார் இருவர் அட்டாவதானம் கிருஷ்ணையங்காரும், சதாவதானம் முத்துசாமி ஐயங்காரும் சேதுசமஸ்தானத்தின் ஒளி விளக்குகளாக மிளிர்ந்தனர். பெரிய தாய்மாமன் அட்டாவதான கிருஷ்ணையங்கார் வடமொழி, தென்மொழி வல்ல பண்டிதர். சின்ன தாய்மாமன் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் பதினாறு வயது வரையில் கல்வி, கேள்விகளில் பயிற்சி பெறாமலிருந்து பின்னர் இறைவனின் இன்னருளால் அற்புதமான அவதான ஆற்றலும், பன்மொழிப் புலமையும் பெற்று பெரும் வித்துவானாக விளங்கினார். இவர் மைசூர் சென்று கன்னடநாட்டு அரசராகிய கிருஷ்ணராஜ

உடையார் முன் கன்னடமொழியில் அட்டாவதானம் புரிந்து பதினாயிரம் பொன், நல்லமுத்துமாலை, பல்லக்கு முதலியன பரிசில்களாகப் பெற்றுப் பாராட்டுப் பெற்றவர். இவர் ராகவையங்காருக்கும், தமிழ்ச் சங்கம் தொடங்கி நடத்திய பாண்டித்துரை தேவர்க்கும், மற்றும் அக்கால புலவர்கள் பலருக்கும் பேராசானாகத் திகழ்ந்தவர்.

### கல்வி வளர்ச்சி

இவருக்கு ஐந்து வயதானபோது இவருடைய தந்தையார் இறைவனடி சேர்ந்து விட்டார். மாமன் முத்துசாமி ஐயங்காரே இவரை வளர்த்தார். மாமாதான் இவரும், இவருடைய தமையன் திருப்பதி ஐயங்காரும் கல்வி பயில வாய்ப்பளித்தார். "தர்ம மகமை" என்னும் நிதியிலிருந்து சமஸ்தானம் இவர்களின் கல்விச் செலவுக்குப் பண உதவி செய்தது. "விளையும் பயிர் முளையிலே தெரியும்" என்ற பழமொழிக்கேற்ப இவர் இளமையிலேயே நுண்ணறிவும், சொல் வன்மையும், கவிபாடும் திறனும் உடையவராய் இருந்தார். ஆஸ்தானப்புலவர்களின் கூட்டுறவு அதனை மேலும் வளர்த்தது.

### இல்லற வாழ்க்கை

இவர் மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணிபுரியத் தொடங்கிய காலத்தில் இவருக்குத் திருமணம் நிகழ்ந்தது.

> "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
> பண்பும் பயனும் அது" *(45)*

என்றபடி இவரது இல்லறம் அன்போடியைந்த நல்லறமாய் அமைந்தது. இவருடைய வாழ்க்கையும் வரவர வளம்பெறத் தொடங்கியது.

> **"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்**
> **நன்கலம் நன்மக்கட் பேறு" (60)**

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப மனைவி ஜானகியம்மாள் மனையறத்தின் வேராக விளங்கி ரா. ராகவையங்காரின் இல்வாழ்க்கை இனிமையும், மாட்சிமையும் பெற உதவினார். இவர் மூன்று பெண்மகவுகளையும், ஒரு ஆண்மகவையும் பெற்றார். மூன்று மகள்களுமே பக்தி இலக்கியம் பயின்றவர்கள். மகன் வித்துவான் ரா. ராமானுஜையங்கார் தமிழ்ப் புலமை பெற்றவர்.

### பெற்ற பரிசில்களும் பட்டங்களும்

இளமையில் ஒரு நாள் இவர் யாருக்கும் தெரியாமல் திருநெல்வேலிக்குச் சென்று அங்குள்ள புகழ் பெற்ற கிருஷ்ணையர்

என்னும் வழக்கறிஞரின் அறிமுகத்தோடு ஊற்றுமலை ஜமீன்தார் இருதாலய மருதப்ப தேவரைச் சந்தித்து, அவருடைய அவையில் தம் கல்வித் திறமையைக் காட்டிப் பரிசில்கள் பல பெற்று இராமநாதபுரம் திரும்பினார். இவர் பிரிவால் வருந்தியிருந்த முத்துசாமி ஐயங்காருக்கு அதன் பிறகுதான் உண்மை தெரியவந்தது. தம் மருமகனின் கல்வித்திறம் கண்டு பெரிதும் மகிழ்வுற்றார்.

இவர் பாரிகாதையை இனிய வெண்பாவாகப் பாடி, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அரங்கேற்றியபோது, அண்ணாமலைச் செட்டியார் இவருக்கு ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசளித்தார்.

## மகாவித்துவான் என்னும் சிறப்புப் பட்டம்

உலகில் சிலர் பட்டம், பதவிகளை அரிதின் முயன்று பெறுவர். தகுதி பற்றி அவை தாமே வந்து, தம்பால் பொருந்திய சிறப்புடையவர் ரா. ராகவையங்கார்.

இவருடைய பெரும் புலமையை நன்கு உணர்ந்த மேலைச் சிவபுரி சன்மார்க்கச் சங்கத்தினர், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் முன்னிலையில் டாக்டர் உவே. சாமிநாதையர் தலைமையில் நடந்த ஆண்டு விழாவின் போது இவருக்கு "மகாவித்துவான்" என்னும் பட்டத்தை வழங்கினர். டாக்டர் உவே.சா. அப்பட்டத்தை இவருக்குச் சூட்டி, இவரைப் பாராட்டிச் சிறப்புரை ஆற்றினார். தம் ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஒருவரையே மகாவித்துவான் என்று போற்றும் பெருந்தகையான உ.வே.சா., ஐயங்காரும் அத்தகைய பெருந்தகையார் என உளமார பாராட்டினார். அன்று முதல் இவர் "சேது சமஸ்தான மகாவித்துவான்" என எல்லோராலும் அழைக்கப்பட்டார். இவர் சேது சமஸ்தான மகாவித்துவானாகப் பணியாற்றிய போது சேதுபதி மன்னர் இவருக்கு ஆண்டு நன்கொடையாக ஊதியம் வழங்கியதோடு, தண்டிகை வரிசையும், கலைமகள் உருவில் பெரும் பதக்கமும், பொன்மணிக் கடகங்களும், பொன்னாடைகளும் பரிசில்களாக அளித்துப் பெருமைப்படுத்தினார்.

## பாஷா கவிசேகரர் பட்டம்

இவர் தமிழ்நாட்டுத் தலைநகரான சென்னையிலும், பிற இடங்களிலும் பற்பல கூட்டங்களில் அறிஞர்கள் அகமகிழும்படி பேசிவந்தார். தமிழ்ப் பெரும்புலவர்கள் மட்டுமல்லாமல், வடமொழிப் புலவர்களும் சமயச் சான்றோர்களும் இவருடைய பேச்சால் பெரிதும் இன்பம் பெற்றனர். சென்னை மயிலாப்பூர் வடமொழிப் பல்கலைக்

கழகத்தார் "பாஷா கவிசேகரர்" என்ற பட்டத்தை இவருக்கு வழங்கி, பொற்கிழி கொடுத்து, பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், குப்புசாமி சாஸ்திரியார், முன்னாள் நீதிபதிகளான எஸ். வரதாச்சாரியார், வி.வி. சீனிவாசையங்கார், தேசிய தலைவர் சத்தியமூர்த்தி முதலிய பேரறிஞர்கள் இவரைப் பாராட்டிப் பேசினர்.

## ஆற்றிய பணிகள்

### பள்ளிகளில் தமிழாசிரியர்

இவர் தம் பதினெட்டாம் வயதில் (கி.பி. 1888) சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பதவி ஏற்றார். அங்கு இரு ஆண்டுகள் பணியாற்றினார். பின் திருச்சி சேஷையங்கார் பள்ளியில் தமிழாசிரியராகச் சிலகாலம் பணியாற்றினார். கல்வெட்டு ஆராய்ச்சி நிபுணரான அ. கோபிநாதராயர் இப்பள்ளியில் இவரிடம் பயின்றவரே. இப்பள்ளி பின்னர்த் திருச்சி தேசிய உயர்நிலைப் பள்ளியுடன் இணைந்தது.

### சேதுபதி சமஸ்தான வித்துவான்

ஐயங்கார் ஒரு சமயம் (1891) சென்னை கிறித்துவக் கல்லூரியில் சொற்பொழிவாற்றச் சென்றார். அங்குக் குழுமியிருந்த பேராசிரியர்கள் அனைவரும் அச்சொற்பொழிவைக் கேட்டுப் பெரிதும் போற்றினர். இவர் அந்நாளில் மாநிலக்கல்லூரியில் கணிதப் பேராசிரியராக விளங்கியவரும், தமிழிலும் வல்லமை பெற்றவராய்க் கல்வியில் சிறந்து விளங்கியவருமான பூண்டி அரங்கநாத முதலியாரைச் சந்தித்தபோது, அவர் ஐயங்காரின் புலமைத் திறத்தைக் கண்டு பாராட்டி, ஒரு நற்சான்றிதழ் கொடுத்தார். பின் இராமநாதபுரத்தில் நிகழ்ந்த நவராத்திரி விழாவில் பாஸ்கர சேதுபதி இளம் புலவர் ராகவையங்காரின் திறமையை உணரும் வாய்ப்புப் பெற்றுத் தம் ஆஸ்தான வித்துவான்களுள் இயற்றமிழுக்குரிய ஒருவராக இவரை நியமித்தார்.

### சேதுசமஸ்தான மகாவித்துவான்

கி.பி. 1897இல் மாமன் முத்துசாமி ஐயங்கார் காலமான பின், அன்னாரின் பதவியைச் சமஸ்தானத்தில் பெற்று இவர் அரசவைப் புலவராயினார். சேதுபதிகளின் உடன்பாட்டோடு இவர் பின்னர்ப் பிற இடங்களில் பணியாற்றிவந்த போதிலும், தம் ஆயுள் முழுவதும் சேது சமஸ்தான வித்துவானாகவே திகழ்ந்தார். பாஸ்கர சேதுபதி காலத்தில் மட்டுமல்லாமல், அவருக்குப் பின் பட்டமேற்ற

இராசராசேச்சுவர சேதுபதி, நாகநாத சேதுபதி ஆகியோர் அவையிலும் இவர் சமஸ்தான மகாவித்துவானாக விளங்கினார். கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் விக்கிரமன், குலோத்துங்கன், இராசராசன் என்னும் சோழ மன்னர் மூவரவையிலும் விளங்கியது போலச் சேதுபதி மன்னர் மூவர் காலத்தும் இவர் ஆஸ்தான வித்துவானாகச் சிறப்புப் பெற்றவர்.

## மதுரைத் தமிழ்ச் சங்கப்பணி

பாண்டித்துரைத் தேவர் 1901 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ஆம் நாள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவினார்கள். பாஸ்கர சேதுபதி தம் பரிவாரங்களுடன் வந்து சங்கத் தொடக்க விழாவைச் சிறப்பித்தார்கள். ரா. ராகவையங்கார் இச்சங்கம் நிறுவும் முயற்சியில் உறுதுணையாக இருந்தார். இது நான்காம் தமிழ்ச் சங்கம் எனப் போற்றப்பட்டது. ரா. ராகவையங்கார், உ.வே.சா., வை.மு. சடகோப ராமானுஜாசாரியார், வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், சோழவந்தான் அரசஞ் சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், மு. இராகவையங்கார், திருமயிலை சண்முகம் பிள்ளை முதலிய தமிழ்ப் பெரும் புலவர்கள் இச்சங்கத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சேதுபதி விருப்பப்படி, ரா. ராகவையங்கார் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழ்ப்பணி செய்ய ஆரம்பித்தார். இச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தக சாலை, நூலாராய்ச்சி சாலை என்னும் பகுதிகளைத் தொடங்கித் தமிழ்க் கல்வியை நாடெங்கும் பரப்பியது. ஐயங்கார் நூற்பதிப்பு, ஆராய்ச்சித் துறைகளின் தலைவராய் அமர்ந்து அரும்பணி புரிந்தார்.

"சென்றிடுவீர் எட்டுத்திசையும், கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்து இங்குச் சேர்ப்பீர்" என்றபடி ஐயங்கார் தென்னாட்டில் திருநெல்வேலி, ஆழ்வார் திருநகரி முதலிய இடங்கட்குச் சென்று, பெரிய வித்துவான்களின் இல்லங்களிலிருந்து ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பெற்றுப் புத்தக சாலையில் கொண்டு சேர்த்தார். தம் ஆயுட் காலம் முழுவதும் தமிழ்ச் சங்கத்தின் செயல்முறைக் குழுவினருள் ஒருவராக அமர்ந்து செயலாற்ற உதவினார். சங்கத்தின் தனித்தமிழ்த் தேர்வுகட்குத் தேர்வாளராக இருந்தார்.

## செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் செந்தமிழ் என்னும் திங்கள் இதழ் 1902 ஆம் ஆண்டின் இறுதியில் தொடங்கப்பட்டது. இப்பத்திரிகையின்

முதல் பத்திரிகாசிரியராகப் பொறுப்பேற்று நடத்தியவர் ரா. ராகவையங்கார். உதவிப் பத்திரிகாசிரியராக இருந்தவர் இவருடைய அம்மான் மு. இராகவையங்கார். செந்தமிழ் முதல் இதழ் 1902 நவம்பரில் வெளியாகியது. இதன் முகவுரையில் தமிழ் வரலாற்றையே தொகுத்துத் தந்துள்ளார். இப்பத்திரிகையின் முதல் இதழிலேயே ஆராய்ச்சி என்னும் பகுதியைத் தொடங்கினார். அந்நாளில் அச்சில் வெளியான நூல்களைக் குறித்துப் "புத்தகக் குறிப்பு" என்னும் தலைப்பில் மதிப்புரைகள் இவர் எழுதினார். சுமார் $2\frac{1}{2}$ ஆண்டுகள் செந்தமிழ்ப் பத்திரிகாசிரியராக இருந்தார். இந்தக் குறுகிய காலத்தில் இவர் வெளியிட்ட ஆராய்ச்சிச் செய்திகளும், கட்டுரைகளும், பதிப்பித்த நூல்களும் பலவாகும்.

## தேவகோட்டையில் தமிழ்ப்பணி

இவர் 1904ஆம் ஆண்டில் உடல் நலக் குறைவு காரணமாகப் பத்திரிகாசிரியர் பதவியிலிருந்து விலகித் தேவகோட்டை சென்று வாழ்ந்து வந்தார். அப்பொழுது அவரை, கம்பரைச் சடையப்ப வள்ளல் ஆதரித்தது போல, வள்ளல் மெ.அரு. இராமநாதன் செட்டியார் அன்புடன் ஆதரித்து வந்தார். இவருக்கும், அந்நகரிலுள்ள சில தனவணிகப் பெரு மக்களுக்கும் இவர் தமிழ் நூல்களைப் போதித்து வந்தார். சுமார் ஏழு ஆண்டுகள் தேவகோட்டையில் வாழ்ந்தார்.

## இராமநாதபுரத்தில் அவைக்களப்புலவர்

இவரிடம் தமிழ் பயின்ற இராசராசேச்சுவர சேதுபதி 1910ஆம் ஆண்டு சேதுபதியாயினார். அப்பொழுது தம் ஆசிரியரான ராகவையங்காரையும் இராமநாதபுரத்திற்கு அழைத்துக் கொண்டார். இவர் இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னரின் அவைக்களப் புலவராய் விளங்கித் தமிழும், வடமொழியும் தழைத்தோங்க இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்தார். தமிழ், வடமொழி நூல்களைக் கற்றுச் சுவைத்து வந்ததோடு பிறருக்கும் கற்பித்து வந்தார். அவ்வப்போது ஆராய்ச்சி உரைகள் வெளியிட்டும் வந்தார். தம் கவிதைத் திறமையால் பல செய்யுள் நூல்களையும் இயற்றினார். அந்நாளில் பெரும்புலவர்கள் அனைவருமே இவருடைய புலமையையும், கவிப்பெருமையையும் போற்றி இவரைப் பெரிதும் மதித்து வந்தனர்.

## சென்னைப் பல்கலைக் கழகம்

இவர் பல ஆண்டுகள் சென்னைப் பல்கலைக்கழகத்துத் தேர்வாளராகவும், பாடப்புத்தகக் குழுவினருள் ஒருவராகவும் இருந்துள்ளார்.

## அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1935ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சித்துறை தோற்றுவிக்கப் பட்டது. ஐயங்கார் அத்துறையில் முதன்மை ஆராய்ச்சியாளராகப் பதவி ஏற்று 1941 வரை அங்குப் பெருந்தொண்டாற்றினார். அப்போது அவருக்கு அகவை 65; இருப்பினும் அயராது உழைத்தார். ஆராய்ச்சித் துறைப் பணிகளோடு, முதுகலை மாணவர்கட்கும் கற்பித்து வந்தார். மாணவர்கள் இலக்கியம், இலக்கணம் இரண்டையும் இவரிடம் கற்றுப் பெரும் பயன் பெற்றனர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் நூல் வெளியீட்டின் முதல் நூல் இவர் பாடிய பாரிகாதை. அது 1937ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இரண்டாவது வெளியீடாக வந்தது இவர் எழுதிய தமிழ் வரலாறு. இந்நூல் 1941இல் வெளியிடப்பட்டது.

இவர் குறுந்தொகைக்கு விளக்கவுரையும், பத்துப்பாட்டுள் பெரும்பாணாற்றுப்படை, பட்டினப்பாலை ஆகியவற்றுக்கு ஆராய்ச்சி உரைகளும் எழுதியுள்ளார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் ஆராய்ச்சித் துறையில் பணியாற்றியபோது எழுதிய "தித்தன்", "கோசர்" என்ற இரு ஆராய்ச்சிக் கட்டுரைகள் பின்னர் முறையே 1949இலும், 1951இலும் அப்பல்கலைக்கழகத்தாரால் தனித்தனி நூல்களாக வெளியிடப்பட்டன.

## இறுதி வாழ்க்கை

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து 1941இல் ஓய்வு பெற்றார். பின்னர் இராமநாதபுரத்திலுள்ள தம் இல்லத்தில் வாழ்ந்து வரலானார். இவருடைய அருமைப் புதல்வர் ரா. இராமானுஜ ஐயங்கார் தந்தைக்குரிய பணிகளைச் செவ்வனே ஆற்றி வந்தார். கண்பார்வைக் குறைவாலும், உடல் தளர்ச்சியாலும் அவர் வெளியூர்கட்குச் செல்வதை நிறுத்தி விட்டார். ஆயினும் பழமரங்களை நாடிப் பறவைகள் தாமே செல்வது போலத் தம்மை நாடி வந்து கேட்டவர்களுக்குத் தமிழ் விருந்தளித்தார்.

## அருளிய நூல்கள்

இவர் தம் வாழ்நாளில் அருளிய நூல்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம். உரைநடை நூல்கள், செய்யுள் நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள். இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல, செந்தமிழ் இதழ்களில் வெளிவந்துள்ளன. இவர் பதிப்பித்துள்ள நூல்களும் பலவாகும்.

## உரைநடை நூல்கள்

1. சேதுநாடும் தமிழும்
2. வஞ்சிமாநகர்
3. நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்
4. அண்டகோள மெய்ப்பொருள்
5. தமிழ் வரலாறு
6. தித்தன்
7. கோசர்

## உரை நூல்கள்

8. ஆத்திசூடி உரை
9. திருப்புல்லையமகவந்தாதி (உரையுடன்). அச்சில் வரவில்லை

## செய்யுள் நூல்கள்

1. புவி எழுபது
2. தொழில் சிறப்பு
3. திருவடிமாலை
4. நன்றியில் திரு
5. பாரி காதை
6. இராசராசேசுவர சேதுபதி ஒரு துறைக்கோவை

## அச்சிடப்படாத செய்யுள் நூல்கள்

1. பகவத்கீதை தாழிசை
2. பாரத நீதி வெண்பா
3. காவல் தலைமை
4. கடவுள் மாலை
5. திருவேங்கட மாயோன் மாலை

## மொழிபெயர்ப்பு நூல்கள்

1. அபிஜ்ஞான சாகுந்தலம்
2. பகவத் கீதை
3. பல்லட சதகம்

பல்லட சதகம் இவரால் மொழி பெயர்த்து அமைக்கப்பட்ட பாடல் நூலே. ஆனால் இதில் பாதி அளவே மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மேலும் இவர் தாழிசை யாப்பில் வால்மீகி இராமாயணத்தில் சில பகுதிகளையும், இரகுவம்சத்தில் சில சருக்கங்களையும் மொழிபெயர்த்துள்ளார். அவை அச்சில் வெளிவந்துவிட்டனவா, இல்லையா எனத் தெரியவில்லை.

## பதிப்பித்த நூல்கள்

இவற்றை நான்கு வகையாகப் பாகுபடுத்தலாம்.

1. சங்க நூல்கள் 4

அகநானூறு
குறுந்தொகை விளக்கம்
பெரும்பாணாற்றுப்படை
பட்டினப்பாலை

2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் 4

இனியவை நாற்பது
ஐந்திணை ஐம்பது
திணைமாலை நூற்றைம்பது
நான்மணிக்கடிகை

3. இலக்கண நூல்கள் 3

நேமிநாதம் மூலமும் உரையும்
பன்னிருபாட்டியல்
தொல்காப்பியம் - செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை

இவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல செந்தமிழ் இதழ்களில் வெளிவந்துள்ளன. இட எல்லை கருதி அவை இங்குப் பட்டியலிடப்படவில்லை.

## உரைநடை நூல்கள்

ரா. ராகவையங்காரின் பரந்த புலமையையும், நுண்ணறிவையும், ஆராய்ச்சி உணர்வையும், கடுமையான உழைப்பையும் புரிந்து கொள்ள அவருடைய நூல்கள் பற்றி ஒரு சிறிது நாம் அறிந்து கொள்வது நன்மை பயக்கும்.

## சேதுநாடும் தமிழும்

இந்நூல் சேதுநாட்டின் பெருமையை உலகறியச் செய்வதாகும். சைவ சமயாசாரியர்களுள் ஒருவரான திருவாதவூரடிகளுக்கு இறைவன் குருந்தமரத்தடியில் குருவாக வந்து சிவஞானம் அருளிய திருப்பெருந்துறை இச்சேதுநாட்டிலுள்ளது.

சைவ மெய்ஞ்ஞானி தாயுமானவர் நெடுநாள் தங்கி சமாதி அடைந்தருளிய முகவையும், தூய ஞானமுடைய வைஷ்ணவாசிரியரான

மணவாளமாமுனிவர் வளர்ந்து சிறந்த சிக்கற்கடாரமும் தன்பாற் கொண்டு விளங்குவது சேதுநாடு.

இனிப் பழைய சங்கப் புலவர்களுள்ளும் இச்சேதுநாட்டே பிறந்தார் பலருண்டென்பது அவரவர் ஊரால் உணரப்படுவது. நல்லந்தையார் என்பார் நற்றிணை 211ஆம் பாட்டுப் பாடியவர். இவருடைய ஊர் கோட்டியூர். இது சிவகங்கையைச் சார்ந்த பெரிய திவ்ய ஸ்தலம். அள்ளூர் நன்முல்லையார் குறுந்தொகை 32ஆம் பாட்டும், நெடுந்தொகை 46ஆம் பாட்டும் பாடியவர். இவருடைய அள்ளூர் சேதுநாட்டுச் சிவகங்கையைச் சார்ந்துள்ளது. வெள்ளைக்குடி நாகனார் நற்றிணை 158ஆம் பாடலைப் பாடியவர். இவரூர் சேதுநாட்டுத் திருவேகன்பற்றுச்சேகரத்திலுள்ளது. ஒக்கூர் மாசாத்தியார் பாடியன குறுந்தொகையிலும், நெடுந்தொகையிலும் பல பாடல்கள் உள்ளன. ஒக்கூர் மேற்காட்டிய கோட்டியூர்ப் பக்கத்தில் உள்ளது. பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாகிய கைந்நிலை பாடியவர் புல்லங்காடர் எனப்படுவார். புல்லங்காடு என்பது திருப்புல்லாணியேயாகும். இவை ராகவையங்காருக்குச் சங்க நூல்களிலுள்ள பயிற்சியையும், புலமையையும் தெற்றெனக் காட்டுகின்றன அல்லவா?

முகம்மதிய மதத்தினரெல்லாம் உச்சிமேற்கொண்டு போற்றும் நபிநயனார் சரிதமாகிய சீறாப்புராணத்தைப் பாடிய உமறுப்புலவர் இச்சேதுநாட்டுக் கீழைக்கரையைச் சேர்ந்தவர்.

தமிழில் மிகச் சிறந்த நூல்களான தொல்காப்பியம், திருக்குறள் இரண்டினையும் முதற்கண் உலகிற்கு அச்சிடத் தொடங்கின இருவரும் இச்சேது நாட்டவரே. இவ்வாறு இவர் இந்நூலில் சேதுநாட்டின் சிறப்பையும், சேதுவேந்தரால் வரிசை பல பெற்று வாழ்ந்த செந்தமிழ் அறிஞர்கள் பலரை எடுத்துக்காட்டிச் சேது மன்னர்களின் வள்ளல் தன்மையையும் உலகிற்கு உணர்த்துகின்றார்.

இவர் சில நூல்கட்கு உரை எழுதியுள்ளார். மேலும் இவர் உரைக்கு உரை எழுதுவதிலும் வல்லவர். ஓர் எடுத்துக்காட்டுக் காண்போம்.

### பரிமேலழகர் உரை விளக்கம்

திருக்குறளுக்குப் பல உரைகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் பரிமேலழகர் உரைக்கு உரையாக ஆழ்வார் திருநகரித் திருமேனி இரத்தினகவிராயர் 'நுண்பொருள் மாலை' இயற்றினார். இது

வடமொழியில் 'டீகை" என்பது போல் உரைக்கு உரையாய் வருவது. இவ்விருவர் உரைகளையும் இணைத்து ராகவையங்கார் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பாடல்கட்கு 'உரைத்தேற்றம்' என்று விளக்கம் கூறுவது, இவருடைய விளக்கவுரையின் மேன்மையை உலகோர்க்கு நன்கு உணர்த்தும். எடுத்துக்காட்டாக,

"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" (5)

என்ற குறளுக்கு, "இருவினை என்பது நல்வினை, தீவினை என்பதை அனைவரும் அறிவர். நல்வினையும் பிறத்தற்கேதுவாகும் என்பர். இக்காலத்திலும் சிலர் இதனால் மயக்கம் கொண்டு அப்படியானால் நல்வினை செய்தல் கூடாதா என வினா எழுப்புவதை நாம் காண்கின்றோம். இவர் தரும் விளக்கம் அம்மயக்கத்தைப் போக்கும். நல்வினை என்றது இருள்சேர் நல்வினையை. அவை வீடுபேறு கருதாது சுவர்க்கம் விழைந்து செய்யும் சோதிட்டோமம், வேட்டல் முதலியன. பிறனில் விழைதல் முதலியன இருள்சேர் தீவினையாம். இருள்சேர் இருவினை உளவாகா என்றதால் இருள்சேரா இருவினையும் உளவாகும் என்பது பெறப்படும். இருள் சேரா வினை - வீடு பேறு பயக்கும் வினை. வாலறிவன் நற்றாள் தொழுதல் முதலிய இருள்சேரா நல்வினை. மங்கையர்கோன் பிறர்பொருள் கவர்ந்து இறைவனின் அடியாரை ஓம்பியமை, சண்டேசுரர் தன்தாதை தாளற எறிந்தமை முதலியன இருள்சேராத் தீவினை. வீடுபேறு பயக்கும் வினையே நிகழ்த்துதலால் பிற வினைகள் சேராவாயின" என்கின்றார். என்னே இவரது உரைத்தெளிவு!

## வஞ்சி மாநகரம் – ஆராய்ச்சி நூல்

இந்நூல் இவருடைய ஆராய்ச்சி உணர்வை வெளிப்படுத்தும். அந்நாளில் சேரர் தலைநகரமாகிய வஞ்சிமாநகரைப் பற்றிப் புலவர்களிடையே கருத்து வேற்றுமை இருந்தது. சிலர் கொங்கு நாட்டுக் கருவூரே வஞ்சி என்றும், வேறு சிலர் மேலைக் கடற்கரை யிலுள்ள கொடுங்கோளூரே வஞ்சி என்றும் கூறினர். இது குறித்த வாதப் பிரதிவாதங்கள் பத்திரிகை வாயிலாகவும், புத்தக வாயிலாகவும் அந்நாளில் வெளிவந்தன. அப்பொழுது இராஜராஜேசுவர சேதுபதி தம் சமஸ்தான வித்துவானாகிய இவருடைய கருத்தை எழுதியுதவப் பல முறை தூண்டியதால் இவர் இந்த ஆராய்ச்சி நூலை எழுதினார்.

இவர் சேரர் தலைநகராகிய வஞ்சிமாநகரம் கொங்கு நாட்டில் விளங்கும் கருவூரே என்று ஆராய்ந்து முடிவு கண்டார். ஆராய்ச்சி முறையில் இவர் சென்ற சீரிய நெறிகளை அறிவதற்கு இந்நூல்

பெரிதும் துணையாகும். இந்நூலில் இவர் எடுத்துரைத்த உண்மைகளையும், வாதங்களின் திட்ப நுட்பங்களையும் கண்ட சேதுபதி "நீங்கள் தமிழ்ப் புலவராயில்லாமல், வழக்கறிஞராகப் பெருஞ்சிறப்புப் பெற்றிருக்க வேண்டியவர்" என உளமகிழ்ந்து புகழ்ந்து பாராட்டினாராம்.

## தித்தன், கோசர் ஆராய்ச்சி நூல்கள்

இவ்விரு நூல்களும் இவர் ஓர் ஆராய்ச்சியாளர் என்பதைப் புலப்படுத்தும்.

"கோசர் துளுநாடு" (அகம். 15)

"கொங்கிளங்கோசர்" (சிலம்பு, உரைபெறு கட்டுரை)

இவற்றை மேற்கோள் காட்டிக் கோசர் ஆதியில் வசித்த இடங்கள் கொங்குநாடு, துளுவநாடு எனக் கொள்ளல் பொருந்தும் என்கின்றார் (கோசர், ப. 4).

"நான்மொழிக் கோசர் தோன்றியன்ன" (மதுரைக் காஞ்சி 509)

என்பதற்கு நச்சினார்க்கினியர் "நான்கு வகையான கோசர் வஞ்சின மொழியாலே விளங்கினாற் போன்று" என உரைத்தார். இவர் நாற்கோசர் மொழித்தோன்றியாங்கு எனச் சிதைத்துக் கூட்டாது உள்ளபடியே கொண்டு பொருள் உரைக்கின்றார். நான்மொழிநாடு என்பது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் என்ற திராவிட மொழிகள் நான்கும் ஒருங்கே வழங்கப் பெற்ற சேலம் ஜில்லா நாமக்கல் சீமையைச் சுட்டும். நான்மொழி நாடென ஒன்று உண்டு என்பது "திருவறைக்கல்லும் நான்மொழி நாடும் உடைய பத்தராயனான வடுகநாதன் (Topographical list of South India Inscription No 213 - 11 of 1906) என்ற சாசனத்தால் அறியலாம் என்று கூறுவது இவரது கல்வெட்டு ஆராய்ச்சியை உணர்த்தும்.

"நன்றல் காலையு நட்பிற் கோடார்" (அகம், 113) என்பதை மேற்கோள் காட்டி நன்றல்லாத காலத்தும் தம்முடைய நட்பிற் கோடாதவர் கோசர் என்றும்,

"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற்கோசர்" (அகம், 15)

"வாய்மொழி நிலைஇய சேண் விளங்கு நல்விசை
வளங்கெழு கோசர்" (அகம், 205)

என்றும் மொழிவதனால் வாய்மையை விடாது போற்றிப் புகழ் படைப்பவர்கள் கோசர் என்று அவர்களின் பண்புகளைச் சான்றுகளுடன் ஆராய்ந்து கூறுகின்றார்.

கோசன்புத்தூரே கோயம்புத்தூர் எனத் திரிந்தது என ஆராய்ந்து கூறுகின்றார்.

"கம்பரின் காலம்" குறித்த இவரது ஆராய்ச்சிக் கட்டுரை வரலாற்றாய்வாளர்கட்கு ஒரு வரப்பிரசாதம்.

"கூத்தரும் குலோத்துங்கன் கோவையும்" என்ற இவரது ஆராய்ச்சிக் கட்டுரையில் இவர் கூத்தர் உலாப் பெற்ற குலோத்துங்கனும், கோவை பாட்டுடைத் தலைவனான குலோத்துங்கனும் வேறு வேறு என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"திருத்தக்கத்தேவரும் கம்பரும்" என இருபெரும் புலவர்களின் புலமைத் திறத்திலுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை இவர் ஆராய்ந்து சான்றுகளுடன் காட்டியிருப்பது இவரது ஒப்பியல் ஆய்வைப் புலப்படுத்தும்.

## நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்

செந்தமிழ்ப் பத்திரிகாசிரியராயிருந்த போது சங்ககாலத்தில் அறிவு வளர்ச்சியில் சிறந்து விளங்கிய பெண்பாலர் பலரைக் குறித்து இவர் எழுதி வந்த தொடரே, பின்னாளில் தமிழறிஞர் சிலரின் வேண்டுகோளுக்கு இணங்கப் புத்தக வடிவம் பெற்றது (1933). இந்நூல் சங்கநூல்களின் சான்றுகள் கொண்டு ஆதிமந்தியார் முதல் பூங்கணுத்திரையார் ஈறாக 25 பெண்பாலாரின் வரலாறுகளை எடுத்துரைக்கின்றது. பெண்கல்வி மிகுந்திராத இவர் காலத்தில், பண்டைப் பெண்பால் புலவர்களின் பெருமித வாழ்க்கையை இவர் எடுத்துக்காட்டியது, பெண் கல்வியிலும், அவர்கள் உயர்விலும் இவருக்குள்ள விருப்பத்தை உணர்த்துகின்றது.

## அண்டகோள மெய்ப்பொருள்

நம்மாழ்வார், தாம் வாழ்ந்த காலத்தில் மதுரையில் விளங்கிய சங்கப்புலவர் குழுவிற்கு எழுதி விடுத்த திருப்பாசுரம் "அண்டகோளத் தாரணுவாகி" என்று தொடங்கும். இது 17 அடிகள் கொண்ட ஓர் அகவற்பா. இப்பாடலுக்கு ராகவையங்கார் 40 பக்கங்களில் விளக்கவுரை எழுதியுள்ளார். பாடலின் ஒவ்வோர் அடியையும் எடுத்துக்கொண்டு சொற்பொருள்களை நுட்பமாக ஆராய்ந்து தென்மொழி, வடமொழி மேற்கோள் காட்டி விளக்கியுள்ள திறம் மிகவும் போற்றுதற்குரியது. இவரின் உரை பெரியவாச்சான் பிள்ளை, நம்பிள்ளை முதலிய பூர்வாசிரியர்கள் திவ்வியப் பிரபந்த பாசுரங்கட்கு அருளிய உரைக்கு ஒத்த சிறப்புடையது. புதிர்போல் காணப்பட்ட இப்பாடலின் சொற்றொடர்களில் பொதிந்துள்ள மெய்ப்பொருள்

கருத்துகளை இவர் தம் உரையால் உலகிற்கு உணர்த்தினார். இந்நூல் இவரின் ஆழ்ந்தகன்ற நுண்ணிய மெய்ப்பொருள் கல்விப் புலமையை உணர்த்தும்.

## தமிழ் வரலாறு

தமிழ் வரலாற்றின் முதல் தொகுதியாக அகத்தியம், தொல்காப்பியம் இவற்றின் வரலாறுகளை விரிவாக ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். தமிழ்மொழியின் தனிச்சிறப்பினை முதற்கண் விளக்கித் தமிழ்நாடு, பண்டு நிகழ்ந்த கடல்கோள், தமிழ்ச்சங்கம் முதலியவற்றைத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழர் யார், எத்தகையவர், அவர் தம் கொள்கைகள் யாவை என்பதை விளக்கியுள்ளார். இந்நூலில் இவர் ஆராய்ந்து கூறியுள்ள வரலாற்றுச் செய்திகள் பல, படிப்போரை வியப்பில் ஆழ்த்தும்.

## செய்யுள் நூல்கள்

செய்யுள் இயற்றுவது கலைமகள் கடாட்சத்தால் இவருக்கு இயல்பாகவே அமைந்தது. ஆசுகவி பாடும் ஆற்றல் மிக்கவர்.

## புவி எழுபது

கம்பர் ஏரெழுபது பாடினாற்போல, ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபது பாடினாற்போல, இவர் புவி எழுபது பாடியுள்ளார். இந்நூல் 1927இல் தமிழர் கல்விச் சங்கப் பிரசுரமாக வெளிவந்தது. இந்நூலில் இவர் பூமியின் இயற்கைத் தன்மையையும், தெய்வீகத் தன்மையையும் புராண வரலாறுகளைக் கொண்டும், தம் நுண்ணிய அறிவாலும், கற்பனை வளத்தாலும் பலவாறு புகழ்ந்துரைத்துள்ளார். இச்செய்யுள் நூலில் திருக்குறள் கருத்துகள் பல காணப்படுகின்றன. இவர் திருக்குறளை ஆழமாகப் பயின்றவர் என்பது இதனால் புலனாகும். இவர் திருக்குறள் வரலாறு, திருவள்ளுவர் சிறப்பு, திருக்குறள் பழைய உரை, திருக்குறள் பரிமேலழகர் உரைப்பாயிர விளக்கம், திருக்குறள் பரிமேலழகருரை பழைய ஏடுகளில் கண்ட பாட பேதங்கள் திருத்தங்கள் முதலியன, என்ற தலைப்புகளில் செந்தமிழ் இதழ்களில் இவர் எழுதியுள்ள கட்டுரைகளே திருக்குறளில் இவருக்குள்ள நுண்மாண் நுழைபுலத்தை உணர்த்தும்.

## தொழில் சிறப்பு

> "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
> வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று பாடினார் பாரதி (சுதந்திரப்பள்ளு).

"செய்யும் தொழிலே தெய்வம்
அதில் திறமைதான் நமது செல்வம்"

என்று பாடினார் மற்றொரு கவிஞர். ரா. ராகவையங்கார் பாடிய தொழிற்சிறப்பு என்னும் நூல் கலைமகள் பத்திரிகையில் முதல் தொகுதியில் மூன்று பகுதியாய் வெளிவந்துள்ளது. இந்நூல் தொழிலின் சிறப்பை 100 பாடல்களில் போற்றுகிறது.

இந்தியா கிராமங்களால் ஆனது; கிராம முன்னேற்றமே இந்தியாவின் முன்னேற்றம் என்றார் காந்தியடிகள். தொழில் சிறப்பு என்னும் செய்யுள் நூலிலுள்ள

"ஏராலே உலகூட்டி இயலுழவர் சிற்றூரை
நீராலும் விளக்காலும் நெறியாலும் திருத்தி மதிச்
சீராலும் கல்லூரிச் சிறப்பாலும் அறிவூட்டி
ஓரால மரக்கிளைகட்கு ஒப்பாக ஒன்றுவீரே" (செய்யுள், 58)

என்னும் பாடல் சிற்றூரும், மக்களும் எவ்வாறு திகழ வேண்டும் எனக் கிராம முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

## திருவடிமாலை

திருமாலின் கருணைத் திறத்தைப் பலபடியாகப் போற்றித் தம்மை ஆட்கொண்டருள வேண்டி, முறையிடும் வகையில் 109 பாடல்கள் கொண்டது இந்நூல். இவை பக்திச்சுவை மிக்கவை. திருவடிமாலையோடு சீராமனின் திருநாமப்பெருமை பேசும் பதிகம் ஒன்றும் காணப்படுகின்றது.

## நன்றியில் திரு

வள்ளுவர் 'நன்றியில் செல்வம்' என்னும் அதிகாரம் வகுத்துள்ளது போல, ராகவையங்கார் "நன்றியில் திரு" என்னும் தலைப்பில் அகவற்பாடல்கள் யாத்துள்ளார். "செல்வத்தின் பயன் ஈதல்" எனப் புறநானூறு கூறுகின்றது. ஈதலின் பயன் புகழ் என்கின்றார் இவர்.

## பாரிகாதை

பண்டைய வள்ளல்களுள் சிறந்து விளங்கியவன் பறம்புமலைக் கோமானாகிய பாரி. சங்கப்பாடல்களில் இவ்வள்ளலைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் பல உள. பாரி காதையைப் பதினான்கு திறமாகப் பகுத்து 753 வெண்பாக்களால் இவர் பாடியுள்ளார். இந்நூலிலுள்ள ஒவ்வொரு காதையும் எவ்வாறு

தம்மால் அமைக்கப்பட்டுப் பாடப்பட்டன என்று முகவுரையில் இவர் விளக்கியுள்ளது இந்நூலைப் படித்து இன்புற வேண்டும் என்னும் ஆர்வத்தை எழுப்பும். இந்நூல் கற்பனைச் சிறப்பும், செவிக்கினிய செப்பலோசையும், சிந்தைக்கினிய பொருளாழமும் கொண்டது. இந்நூலின் சில பகுதிகள் பி.ஏ, எம்.ஏ., வகுப்புகளுக்குப் பாடமாக இருந்தன.

## இன்கவித்திரட்டு

சேது, திருப்புல்லாணி, திருப்பதி கடவுள்களைப் புகழ்ந்து பாடிய பாடல்களாகும். இவை இவருடைய பக்தி உணர்வைப் புலப்படுத்தும்.

## இராசராசேசுவர சேதுபதி ஒரு துறைக்கோவை

சேதுபதியைப் புகழும் 400 பாடல்கள் கொண்டது. தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்துள்ளது.

## தனிப்பாடல்கள்

உள்ளத்து உணர்ச்சியை வெளிப்படுத்துவது கவிதை என்பர். ராகவையங்காரும் தம் வாழ்நாளில் உணர்ச்சிக் கொந்தளிப்புடன் அவ்வப்போது பாடிய தனிப்பாடல்கள் பல உள.

இவரை ஆதரித்துச் சிறப்புச் செய்த, கல்வியும் செல்வமும் நிரம்பிக் கற்பகத் தருவாய் விளங்கிய பாஸ்கர சேதுபதி மறைந்த போது இவர் பாடிய,

> "என்னின் எனக்கினியன் இன்பாற் கரசேது
> மன்னன் இறந்த வகையானே – இன்னே
> ஒளியில் மணியானேன் ஊழில் செயலானேன்
> களிறில் வெளியானேன் காண்"

> "கேட்போரும் கேட்கக் கிளக்கும் வாய் எங்கேயோ
> வேளாரும் வேட்ப மிகு நிதியம் – தாளாரு
> மன்னர்க்கும் யார்க்கும் வழங்கு கரம்எங்கேயோ
> கன்னற்கு நேர் பாற்கர"

என்ற பாடல்கள் மன்னரின் பிரிவால் இவரடைந்துள்ள சோக உணர்ச்சியைப் படம்பிடித்துக் காட்டுகின்றன அல்லவா? "என்னினும் இனியான் ஒருவன் உளன்" (5:21:1) என்று நாவுக்கரசர் சிவனைப் போற்றுவது போல, ராகவையங்கார் "என்னின் எனக்கினியன்" என்று பாஸ்கர சேதுபதியைப் போற்றுகின்றார்.

1910ஆம் ஆண்டு நடைபெற்ற நவராத்திரி விழாவின் போது இராசராசேசுவர சேதுபதி இவருக்குப் பொன்மணிக் கடகம் அணிவித்த போது மகிழ்வுடன் சேதுபதியின் வீரத்தையும், கொடையையும் பாராட்டிப் பாடினார். ஸ்ரீசண்முக ராசராசேசுவர நாத சேதுபதி அவர்களின் பிறந்த நாளாகிய வெள்ளணி நாளில் வாழ்த்துப் பாடல்கள் பாடியுள்ளார். செட்டிநாட்டரசர் அண்ணாமலை மன்னரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது அவரின் கொடைவளத்தையும், ஆளும் பெரும் செயல்களையும் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது பாடல்கள் பாடி அவரைப் போற்றியுள்ளார்.

## குழந்தைப் பாடல்கள்

இவர் குழந்தைப் பாடல்களும் சில பாடியுள்ளார். அடியேனின் சிறுவயதில் தாய்மார்கள் பலர் தளர்நடைப் பருவத்திலுள்ள தங்கள் குழந்தைகளை நிற்க வைத்து,

"சங்குச் சக்கரச் சாமி வந்து சிங்கு சிங்கென ஆடுமாம்"

என்று பாடிக் குழந்தைகளைத் தாலாட்டுவதைக் கண்கூடாகக் கண்டுள்ளேன். அப்பாடல் இவர் பாடியதே.

## மொழிபெயர்ப்பு நூல்கள்

இவருடைய மொழிபெயர்ப்பு நூல்களைப் பற்றி முன்பே இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை இவருடைய வடமொழிப் புலமைக்குச் சான்றுகளாகும்.

## சொற்பொழிவுகள்

ரா. ராகவையங்கார் எழுதும் திறமையோடு, சபையோரைக் கவரும் வண்ணம் பேசும் நாவன்மை மிக்க சிறந்த சொற்பொழிவாளரும் ஆவார். இவர் திருநெல்வேலித் தமிழ்ச் சங்கம், மேலைச் சிவபுரி சன்மார்க்க சங்கம், கரந்தைத் தமிழ்ச் சங்கம், மயிலாப்பூர் சமஸ்கிருத சமிதி முதலியவற்றில் தலைமை வகித்தும், பேச்சாளராய்க் கலந்து கொண்டும் ஆற்றிய சொற்பொழிவுகள் பல. சில கல்லூரிகளிலும், சென்னை, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களிலும் இவர் பலமுறை உரையாற்றியுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1927இல் கம்பராமாயணம் பற்றி நான்கு சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இப்பல்கலைக்கழகத்தில் 1933இல் சங்க நூல்கள், பண்டைத் தமிழகக் கலைகள், தமிழரின் குடும்ப வாழ்க்கை, தமிழரின் நீதிக் கோட்பாடு

பற்றியும், 1936இல் சங்க நூல்களில் காணப்படும் போர்முறை பற்றியும் சொற்பொழிவாற்றியுள்ளார்.

இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றச் செல்லுமுன்பே அங்கு, தமிழ்நாட்டு மூவேந்தர், பிற மொழியோடு தமிழ், தமிழ் மரபும் அரச பாரம்பரியமும், முற்காலக் கல்விமுறை, போதாயனரும் வள்ளுவரும், தமிழ்மொழியில் கவிதா விலாசம் என்னும் தலைப்புகளில் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார்.

மயிலாப்பூர் சமஸ்கிருத சமிதியில் 1936இல் நடைபெற்ற வான்மீகி திருநாளில் வான்மீகியின் பெருமை பற்றியும், காளிதாஸர் திருநாளில் சாகுந்தலத்தின் உயர்வு குறித்தும் இவர் சொற்பொழிவு ஆற்றியுள்ளார்.

மன்னார்குடி வித்வத் சபையில் ஆண்டுதோறும் கலந்து கொண்டு சமயப் பேருரைகள் ஆற்றி வந்துள்ளார். இஸ்லாமியப் பெருமக்கள் நிறைந்த, இராமநாதபுரத்தை அடுத்துள்ள கீழக்கரை என்னும் ஊரில் இஸ்லாமியக் கொள்கைகள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். 1933இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் சமயங்களும் கடவுளரும் என்னும் பொருள் குறித்தும், 1935இல் புத்த, சமண இலக்கியங்கள் குறித்தும் சொற்பொழிவாற்றியுள்ளார். இச்சொற்பொழிவுகள் இவரது சமய நூலறிவினைத் தெற்றெனக் காட்டும்.

## சமய நூற்புலமை

இவர் வேதங்கள், உபநிடதங்கள், பிரம்ம சூத்திர பாடியங்கள், இராமாயணம், கீதை, பாகவதம், மகாபாரதம், நாலாயிரத் திவ்விய பிரபந்தங்கள், பன்னிரு திருமுறைகள், சைவசித்தாந்த நூல்கள், சமண, பௌத்த சமய நூல்கள், திருக்குர்ஆன், பைபிள் முதலியவற்றை விரும்பிப் படிப்பார் என்று இவரது மகன் கூறியது இவரது சமய நூல் புலமையைப் புலப்படுத்தும்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நடைபெற்ற சர்வமத மாநாட்டில் கலந்து கொண்டு, தாயகம் திரும்பிய போது, இராமநாதபுரத்தில் தங்கியிருந்த காலத்தில் சுவாமியும், இவரும் சமய சம்பந்தமான சில செய்திகளை விவாதித்ததும் உண்டு.

இவர் எப்பொருள் பற்றியும் சுவைபட, விரிவாகச் சொற்பொழிவாற்றும் வல்லமையுடையவர். "நூலாசிரியர்களின் ஆழ்ந்த எண்ணங்களை எளிதிலறிந்து மிக்க சுவைபடப் பேசும்

திறமையில் இவரைப் போல் காண்டல் அரிது" என்று பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் இவரைப் பாராட்டியுள்ளார்.

### பண்புநலன்கள்

வாழ்க்கை வரலாறு என்பது எப்படி வாழ வேண்டும் என்பதைப் பிறருக்கு அறிவுறுத்துவதாய் அமைய வேண்டும். எனவே அவருடைய பண்பு நலன்களை எடுத்துரைக்காவிடில் இவருடைய வாழ்க்கை வரலாறு முழுமையாகாது. எனவே இவரது பண்புநலன்கள் சிலவற்றை இங்குக் காண்போம். இவர்,

> **"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்**
> **செந்தண்மை பூண்டு ஒழுகலான்" (30)**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப எல்லா உயிர்களிடத்தும் அருளுடையவர். எல்லோரிடமும் அன்புடன் கலந்து உறவாடும் பண்பாளர்.

> **"அடக்கம் அமரருள் உய்க்கும்" (121)**

> **"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்**
> **செல்வர்க்கே செல்வம் தகைத்து" (125)**

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப அடக்கமும், பணிவும் அமையப் பெற்றவர். மாணவர்கள் பக்தியுடன் மதித்துப் போற்றும் பேராசான். கருத்து வேற்றுமைக்கு மதிப்புக் கொடுத்து அவற்றை வரவேற்கும் பரந்த உள்ளம் படைத்தவர். மாணாக்கர்களின் சிறந்த கருத்திற்கு மகிழ்ச்சியுற்றுப் பாராட்டும் பெருந்தன்மையாளர். மற்றைப் புலவர்களின் நூல் நயங்களைக் கேட்டு இன்புற்றுப் பாராட்டும் பண்புடையவர்.

### பிறருக்கு உதவும் பெருந்தகையாளர்

இவர் அகநானூறு பற்றி ஆராய்ச்சி செய்ய விரும்பி பாண்டித்துரைத் தேவரின் முகவை அரண்மனைப் புத்தகசாலை யிலிருந்து தாம் பெற்றுப் பிரதி செய்த அகநானூற்றுப் பிரதியோடு, பல இடங்களில் அலைந்து அரிதில் தேடித் தொகுத்த ஆழ்வார் திருநகரிப் பிரதி, பெரும் பழமைப் பிரதி, நெல்லையப்பக் கவிராயர் பிரதி முதலியவற்றை ஒப்பு நோக்கித் திருத்தம் செய்து எழுதி வந்தார். பின் அச்சிடத் தொடங்கிய சிறிது காலத்தில் இவருக்கு ஏற்பட்ட நோயாலும், வேறு சில இடையூறுகளாலும் அதனைத் தொடர்ந்து முடிக்க இயலவில்லை. பின்னர் 1920இல் சென்னைக் கம்பர் விலாசம் வே. ராஜகோபாலையங்கார் அகநானூற்றை வெளியிட விரும்பி

முன்வந்தபோது, இவர் தம்மிடமுள்ள குறிப்புக்களனைத்தையும் அன்போடு அவருக்குக் கொடுத்து உதவினார்.

இதுபோலத் தமிழாசிரியர் இ.வை. அனந்தராமையர் கைந்நிலை பதிப்பிக்க விரும்பியபோது தம்மிடமுள்ள பிரதியை அவருக்குக் கொடுத்து உதவினார். இவ்வாறே இளம்பூரணர் செய்யுளியல் உரைப் பிரதியையும், நவநீதப்பாட்டியல் உரையையும் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கட்குக் கொடுத்து உதவினார். தாம் அரிதில் தொகுத்து வைத்திருந்த ஏட்டுச் சுவடிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குக் கொடையாகக் கொடுத்து விட்டார். பிறர் முயற்சியைப் பாராட்டி முகவுரை எழுதி உதவியுள்ளார்.

## செய்ந்நன்றி மறவாதவர்

இவர் தமக்கு உதவியர்களை எல்லாம் மறவாது நன்றியுடன் பாராட்டும் பண்பினர். தொல்காப்பியச் செய்யுளியல் உரைப் பதிப்பின் முகவுரையின் ஈற்றுப் பகுதியில், "ராசராசேசுவர சேதுபதி அவர்களின் தூண்டுதலினால் இந்நூல் வெளிவந்ததாதலால் அவர்கட்கு என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையேன். இச்செய்யுளியலுரைப் பிரதிகளை அன்புடனுதவிய நல்லோர் பெருந்தகைமை என்னால் எஞ்ஞான்றும் மறக்கற்பாலதன்று. செந்தமிழ்ச் செல்வர் சேதுவேந்தரும், அவரார்தரிக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கமும் நீடூழி வாழ இறைவன் அருள் புரிக" என்று கூறியுள்ளது இவரது நன்றி பாராட்டும் பண்பினைக் காட்டும்.

சேதுபதிகளின் அன்னமே தம்மைத் தமிழ்ப் புலவராக்கியது எனப் பல இடங்களில் நன்றியுடன் இவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்லிசைப் புலமை மெல்லியலார்கள் நூலை அச்சிட்டு உதவிய கா. நமச்சிவாய முதலியாருக்கு நன்றி தெரிவித்து, "அவர்கள் நெடுங்காலம் இனிது வாழ உள்ளுவதல்லது அவர்கள் கொள்ள நல்குவதோர் கைம்மாறு காண்கிலேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

சாகுந்தல மொழிபெயர்ப்பு வி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் அவர்களின் பொருளுதவியால் பதிப்பிக்கப்பட்டபோது நன்றியுணர்வுடன் அவரைப் பாராட்டியுள்ளார்.

## சமய சமரச நோக்கு

இவர் பல சமய நூல்களை விரும்பிப் படித்ததும், சமயக் கொள்கைகள் பற்றி விரிவாக ஆற்றிய சொற்பொழிவுகளும் இவர் சமய சமரச நோக்குடையவர் என்பதைப் புலப்படுத்தும்.

## அஞ்சாமையும், அயரா உழைப்பும்

வாழ்க்கையில் தூங்காமை, துணிவு, உழைப்பு முதலிய பண்புகளின் இன்றியமையாமையைப் பிறருக்கு எடுத்துரைத்த இவர் தாமும் அதைப் பின்பற்றி ஒழுகினார். தொழில் சிறப்பு என்னும் நூல் இயற்றிய இவர் பிற வேலையாள் உதவியின்றித் தம் வீட்டிற்குச் செய்ய வேண்டிய சிறிய கொத்துவேலை, தச்சுவேலை முதலியவற்றைத் தாமே செய்து முடிப்பார்.

## மனவலிவும், அறிவாற்றலும்

தாம் உண்மையென்று கண்டதை அஞ்சாது கூறி நிலைநாட்டும் மனவலிமையும், அறிவாற்றலும் அமையப் பெற்றவர். இவர் அருளிய ஆராய்ச்சி உரைகள் அனைத்தும் இதற்குத் தக்க ஒரு எடுத்துக்காட்டு காணலாம். ஒன்றோடொன்று ஒவ்வாப் பல்சமய நெறிகளை விடுத்துப் பெரும்பான்மையும் எல்லார்க்கும் ஒப்பதோர் ஒழுக்கநூல் ஓதினமையால் பன்மதத்தவரும் தெய்வப்புலமைத் திருவள்ளுவரைத் தத்தம் கொள்கையினராகக் கருதுவர். இவரைச் சைனர் என்பர் சிலர். சைனராவர் உலகம் ஒருவனால் இயற்றப் பட்டதன்று என்பாரன்றே? இதனை "மூவாமுதலா உலகம் ஒரு மூன்றும்" என்னும் சிந்தாமணியால் உணர்க. இக்கொள்கை, 'உலகை இயற்றினோன் ஒருவன் உண்டு' எனக் கொண்ட தெய்வப் புலவர் திருக்கருத்தோடு மலைதல் காண்க.

> "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
> கெடுக உலகு இயற்றியான்" (குறள். 1062)

என்றார் வள்ளுவர்.

இனி வள்ளுவர் பௌத்தருமாகார் என்பதைப் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார். திருவள்ளுவர் வேதம், கடவுள், உயிர் பூதமைந்து, புலான் மறுத்தல், தவம் முதலியன கோடலாற் பௌத்தருமாகார். "பூதமைந்து அகத்தே நகும்" என்பதனால் வள்ளுவர் ஐந்து பூதம் கொண்டமை காண்க. பௌத்தர் நான்கு பூதமே கொள்வர்.

> "ஊன்றின்ன விழுக்கென்கென்னா னுயிரினையு முளதென்னா,
> நோன்றலையு நோன்பென்றா னோக்குடைய கணிகையரே
> போன்றிருந்து பொதியறுக்கும் புத்தன்"
>
> (நீலகேசி, குண்டலகேசி வாத சருக்கம், 14)

என்பதனால் ஆன்மா, புலான்மறுத்தல், தவம் முதலாயின பௌத்தர்க்குக் கொள்கையல்லவாதல் கண்டு கொள்க.

மேற்கூறியவாற்றால், தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் வேதவழக்கொடு பட்ட கொள்கையினராவர் என்பது எளிதில் உணரற்பாற்று என இவர் வலியுறுத்துகிறார்.

## முக்தி

இத்தகைய பண்புநலன்கள் நிரம்பப்பெற்றுத் தன் ஆயுட்காலம் முழுவதும் அயராது தமிழைக் கற்றும், கற்பித்தும், பல அரிய நூல்களையும், ஆராய்ச்சி உரைகளையும் அருளிப் பெருந்தொண்டாற்றிய மகாவித்துவான் ரா. ராகவையங்கார் 1946இல் ஜூலை, 11இல் வியாழனன்று இறைவனடி சேர்ந்தார்.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்" (50)

என்ற வள்ளுவர் வாக்கிற்குச் சான்றாக விளங்குபவர், தம்முடைய பூத உடம்பு மறைந்தாலும், புகழுடம்புடன் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகின்றார்.

# தமிழ்ப்பணி

**முத்து இலக்குமி**

"என் கடன் தமிழ்ப்பணி செய்வதே" என்று தன்னைத் தமிழ்ப்பணிக்கு அர்ப்பணம் செய்து கொண்டு வாழ்ந்த ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகளுள் குறிப்பிட்டுப் போற்றத்தக்கவர் ரா. ராகவையங்கார் ஆவார். தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபெரும் மகாவித்துவான்களைக் காணலாம். ஒருவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. மற்றொருவர் ஸேது ஸம்ஸ்தான ஆஸ்தான மகாவித்துவான் ரா. ராகவையங்கார் ஆவார். இவ்விருவரின் தமிழ்த் தடத்தில் ஆழங்காற்பட்ட மேன்மைக்குரியவர்கள் முறையே தமிழ்த் தாத்தாவும், மு. இராகவையங்காரும் ஆவார்கள். இத்தகு தமிழ்க் குடும்பம், தமிழ் மொழியினைத் தங்களது உயிர் மூச்சாகக் கொண்டு, இம்மொழி இலக்கியத்தின் வாழ்வில், தங்களது வாழ்வைக் கண்டு உண்டு உயிர்த்து வாழ்ந்தது. மகாவித்துவான் ரா. ராகவையங்காரின் தமிழ்ப்பணி பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் அந்நியர் வரவோடு வந்த அச்சு இயந்திரத்தால் தமிழ் நூல்கள் பதிப்புப் பெற்றன. இலக்கிய இலக்கண நூல்கள் பல்கிப் பெருகின. அந்நியர் வருகையும் தொடர்பும் தமிழ் வளர்ச்சிக்கு உந்துதலாக அமைந்தன. மேலும் பத்திரிகைகளும், இதழ்களும் தோன்றத் தொடங்கின. இலக்கிய ஆய்வும், விமர்சனமும் என்று இலக்கிய வகையில் புதியதோர் வீச்சுத் தோன்றலாயிற்று. அறிஞர் பெருமக்களின் பதிப்புப் பணியும் திறனாய்வுப் பணியும் தமிழ்ப்பணியில் இடம் பெறலாயின. மகாவித்துவான் ரா. ராகவையங்காரும் இத்தகு பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதோடு இதழியல் துறையிலும் புதியதோர் எழுச்சியை உருவாக்கினார். 'செந்தமிழ்' என்ற பத்திரிகையினைத் தோற்றுவித்து, அதன் பத்திரிகாசிரியராகப் பணியாற்றினார். ஏறத்தாழ 'எழுபத்தெட்டு' ஆண்டுகள் *(1870-1948)* வாழ்ந்த அன்னாரின் வாழ்க்கை வழங்கும் தகவல்கள் பலவாகும்.

### நான்காம் தமிழ்ச் சங்கம்

'வண்புகழ் மூவர்' என்ற மூவேந்தரின் காலத்தில் முச்சங்கங்கள் விளங்கின என்பர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமநாதபுரத்தை

ஆண்ட சேதுபதி மன்னர்கள் தமிழ்ப் புலவர்கட்கு ஆதரவு தந்தனர். தமிழ்ப் புலமை மிக்கோரைப் போற்றி அவர்களது தமிழ்த் தேடலுக்குப் பதிப்பிற்குப் பெரிதும் துணை நின்றனர். தமிழ் அறிஞர்களின் கலைச்சேவைக்கு இம்மன்னர்கள் பொருட்சேவை செய்தனர். மேலும் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் 'தமிழ்ச்சங்கம்' என்ற அமைப்பினைத் தமிழ்ச் சான்றோர், ஆன்றோர்களது அன்பினாலும் பண்பினாலும் அரவணைப்பினாலும் ஏற்படுத்தினார். இச்சங்கம் 'நான்காம் தமிழ்ச் சங்கம்' என்ற சிறப்பினைப் பெற்றது. இச்சங்கத்திலிருந்து பல தமிழ் நூல்கள் சங்கமித்து முகிழ்த்தன. இத்தமிழ்ச்சங்கத்தில் இன்றும் தமிழ்க் கல்வியும் தமிழ் ஆராய்ச்சியும் நடைபெற்று வருகின்றது. இத்தகு நிலைப்பாடுகளுக்கெல்லாம் வித்திட்ட பெருமை மகாவித்துவான் அவர்களையே சாரும்.

## செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர்

மதுரை, தமிழ்ச்சங்கத்தில் 'செந்தமிழ்' என்னும் இதழ் 1902ல் தொடங்கப்பெற்றது. இதன் முதல் பத்திரிகாசிரியர்' என்ற சிறப்பினைப் பெறுபவர் ராகவையங்கார் ஆவார். தமிழ் நூல்களைப் போற்றிச் சங்கப் புலவர்கள் கண்டறிந்த அரிய பெரிய ஆராய்ச்சிகளை வெளியிடுவதற்கு வகை செய்யும் விதத்தில் 'செந்தமிழ்' இதழ் தோற்றுவிக்கப்பட்டது. இவ்விதழில்

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"

என்ற திருக்குறள் முதலில் தரப்பட்டுள்ளது. பத்திரிகாசிரியர் தமிழ் வரலாற்றையும் சேது மன்னர்களின் தமிழ்த் தொண்டின் வரலாற்றையும் ஒரு சேர முகவுரையில் முத்தாய்ப்பாக எழுதினார். இப்பணியில் இவர் இரண்டரை ஆண்டுகளே பணிபுரிந்தார். இக்கால கட்டத்தில் அறிஞர் பலராலும் விளக்கப் பெற்ற புதிய புதிய இலக்கிய இலக்கண வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றன. இவை தமிழ் மக்களை மகிழ்ச்சியடையச் செய்தன. இக்குறுகிய காலத்தில் இவர் வெளியிட்ட ஆராய்ச்சிக் கருத்துகள் குறிப்பிடத்தக்கவை.

1. தொல்காப்பியச் செய்யுளியலுரை எழுதியவர் பேராசிரியர் என்று எடுத்துரைத்தார்.
2. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் நான்கு இயல்கள் நச்சினார்க்கினியர் உரை என்பதை மறுத்துப் பேராசிரியர் உரை என்பதை நிறுவினார்.

3. திருக்கோவையாருக்கு உரை வகுத்தவர் பேராசிரியர் என்று குறிப்பிட்டார்.
4. புறப்பொருள் வெண்பாமாலை உரையாசிரியர் மாகறல் சாமுண்டிதேவ நாயகர் என்பதைக் கண்டறிந்து கூறினார்.
5. கம்பர் இராமாயணத்திற்குச் சூட்டிய பெயர் 'இராமாவதாரம்' என்பதைக் கண்டுபிடித்துக் கூறினார்.
6. பாகவத புராணம் பாடியவர் வேம்பற்றூர் செவ்வைச் சூடுவார் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தினார்.
7. மேலும் ஒப்பாய்விற்கு வழிகாட்டினார். திருவள்ளுவர், கம்பர் ஆகியோரை இணைத்துக் கருத்துகள் வழங்கினார். அதே போன்று திருத்தக்கதேவர், கம்பர் இருவரையும் ஒப்பாய்வு செய்து கருத்துகளைச் செந்தமிழில் எழுதினார்.
8. பல நூல்களைப் பதிப்பித்தார்.

## நூலாசிரியர்

மகாவித்துவான் இராமநாதபுரத்தில் சேதுபதி மன்னரின் அவைக்களப் புலவராய் இருந்த காலத்து இடையறாது தமிழ் வடமொழி நூல்களைக் கற்றுச் சுவைத்துப் பிறருக்கும் அவற்றை எடுத்தியம்பினார். மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழா ஒவ்வோர் ஆண்டும் மூன்று நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. அவ்வமயம் அறிஞர் பெருமக்கள் தங்களது ஆய்வுச் சிந்தனைகளைச் சொற்பொழிவாக எடுத்துரைப்பதுண்டு. இச்சங்கத்தின் 13ஆம் ஆண்டு விழாவில் டாக்டர் உ.வே.சா. தலைமையில் மகாவித்துவான் 'சேதுநாடும் தமிழும்' என்னும் பொருள் பற்றி ஆய்வுரை வழங்கினார்.

இந்நூலின்கண் சேதுமன்னர்களின் தமிழ்ப் புலமை, தமிழ்ச் சான்றோர்களைப் போற்றிப் புரந்த திறம், சேதுநாட்டின் எல்லை, சேது நாட்டினைப் பற்றிய இலக்கியக் குறிப்புகள், சேது நாட்டின் தமிழ்ப்புலமைமிகு மண்ணின் மைந்தர்கள், அவர்களது இலக்கியப் படைப்புகள் என்று விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும் வகையில் கருத்துகள் உள்ளன.

"இதன் புண்ணிய விசேடங்களாலும் இச்சேது நாடொன்றே நாடென்று வழங்கப்படும் போலும்; இதன் 'ஊர் எனப்படுவது உறையூர்' 'பூவெனப்படுவது பொறிவாழ் பூவே' 'கோயில் என்பது கோன்றிருவரங்கம்' 'கோயில் என்பது குளிர் பொழிற்றில்லை' என்பது போலக் கொள்க....... திருமலைச் சேதுபதியைப் படிக்காசுப் புலவர் 'நாட்டிற்சிறந்த திருமலையர்' என்று விளிக்கப்படுதலானும்

இதனுண்மை ஊகிக்கப்படும்" (சேதுநாடும் தமிழும். ப. 46) என்று பெருமிதம் பொங்கச் சுட்டிக் காட்டுகிறார்.

'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்றதன்படி டாக்டர். உவேசா. 'சேதுநாடும் தமிழும்' என்ற நூலுக்கு முகவுரை எழுதியுள்ளார். அதில், "நூலாராய்ச்சி முறை பண்டிதர்களால் அறியப்படாதென்று சொல்லுபவர்கள் இதனைப் படித்துப் பார்ப்பார்களாயின், அக்கொள்கையை அடியோடு விட்டு விடுவார்கள் என்று நினைக்கிறேன்" (ஆய்வுலகம்..... ப. 118) என்று உறுதிபடக் கூறுகிறார்.

மகாவித்துவானின் மற்றொரு ஆராய்ச்சி நூல் 'வஞ்சிமா நகரம்' என்பதாகும். வஞ்சி மாநகரம் என்பது எது என்பதில் தமிழறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. எனவே அந்நாளில் இவ்வூர் பற்றிய விவாதம் கருப்பொருளாய் அமைந்தது. புலவர்கள் பத்திரிகை வாயிலாகவும் புத்தகங்கள் வாயிலாகவும் தங்களது கருத்துக்குரிய தரவுகளை வெளியிட்டனர். இச்சமயத்தில் இராஜராஜேச்சுவர சேதுபதி தனது ஆஸ்தான வித்துவானிடம் இது குறித்த விளக்கத்தைக் கேட்க, மகாவித்துவான் வஞ்சிமா நகர் பற்றிய இலக்கிய இலக்கணக் கருத்துகளைத் தேடிப் பெற்று ஒரு சேரத் தனது உள்ளமாம் சிந்தையில் பதிவு செய்து, தெளிவு படத் தனது நுண்மாண் நுழைபுலம் புலப்படும் வகையில் எடுத்துரைத்தார்.

மகாவித்துவான், சேரர் தலைநகராகிய வஞ்சி மாநகரம் என்பது கொங்கு நாட்டு விளங்கும் கருவூரேயாகும் என்பது உறுதிபடப் பல்வேறு ஏதுக்களாலும் சான்றுகளாலும் நிறுவினார்.

முதலில் பிறந்த காரணத்தால் ரா. ராகவையங்காரைத் தமிழ்ச் சான்றோர் 'பெரியவர்' என்று அன்புடன் அழைப்பர். அதே போன்று மு. இராகவையங்காரைச் 'சின்னவர்' என்று குறிப்பிடுவதுண்டு. தமிழ்க் கீர்த்தியில் இருவரும் ஈடு இணையற்றவர்கள் எனலாம். மு. இராகவையங்கார் 'சேரன் செங்குட்டுவன்' என்ற நூலைப் படைத்தார். பின்பு 'சேரர் தலைநகர்' என்ற தலைப்பில் ரா. ராகவையங்காரின் 'வஞ்சி மாநகரம்' வெளிவந்த பின்பு அதன் வழியினைப் பின்பற்றி எழுதி வெளியிட்டார் என்ற குறிப்பினை நூலின் வழி அறிய முடிகிறது.

இந்நாளில் நடைபெறும் ஊர்ப்பெயராய்வு என்ற கருத்தியலுக்கு வழி காட்டியவர் ரா. ராகவையங்கார் என்று கூற வேண்டும். ஸ்ரீவஞ்சி மாநகர்' என்ற தலைப்பிட்டு 'வஞ்சி' என்ற சொல்லாட்சி விளக்கம், வஞ்சிக்கொடி, வஞ்சிப்பாளையம், வஞ்சி நாடு என்று வஞ்சியுடன் இணைந்த இலக்கண, இலக்கியச் சொற்கள்

அனைத்தையும் எடுத்துக்காட்டி விளக்கியிருக்கும் பாங்கு வியப்பில் ஆழ்த்துவதாகும்.

"இவ்வூர்களை அவ்வரசிருக்கைக் கடையாள மென்று காட்டுவர்.

| | |
|---|---|
| தும்பிவாடி | - யானைப்படை நின்ற இடம் |
| மாநிலை | - குதிரைப்படை நின்ற இடம் |
| தோணக்கற்பட்டி | - தோரண வாயிலுள்ள பகுதி |
| வஞ்சிப்பாளையம் | - வஞ்சிக்குரிய படை தங்கிய இடம்" |

(வஞ்சி மாநகர், ப. 164)

இவ்வாறு மகாவித்துவான் கருத்துகளைத் தெளிவுபட ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைத்துத் தொகுத்துச் சொல்லும் தன்மையினராக உள்ளார் என்று குறிப்பிடலாம்.

மகாவித்துவான் 'நல்லிசைப் புலமை மெல்லியலார்கள்' என்றொரு நூலைப் படைத்தார். பெண்களின் கல்வியும் அவர்களது படைப்புத் திறனும் குறித்த விளக்கமாக இந்நூல் அமைந்திருந்தது என்பர். இவ்வாறு பெண்மையைப் போற்றி பெண்மக்களது சிறப்பினை விதந்து விளக்கியுள்ளார். இந்நாளில் பேசப்பெறும் 'பெண்ணியச் சிந்தனை'களை அன்றே தன் நூலின் வாயிலாக எடுத்துரைத்தப் பெருமைக்குரியவர் ரா.ராகவையங்கார் ஆவார்.

சங்க காலத்தில் 'மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்' என்று முடங்கிக் கிடந்த மகளிரிடம் படைப்பாக்கம் காணப்பட்டது. இக்காலத்து வாழ்ந்த மகளிரில் ஔவையார், பூதப்பாண்டியன் தேவியார், பாரி மகளிர், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், பூங்கணுத்திரையார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மகாவித்துவான் ஆதிமந்தியார் தொடங்கிப் பூங்கணுத்திரையார் ஈறாக ஏறத்தாழ இருபத்தைந்து பெண்பாலரின் வரலாற்றினைச் சங்க நூற் சான்று கொண்டு விவரித்து எழுதினார்.

பெண்மக்களின் பெருமித வாழ்க்கையை எடுத்துக்காட்டிப் பெண் கல்வியிலும் பெண்பாலார் உயர்விலும் தமக்குள்ள விருப்பினை இந்நூலின் வாயிலாக இவர் வெளிப்படுத்தியுள்ளார் (ஆய்வுலகம் ..... ப. 121) என்பது இவரைப் பற்றிக் குறிப்பிடப் பெறும் செய்தியாகும். மகாவித்துவான் பெண்களைப் போற்றி எழுதியதைப் போன்று 'குறுகுறு நடந்து இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்' மயக்கத்தை விளைவிக்கும் குழந்தைகள் மீது மிகுந்த ஈடுபாடு உடையவர். குழந்தைப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

நம்மாழ்வாரால் சங்கப் புலவர் குழுவிற்கு எழுதி விடுத்த திருப்பாசுரம் 'அண்ட கோளத் தாரணுவாகி' என்பதாகும். இது 17 வரிகள் கொண்ட ஓர் அகவல் ஆகும். இந்தப் பாடலை ராகவையங்கார் ஆழ்வார் திருநகரில் கவிராயர் வீட்டில் கிடைத்த ஓர் ஒற்றை ஏட்டில் கண்டெடுத்துச் செந்தமிழ்ப் பத்திரிகையில் மூன்றாம் தொகுதியில் 1905இல் வெளியிட்டார். அதில் இதன்பொருள் இப்பொழுது விளங்கவில்லை என்ற குறிப்புடன் வெளியிட்டார். ஆனால் 30 ஆண்டுகளுக்குப் பின் 1934இல் பலகாலும் சிந்தித்துத் தெளிவு கண்டு உணர்ந்த கருத்துகளையெல்லாம் "ஸ்ரீவேத வேதாந்தவர்த்தினீ மஹா சபையில்" விளக்கினார். பாடலின் ஒவ்வோர் அடியையும் எடுத்துக் கொண்டு பொருள் நயத்தை நுண்ணிதின் ஆய்வு செய்து விளக்கினார். பொருள் புரியாத நிலையில் விளங்கின வரிகள் அனைத்தும் மெய்ப்பொருள் விளக்கக் கருத்துகள் என்பதை மகாவித்துவான் உரையால் அனைவரும் உணர்ந்தனர். 40 பக்கங்கள் கொண்ட "அண்டகோள மெய்ப்பொருள்" என்ற இந்நூல் மகாவித்துவானின் ஆழ்ந்தகன்ற பெருங்கல்வியின் இடைவிடாத முயற்சியினாலும் உழைப்பினாலும் உருவானது என்பது பெறப்படும்.

மகாவித்துவான் 1941இல் வெளியிட்ட நூல் 'தமிழர் வரலாறு' என்பதாகும். இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீட்டின் இரண்டாவது நூலாகும். இந்நூலின் கண் நூலாசிரியர் முதற்கண் தமிழ்மொழியின் தனிச்சிறப்பினை விளக்குகிறார். தொடர்ந்து பண்டைய நாளில் இயற்கையின் சீற்றத்தால் விளைந்த கடல்கோள் குறித்தும் தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டு விளங்கின தன்மையினையும் விளக்குகிறார். மேலும் தமிழர் யார்? அவர்தம் இயல்புகள், பண்புகள், கொள்கைகள் என்பனவற்றையும் தெளிவு படுத்துகிறார்.

இந்நூலின் கண் நான்கு அத்தியாயங்கள் முறையே அகத்தியர், அகத்தியச் சூத்திரங்கள், மாபுராணம், தலையாய ஓத்து என்பனவற்றை ஆய்வு நெறி முறையில் செயல்பட்டு கண்டு அறிந்த முடிவுகளைக் கொண்டதாக உள்ளன. அகத்தியரோடு தொல்காப்பியரையும் இணைத்து நூலாசிரியர் விளக்கியுள்ள முறைமை குறிப்பிடத்தக்கது என்பர்.

மகாவித்துவான் அண்ணாமலையில் ஆராய்ச்சித் துறையில் விளங்கிய பொழுது 1949இல் 'தித்தன்' என்ற தலைப்பிலும் 1951இல் 'கோசர்' என்ற தலைப்பிலும் தனித்தனிக் கட்டுரைகளாக எழுதினார். இவை பின்பு நூல்களாக வெளியிடப்பட்டன. சங்க நூல்கள் உறையூர்த் தித்தன் என்று குறிப்பிடும் காரணத்தால் இம்மன்னன்

வேளிர் குலத்தவன் என்பதோடு சோழர் குல முதல்வன் என்று இலக்கியச் சிந்தனையாளர்கள் எண்ணினார்கள். ஆனால் மகாவித்துவான் இத்தகு எண்ணம் தவறு என்பதைப் பல சான்றுகளின் மூலம் நிறுவினார்.

இதே போன்று 'கோசர்' பற்றிய ஆய்வு நூலில், சங்கப் பாடல்களில் இடம்பெறும் கோசர் என்ற இடங்களை எல்லாம் சுட்டிக் காட்டுகிறார். பின்பு 'கோசர்' என்பார் யார்? இவர்கள் எங்கிருந்து வந்து எங்குக் குடியேறினார்கள் என்பன போன்ற விளக்கங்களை இலக்கியத் தரவுகள் மூலம் தெளிவுபடுத்துகிறார். மேலும் அகுதை, திதியன், குறும்பியன், ஆதனெழினி, தழும்பன் முதலியவர்கள் கோசர் மரபினர் என்பதையும் இவர் தம் ஆய்வினால் அறிய முடிகிறது.

கல்வியிற் பெரியன் கம்பன் 'ஏரெழுபது' பாடினார். ஒட்டக்கூத்தர் 'ஈட்டியெழுபது' பாடினார். அதைப்போன்று ராகவையங்கார் நிலமகளின் பெருஞ்சிறப்பைப் புவியெழுபது என்று போற்றிப் பாடியுள்ளார் . இந்நூல் கலித்துறைப் பாவகையில் பாடப் பெற்றதாகும். பூமியின் இயற்கைத் தன்மை, தெய்வீகத் தன்மைகளைப் புராணம், வரலாறு வாயிலாகத் தம் நுட்பமிகு அறிவினாலும் கற்பனைத் திறத்தாலும் ஆற்றொழுக்கு நடையில் பாடல்களுக்குக் குறிப்புரையுடன் இக்கவிதை நூலைப் படைத்துள்ளார். இந்நூலின் கண் மகாவித்துவான், பூமியின் அருள் சேது காவலர்க்கு என்றென்றும் கிடைக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

கணியன் பூங்குன்றனாரின் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கருத்தையும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற கருத்தையும் ராகவையங்கார் தன் பாடலில் பதிவு செய்துள்ளார். முன்னோர் மொழியைப் பொன்னே போற் போற்றும் அவரது பண்பு இதனாற் புலனாகும்.

"பழுத்த பேரருட் பார்மகள் ப யத்த பல்லுயிருள்
ஒழுக்க மல்லது பிறப்பு வேறில்லென வுணர்த்தி
அழுக்கு வேடுவர் குரக்கின மரக்கரென் பவரோடு
இழுக்கிலாதுடன் பிறப்பெனக் கலந்தனன் இயவுள்"

என்று மகாவித்துவான் இராமபிரான் சரிதத்தையும் இணைத்துக் (48) கூறுகிறார்.

1932ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்ற 'கலைமகள்' இதழில் மகாவித்துவான் கடவுள் வாழ்த்துப் பாடல் வழங்கினார். இவர்

வழங்கிய 'வாழ்த்துக்கவி' தமிழ்த் தாய் வாழ்த்தாக அமைந்துள்ளது. இக்'கலைமகள்' இதழில் மகாவித்துவான் 'தொழிற்சிறப்பு' என்னும் நூல் மூன்று பகுதியாய் வெளியிடப் பெற்றது. இது உலகில் தொழில் புரிதலின் மேன்மையைப் பலவாறாகப் போற்றிப் பாடும் நூறு பாடல்களைக் கொண்டதாகும். தேவையான இடங்களில் அரும்பத விளக்கமும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்' என்று வள்ளுவரும், 'உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று மகாகவியும் வணங்கி மகிழ்வதைப் போன்று மகாவித்துவானும், இத்தொழிலின் சிறப்புகளைத் தம் பாடலின் மூலம் படைப்பாக்கியுள்ளார்.

ராகவையங்காரின் பாரம்பரியத்தினர் திருமாலுக்கு வழி வழியாகத் தொண்டு புரியும் மரபினர் ஆவர். இவர்கள் ஆழ்வார்களின் திருப்பாடல்களில் ஆழ்ந்த புலமைமிக்கவர்கள். மகாவித்துவானும் மன்னா மனிதர்களைப் பாடிய பிழை தீரத் திருமால் திருவடிகளுக்குப் புகழ்மாலை சூட்டியுள்ளார்.

"கொலைக் களிற்றிற் கொண்ட குளிர்முத்தை யுப்பு
விலைக்குக் கொடுத்த விதமே – நிலைத்த தமிழ்ப்
பாவைப் பிறர்க்குப் பகர்ந்த பிழைதீர
நாவைக் கழுவினே னான்" (திருவடி 109)

என்கிறார்.

மகாவித்துவான் ஸ்ரீதிருவடிமாலை 'சீராமப்பாட்டு' என்று குறிப்பிட்டு இராமனின் அருமை பெருமைகளைச் சந்த நயந்தோன்ற 109 பாடல்களில் பாடியுள்ளார். "திவ்ய கவி பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாடல்களை யொப்பத் திருவடிமாலைப் பாடல்களும் பக்திச் சுவை கனிய அமைந்துள்ளன" என்று (ஆய்வுலகம்....... ப. 127) பாராட்டுகின்றனர். மேலும் ஸ்ரீராமனின் திருநாமச் சிறப்பினைத் தனியே 10 பாடல்களில் பாடியுள்ளார். 'போற்றி வழிபாட்டுப்' பாடல் முறையில் இப்பாடல்கள் உள்ளன என்பதைக் கீழ்க்காணும் பாடலால் அறியலாம்.

"கல்லாருங் கற்றாருங் கற்கு நாமம்
கங்கை முநற் றீர்த்த பலன் காட்டு நாமம்
வில்லாரும் வீரர் செயம் வேண்டு நாமம்
மெய்ம்மைக்கே பரியாய மேய நாமம் ........" (பாடல் 5
திருவடிமாலை. ப. 40)

என்பதே அப்பாடல்.

வள்ளுவப் பெருந்தகை, தனக்கோ அன்றி மற்றவர்களுக்கோ பயன்படாத பொருட்செல்வத்தை நன்றியில் செல்வம் என்றார். மகாவித்துவானும் இவரது எண்ணத் தடத்தில் சென்று 'நன்றியில் திரு' என்னும் தலைப்பில் பல அகவற் பாடல்களைப் பாடினார். இப்பாடல்கள் சங்கப் பாடல் நடையினை ஒத்து விளங்கின என்பர். செந்தமிழ் ஐந்தாம் தொகுதியில் இருபாடல்கள் காணப்படுகின்றன. எஞ்சிய மூன்று பாடல்களும் பெரும் புலவர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் வெளியிட்டுள்ள தனிச் செய்யுட் சிந்தாமணியில் காணப்படுகின்றன.

'பாரி பாரி' என்று பலர் ஏத்திப் பாடும் பெருமை மிகு வள்ளல் பறம்பு நாட்டு மன்னன் பாரி. சங்கப் பாடல்களில் இப்பெருமகனின் சிறப்புகள் பேசப்படுகின்றன. மகாவித்துவான் இம்மன்னனின் அருங்குணங்களில் ஈடுபட்டுத் தம் இளமைக் காலந்தொட்டே இவ்வள்ளலைக் குறித்துத் தாம் ஆய்வு செய்து கண்டறிந்த கருத்துகளையெல்லாம் தொகுத்து வைத்திருந்தார். பின் இத்தரவுகளின் அடிப்படையில் தாம் 'பாரி காதை' என்னும் புதிய காவியத்தைப் படைத்ததாக இந்நூலின் முன்னுரையில் கூறுகிறார். இவ்வாறு ஆய்வுக் களத்தில் தம் எண்ணக் களத்தைப் பதிவு செய்து வாழ்ந்த தமிழ் ஆன்றோராக மகாவித்துவானைக் காண முடிகிறது.

மகாவித்துவான், "யான் இந்நூல் பாடி நிறைவேற்றிய பின்னர் இதனை வெளியீட்டிற்கு ஓர் பெரு நல்லவை வாய்க்கப் பெறாது தாழ்த்த யாண்டுகள் பலவாகும். நல்லறிவாளர் அருமையாக வாய்த்த சமயங்களில் இந்நூலின் ஒவ்வோர் திறத்தைப் படித்துக் காட்டி அவர்களால் அன்பு செய்யப் பெற்றதுண்டு" (ஆய்வுலகம், ப. 139) என்று குறிப்பிடுவதால் எங்ஙனம் நல்லோர் அவைக்காகக் காத்திருந்தார் என்பது பெறப்படும்.

பாரிகாதையைப் 114 பகுதிகளாகப் பகுத்து 153 வெண்பாக்களால் சீரிய காப்பியமாகப் படைத்துள்ளார். காதைகளின் பெயரமைப்பிலேயே காப்பியத்தின் நோக்குப் புலப்படும் வகையில், பாயிரத்திறம், வளம்பாடு திறம், தேர் முல்லைக்கு ஈந்ததிறம், கபிலர் நட்புக் கோட்டிறம், பாண்டியருக்கு மகண் மறுத்த திறம், ஔவை பறியுண்ட திறம், பொன்றுந்த புகா நல்குதிறம், மூவேந்தர் தளர்ந்த திறம், பார்ப்பார்படுத்த திறம், மகளிர்பால் ஔவை வரவுரைத்த திறம், கபிலர் தீப்பாய்ந்த திறம், மகளிர் திருமணத் திறம் என்றமைத்து ராகவையங்கார் பாடியுள்ளார்.

'மகண் மறுத்த திறம்' அந்நாளில் கல்லூரிகளில் பாடமாக வைத்துப் பயிற்றுவிக்கப்பட்டது. இதற்குக் காரணமாக அமைந்தவர் சேதுபதி நாகநாத ராஜா ஆவார். மேலும் அண்ணாமலை வள்ளலார் அவர்கள் இக்காப்பியட்' பாடல்களைக் கேட்டு ராகவையங்காருக்குத் தக்க பரிசுகள் தந்து பாராட்டினார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ் வெளியீடாக 1937ஆம் ஆண்டு பாரிகாதை தான் வெளியிடப் பெற்றது. இந்நூல் கற்பனைச் சிறப்பும் பொருள் ஆழமும் விளங்கும் வகையில் நுண்மாண் நுழைபுலம் மிக்கதாய்ப் படைக்கப்பட்டுள்ளது.

## காலச் சூழலால் கனிந்த (கவிதையினைப் படைத்த) கவிஞர்

உள்ளத்துள்ள கவிதை - இன்ப ஊற்றெடுக்கும் கவிதை அவ்வக் கால நிகழ்வுகளின் தாக்கத்தால் உணர்ச்சி மீதுற வெளிப்படுவது உண்டு. இவண் ராகவையங்காரும் ஒவ்வொரு காலச் சூழலிலும் உணர்ச்சி வயப்பட்டவராக விளங்கிய காலத்தில் எல்லாம் தமது கருத்துகளைக் கவிதையின் மூலம் வடிகாலாக்கி வடிவமைத்தார்.

1. மன்னர் பாஸ்கர சேதுபதி மறைந்த பொழுது, கல்வியும் செல்வமும் நிரம்பிக் கற்பகத் தருவாய் விளங்கிய இம்மன்னன் மாய்ந்தானே என்று புலம்புகிறார்.

2. 1910ஆம் ஆண்டு ஸ்ரீராசராசேசுவர சேதுபதி இவருக்குப் பொன்மணிக்கடகம் பூட்டிய போது

**கன்னா முதமாக் கவியெழுது மென்கைக்குப்**
**பொன்னார் மணிக் கடகம் பூட்டினான்.... (ஆய்வுலகம், ப. 129)**

என்கிறார்.

3. சேதுபதி நாகநாத ராஜாவின் பிறந்த நாளாகிய வெள்ளணி நாளில் அவரை வாழ்த்திக் கவிதை பாடினார்.

4. சேதுபதி திருப்புல்லாணித் திருக்கோயிலுக்குத் திருத்தேர் வழங்கிய போது பாடினார்.

5. செட்டி நாட்டரசர் அண்ணாமலை மன்னரின் அறுபதாம் ஆண்டு விழாவின் போது அவரது அரும் பெருஞ்செயல்களை எல்லாம் பலவாறு பாராட்டிப் பாடினார்.

6. டாக்டர் உ.வே.சா.வின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவின் போது,

"ஏடு தேடி யலைந்தவு ரெத்தனை
எழுதியாய்ந்த குறிப்புரை யெத்தனை
..............................
கோதிலாச் சாமி நாதன்" (ஆய்வுலகம், ப. 131)

என்கிறார்.

இவ்வாறு மகாவித்துவானின் தனிப்பாடல்களில் அவரது தமிழ்ப்புலமை புலனாகின்றது.

இம்மாபெரும் வித்துவானின் படைப்புகள் பல பதிப்பில் வராத நிலையில் உள்ளன. இது, தமிழ் உலகுக்கு ஏற்பட்ட மாபெரும் இழப்பு எனலாம். ராகவையங்காரின் தமிழ்க் கடலில் விளைந்த முத்துகள் மக்கட்குக் கிடைக்காத முத்துகளாயின. அவையாவன,

1. திருவேங்கடமாயவன் மீது 100 செய்யுட்களில் பாடிய பாமாலையாம் மாயோன் மாலை.
2. திருப்புல்லாணி இறைவன் மீது பற்றுக் கொண்டு அந்தாதி யாப்பில் பாடிய திருப்புல்லாணி யமக அந்தாதி.
3. இராசராசேசுவர சேதுபதியின் ஒரு துறையில் பாடிய இராசராசேசுவர சேதுபதி ஒருதுறைக் கோவை.
4. நூறு நூறு பாடல்களைக் கொண்ட காவல் தலைமை, கடவுள் மாலை.
5. பாரத நீதி வெண்பா, ஆத்திச்சூடி உரை என்பனவும் செய்யுள் அமைப்பில் பாடியவையாகும்.

இவ்வாறு பதிப்பாசிரியர் பணியிலிருந்த படைப்பாளரால் அவர் படைத்த பனுவல்கள் பதிப்பாகாமல் போயின என்பது வருந்துதற்குரியது.

## மொழியாக்கப் படைப்பாளர்

மகாவித்துவான் வடமொழியிலும் வல்லவராகத் திகழ்ந்தார். எனவே அம்மொழியிலுள்ள அரிய கருத்துகளையும் சிறந்த நூல்களையும் தமிழ்ப்பாடலாக மொழிபெயர்த்தார். வான்மீகி இராமாயணத்துச் சில பகுதிகளையும் இரகுவம்சத்தில் சில சருக்கங்களையும் தமிழில் மொழியாக்கம் செய்தார். வியாச பாரதத்திலுள்ள நீதிப் பகுதிகளை வெண்பாவில் அமைத்து 203 செய்யுட்களைத் தொகுத்துப் பாரத வெண்பா என்னும் நூலைப்

படைத்தார். மேலும் பல்லட சதகம் என்னும் நூலையும் மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபட்டுச் செயலாற்றினார்.

ராகவையங்காரின் பகவத்கீதைப் பாடல் என்பது தாழிசையாப்பில் முழுமையாய் அமைந்த மொழிபெயர்ப்பு நூலாகும். இப்பாடல்களை அறிஞர்கள் முன்னிலையில் பாடி விளக்கவுரை கூறினார். இவரது இருமொழிப் பாண்டியத்தைக் கேட்ட எல்லோரும் வியந்து இவ்வறிஞரைப் பாராட்டினார்கள்.

மேலும், கீதைப் பாடல் விரிவுரை மகாவித்துவானுக்குக் காளிதாச மகாகவியின் 'அபிஜ்ஞான சாகுந்தலம்' என்னும் நூலை மொழிபெயர்க்கக் காரணமாக அமைந்தது. மகாகணம் வி.எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாரின் விருப்பிற்கு இணங்கி மகாவித்துவான் இம்மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டார். இம்மொழிபெயர்ப்பு தென்னாட்டில் வழங்கும் சாகுந்தல நாடகத்தின் பாடத்தைத் தழுவி அமைக்கப்பட்டது. இந்நூல் வடமொழிச் சுலோகத்திற்குச் சந்தப்பாடலும் வடமொழியிலும் பாகதத்திலுமுள்ள உரைநடைக்குத் தமிழ் உரைநடையும் என்பதாக அமைந்து தனித்தன்மையுடன் விளங்கியது. சாகுந்தல மொழிபெயர்ப்பு மயிலாப்பூர் ஸம்ஸ்கிருத ஸமிதியாரால் பாராட்டப் பெற்றது. இந்நூற்பணிக்கு உதவிய தமிழ்ச் சான்றோர்களையும் சேதுபதி மன்னரையும் நன்றி மீதூரப் பாடலில் பதிவு செய்யும் பண்பினராக மகாவித்துவான் காட்சியளிக்கிறார்.

## நயமிகு நாவலர் – பேச்சாளர்

இளமைக்காலம் முதலே அனைவரையும் ஈர்க்கும் வகையில் பேசும் ஆற்றல் மிக்கவராய் ராகவையங்கார் திகழ்ந்தார். முப்பெரும் சேதுபதி மன்னர்களின் அவையில் சமஸ்தானப் புலவராக விளங்கிய காலத்து இவர் பேசிய வாய்ப்புக்கள் பல. மதுரை தமிழ்ச்சங்க ஆண்டு விழாவிலும், நவராத்திரி நிகழ்விலும் தவறாது உரையாற்றும் தன்மையினராக விளங்கினார். மகாவித்துவான் அந்நாளில் விளங்கிய

திருநெல்வேலி தமிழ்ச்சங்கம்
மேலைச் சிவபுரி சன்மார்க்கச் சங்கம்
கரந்தைத் தமிழ்ச்சங்கம்
மயிலாப்பூர் சமஸ்கிருத ஸ்மிதி

ஆகிய சங்கங்களில் தலைமையுரையாற்றியும், கருத்துகளை எடுத்துரைத்தும் பங்கு பெற்ற நாவன்மைமிக்கவர். இவரது தமிழ்ப்பணியைப் பாராட்டித் தமிழவேள் உமா மகேசுவரம் பிள்ளை,

'உந்தும் ஒருதுறைக் கோவை ஒருகோடி
தனிச்செய்யுள் குவையுந் தந்தான்
எந்தவுயர் பாவலனிருக் கிறானிவன் போற்
பன்னெறித் தொண் டியற்றி னானே!"

(ஆய்வுலகம், ப. 147)

என்கிறார்.

மகாவித்துவான் அண்ணாமலைப் பல்கலையில் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்த காலத்துக் கம்பராமாயணம் குறித்து நான்கு முறை உரையாற்றினார். மேலும் சங்க நூல்கள், பண்டைத் தமிழகக் கலைகள், தமிழரின் குடும்ப வாழ்க்கை, தமிழரின் நீதிக்கோட்பாடு, சமயங்களும் கடவுளரும் என்னும் பொருள் குறித்துப் பல்கலையில் பேசினார். இக்கருத்துகளேயன்றித் தமிழ்நாட்டு மூவேந்தர், பிறமொழியோடு தமிழ், தமிழ்மரபும் அரச பாரம்பரியமும், முற்காலக் கல்வி முறை, தமிழ்மொழியில் கவிதா விலாசம் என்னும் தலைப்புகளில் அண்ணாமலைப் பல்கலைக்குப் பணிக்கு வருவதற்கு முன்பே அண்ணாமலைப் பல்கலையில் உரையாற்றியுள்ளார்.

இவ்வாறு தமிழின் இனிமையை வாசித்தும், கேட்டும், வணங்கி வழிபட்டும், போற்றியும், பிறருக்கு எடுத்துரைத்தும், எழுதியும், விளக்க முற்பட்டும்..... என வாழ்நாள் முழுவதும் தமிழ்ப்பணி ஆற்றிய மகாவித்துவான் பன்முகப் பரிமாணம் மிக்கவர்.

## நடைத்திறன்

'படைப்புத்துவம்' என்னும் 'கலா சிருஷ்டி'க்குள் படைப்பாளன் தன்னை அர்ப்பணிப்புச் செய்து கொண்டு படைப்பினைப் பெற்றெடுக்கிறான். அப்படைப்பில், படைப்பாளனின் பல்வேறு பரிமாணங்கள் புலப்படுதற்கு இயலும். படைப்பாளனின் சிந்தனைக் கட்டுமானத்தில் ஆழங்காற்பட்ட அருமையான பெருமைமிகு பல்வேறு கருத்தியல்கள் கருத்தேர்வுக்கு ஏற்ப உருவாக்கம் பெறும் தகைமையன. இவண் மகாவித்துவான் என்ற போற்றுதலுக்குரிய தமிழ்ச் சான்றோர் ரா. ராகவையங்காரின் தமிழ்ப்பணியில் - படைப்புப் பணியில் ஒரு மைல்கல்லாக நின்று அன்றும் இன்றும் என்றும் வழிகாட்டும் தன்மையவாகிய நூல் 'சேதுநாடும் தமிழும்' என்பதாகும்.

'பதச்சோறு' போல மகாவித்துவானின் படைப்புகள் பல இருப்பினும் இந்நூல் ஒன்றே அவரது 'நடைத்திறன்' கூறுகளைக் காணுவதற்குரியதாக இடம் பெற்றுள்ளது. இலக்கியத் தலைப்பிற்குத்

தேவையான பல்வேறு கூறுகளில் ஒன்று 'புலப்பாட்டு நெறி' (Rhetoric) என்றால் அதில் உள்ளீடாக விளங்குவது நடைத்திறமேயாகும்.

"ஓர் இலக்கியப் படைப்பின் வடிவம், கருத்து ஆகிய இரண்டினுக்கும் இடையே காணப்படும் உறவினை ஆராய்ந்து விளக்கிச் சொல்வது நடையியலாகும்" என்பது வாழ்வியற் களஞ்சியம் (தொகுதி xi, ப. 200) வழங்கும் கருத்தாகும். எனவே படைப்பின் 'கரு - உரு' இணைப்பின் உறவில் மொழி என்னும் கருவின் பயன்பாடு எங்ஙனம் செயல்படுகிறது என்பதைத் திறனாய்வு செய்யும் பொழுது நடைத்திறன் வெளிப்படுதற்கு இயலும். மேலும் நடைத்திறன் என்பதில் படைப்பாளரின் 'திட்டப்பாங்குகள் உத்திகள்' போல்வன இடம் பெறுதலுண்டு. மகாவித்துவானின் பன்மொழியறிவில் வடமொழியறிவின் வீச்சு அவருக்குப் 'பாஷா கவிசேகரர்' என்ற விருதினைப் பெற்றுத் தந்தது.

மகாவித்துவான் 'சேதுநாடும் தமிழும்' என்ற தலைப்பில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூன்றாவது ஆண்டுக் கூட்டத்தில் (1915) ஆற்றிய உரையே பின்னாளில் நூலாக வடிவாக்கம் பெற்றது. செய்ந்நன்றி மறவாச் செம்மலாக விளங்கிய மகாவித்துவான், சேதுபதி மன்னர்களின் நாடாகிய சேதுநாடு எத்தகு தமிழ்க்களத்தைத் தளத்தைப் பெற்றுப் பல்வேறு தமிழ்ச் சான்றோர்களை, ஆன்றோர்களை உருவாக்கியுள்ளது என்பதைத் தனது எழுத்துகளில் பதிவு செய்ய விரும்பி இத்தலைப்பில் உரையாற்ற விழைந்துள்ளார். ஆக அவரது கருத்தேர்வு என்பது சேதுநாட்டில் மலர்ந்த இலக்கியக் கர்த்தாக்களையும் அவர்களது படைப்புகளையும் ஒரு சேர தொகுத்துரைத்தல் என்பதாக அமைந்திருந்தது எனலாம். இம்மண்ணின் மைந்தர்களின் இலக்கிய மணத்தைப் பரப்புவதில் மிக்க முனைப்பும் பெருமிதமும் உடையவராக மகாவித்துவான் உள்ளார் என்று கூறுதற்கு இயலும்.

'மொழி', படைப்பாளனின் 'கையகப்பட்டு' அவனது அறிவுத் தேடலின் புலப்பாட்டு நெறியில் செல்லும் போது பல தடங்கள் தோன்றுவதுண்டு. ஒலி நிலையில், சொல் நிலையில், பொருள் நிலையில் என்று சொற்கள் பயின்று வருதலும், விரிந்து நின்று விளக்கிச் சொல்லுதலும், சொற்செட்டாகக் குறிப்பிடுதலும் எனப் பல நிலைகள் உருவாக்கத்தில் இடம் பெறுதலுண்டு. இவண் மகாவித்துவானின் 'சேதுநாடும் தமிழும்' உருவாக்கத்தில் தனித்தன்மை மிகு கூறுகள் காணப்படுகின்றன. அவையாவன:

1. வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துதல்
2. புணர்நிலைச் சொற்களைக் கூறல்
3. ஒரு தொடர் - ஒரு பத்தியாக
4. சிறு சிறு தொடர் அமைப்பில்
5. நுண்ணிதின் விளக்கிக் காட்டல்
6. ஊர்-பெயர்-சிறப்பு எடுத்துரைத்தல்
7. அடுக்கிக் கூறல்; பட்டியலிடல்
8. பிற இலக்கியக் கருத்துகளை, பாடல் வரிகளை மேற்கோளாகக் கூறல்
9. எதுகை - மோனை மடக்குக்கூறி நயம்படத் தொகுத்தல்
10. வினா அமைப்பில் வினாதலும் விடை கூறலும்
11. அடைமொழி கொடுத்து விளக்குதல்

இப்பகுதிகள் மகாவித்துவானின் நடைத்திறத்தைப் புலப்படுத்துவன. மேலும் மகாவித்துவானை இனங்காட்டுவன என்றும் கூறுதற்கு இயலும். சேதுநாட்டுத் தமிழ்ச் சான்றோர்களை உள்ளம் மகிழ்ந்து மகிழ்ந்து தன் உரையில் கூறும் மகாவித்துவான், வாய்ப்பு நேரும் பொழுதெல்லாம் சேது சமஸ்தான மன்னர்களின் அருட்கொடையினையும் பொருட் கொடையினையும் தமிழ்க் கொடையினையும் விதந்து கூறிப் பாராட்டிப் போற்றும் சீரிய பண்புமிகு ஆளுமை மிக்கவராகக் காணப்படுகின்றார்.

## வடமொழிச் சொற்களைப் பயன்படுத்துதல்

மகாவித்துவானின் வடமொழிப் புலமை அவரது எழுத்துகளில் இரண்டறக் கலந்து படைக்கப்பட்டுள்ளது. இத்தகு 'மணிப்பிரவாள நடை' என்பது கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதலே பல்லவர் காலத்திலேயே வழக்கில் விளங்கியிருந்தது. இவ்வழக்கு மீண்டும் அச்சுக்கலை வருகைபுரிந்து பதிப்புப் பணி என்பதும் வளர்ந்த பொழுது தழைக்கத் தொடங்கியது. மகாவித்துவான் பரத கண்டத்துக்கு இருபெரும் வரம்பாகவுள்ள சேதுவும் இமயமும் என்பதை, 'தஸேது ஹிமாசலபர்யந்தம்' (ப. 41) என்று கூறுவதால் அறியலாம்.

இதே போன்று இராமபிரானைக் குறிப்பிடும் பொழுது 'சீராமமூர்த்தி' (ப. 41) என்றே குறிப்பிடுகின்றார். சேது மன்னர்களைக் கூறும் காலத்துச் சேதுபதி 'மஹாராஜாவவர்களாலும்' என்கிறார்.

மேலும், உமறுப்புலவரின் கவித்துவத்தையும் உயர்குணத்தையுந் தெரிதற்கு 'ஸ்தாலீபுலாக நியாயமாக' இரண்டு செய்யுட்களை எடுத்துக் காட்டுவல் (ப. 53) என்று எடுத்துரைக்கிறார்.

## புணர்நிலைச் சொற்களைப் பயன்படுத்துதல்

சொற்களைத் தனித்தனியே பிரித்து எழுதுதல் என்பது வாசிப்பிற்கும் பொருள் தெளிவினை உடனே புரிந்து கொள்வதற்கும் ஏதுவாக இருப்பதாகும். மொழி இலக்கணத்தில் தேர்ந்த தெளிவு உடையவர்கள் இவ்வாறு புணர் நிலைச் சொற்களை இயல்பாகப் பயன்படுத்தும் திறமுடையவர்களாக இருப்பார்கள். இவண் மகாவித்துவான்

'இவருட் டேவியருள் பெற்ற' - (இவருள் தேவியிருள் பெற்ற)

'அவரிளம் பிராயத்தே' - (அவர் இளம் பிராயத்தே)

'பிறரா லாச்சரியப்படத்தக்க' - (பிறரால் ஆச்சரியப்படத் தக்க)

'நாடாண்ட' - (நாடு ஆண்ட)

'கழுத்திற் றானே' - (கழுத்தில் தானே)

என்பன போன்ற சொற்களைப் பயன்படுத்தி உள்ளார்.

## ஒரு தொடர் . . . ஒரு பத்தியாக

மகாவித்துவான் ஒரு கருத்தினைக் கூற வரும்பொழுது அக்கருத்தோடு தொடர்புடைய பிற கருத்துகளைத் தகவல்களை இணைத்துக் கூறும் பாங்கினராக உள்ளார். எனவே சில தொடர்கள் ஒரு பத்தி அளவில் நீண்டு செல்லும் தன்மையதாக உள்ளன.

"இவருக்குப் பின் இச்சேது நாட்டுப் பிறந்து சிறந்த புலவர் தொகையை எண்ணி இனைத்தெனல் இயலாததொன்றேனும் என் சிற்றறிவுக்கியன்ற வரை முயன்று சிலரைப் பற்றிக் கூற.வெழுகின்றேன்" (ப. 50) என்று எழுதுகின்றார். மேலும், "இவர் காலத்தே சருக்கரைப் புலவரென்பார் தம் கவித் திறத்தானும், இராமாயண முதலிய பெருங்காப்பியங்கட்கு உரை சொலும் வன்மையாலும் இச்சேதுபதிகளாற் பெரிதும் பாராட்டப்பட்டுப் பொன் நெட்டிமாலையும் ஊரும் வாகனங்களும் அளிக்கப் பெற்றனராவர்" (ப. 55) என்று எடுத்துரைப்பதில் ஒரு தொடர்நிலைத் திறத்தைக் காணமுடிகிறது. இவ்வாறு ஒன்றோடு ஒன்று இணைத்தும் பிணைத்தும் விவரித்துக் கூறுதலை நடையியல் திறனாய்வாளர் விவரிப்பு நடை (நடையியல், ப. 144) என்பர். "நிகழ்ச்சிகள் சங்கிலித்

தொடர்போன்று கூறுதல், படைப்பிலக்கியங்களில் கதையோட்டம் அமைதல் முதலானவை இந்நடையின் பண்புகளாகும்" (நடையியல், ப. 144) என்றும் இவ்விவரிப்பு நடையின் இலக்கணத்தை விளக்கும் தன்மையதாக மகாவித்துவான் நடை 'விவரிப்பு' நடையாக அமைந்துள்ளது.

## சிறு சிறு தொடரமைப்பு

மகாவித்துவான் எங்ஙனம் ஒரு தொடரையே ஒரு பத்தி அளவில் விவரித்து எழுதும் வகையினராக உள்ளாரோ, அதேபோல் சிறுசிறு தொடராக எழுதுவதிலும் வல்லவராக உள்ளார். இத்தகு சிறுசிறு தொடர் அமைப்பு நடையானது திரு.வி.க., மு.வ. போன்றவர்கள் தடம் பதித்துத் வளர்ப்பதற்குக் காரணமாயிற்று என்று விதந்து கூறுவதற்கு இயலும். இத்தகு சிறு சிறு தொடரமைப்புப் பகுதிகளாகச் 'சேதுநாடும் தமிழும்' நூலில் அமைந்துள்ளவை,

"வீரை ஆக கவிராயர் - இவர் அரிச்சந்திர புராண விருத்தம் பாடியவர். இவருடைய செய்யுணடை தமிழ்மக்களுக்கு அளவிலின்பம் பயப்பது. இவரது ஊர் நல்லூர் வீரையெனப்படுவது. நல்லூர் வீரையென்பது சேதுநாட்டு விசுவனூர்ச் சேகரத்துள்ள நல்லூரை யடுத்த வீரையேயாம். இந்நல்லூர் குலோத்துங்க சோழநல்லூர் என்பதாம். இதுவே சேதுபதிகள் பழைய சாசனங்களிற் கண்டதாம்" (ப. 52) என்பவைகளாகும்.

## நுண்ணிதின் கூறல்

மகாவித்துவான் ஒரு குறிப்பிட்ட தகவலைக் கூற வரும்பொழுது அக்கருத்தை அணுக்கமாகச் சிந்தித்து நுணுக்கமாக விளக்கும் பான்மையினராக உள்ளார் என்பதை இந்நூலின்கண் சில இடங்களில் காணுதற்கு இயலும்.

"நாட்டரசன் கோட்டை என்பதுக்குச் சேதுநாட்டரசனுடைய அரண் என்பதே பொருளாதலானும், புகார்ப்பட்டினம் விட்டுச் சேதுநாட்டுக் குடிபுக்க பண்டையோர் வழியினராகிய வணிக நன்மக்கள் எல்லாம் இன்றும் நாட்டுக்கோட்டையாரென்றே பெயர் சிறத்தலானும் 'திருமலைச் சேதுபதி'யைப் படிக்காசுப் புலவர் 'நாட்டிற் சிறந்த திருமலையா' என்று விவரித்துப் பாடுதலானும் இதனுண்மை ஊகிக்கப்படும். முன்பு நகரத்தாராய்ப் பின்பு இப்புண்ணியநாடு புக்க வணிக நன்மக்கள் நாட்டார் என்று பெயர் பெற்றனர். சிறந்த சேது நாட்டாரின்று தம்மை வேறு பிரித்துணரவே நகரத்தார் என்ற

வழக்குப் பெற்றாராவரென்று உன்னுதல் கூடும்' (ப. 46) என்பதால் நகரத்தார் - நாட்டார் வேறுபாட்டினை உணருதற்கு இயலும்.

இதே போன்று ஊர்ப் பெயர்க்குரிய விளக்கத்தைக் காரண காரிய முறையில் எடுத்துரைக்கும் தன்மையினை, மணவாள முனிவர் "அவதாரஸ்தலம் குந்தி நகரம் என்ப, இதுவே கொந்தகையென்று இப்போது வழங்குவதாகும்" (ப. 47) என்ற வரியினால் அறிய முடிகிறது.

மேலும் வைரவக்கடவுள் பதிகம் சருக்கரைமுத்துக்கருப்பப் புலவர் இயற்றியது. இப்புலவர் வழியினர் இக்காலத்தும் சேதுபதியளிக்கும் வருஷாசனம் பெற்றுத் தழைக்கின்றவராவர். இவரொப்ப வருஷாசனம் பெற்று வரும் புலவர் வழியினர் பலர் ஊருணிக்கோட்டை, கமுதை முதலிய பல இடங்களில் உள்ளனர். ஊருணிக் கோட்டையில் உள்ளோர் மாசிலாமணிப் புலவர் வழியினர். கமுதையிலுள்ளவர் குமார வழிப் புலவர் வழியினர் (ப. 56) என்று மகாவித்துவான் புலவர் வழியினரின் இருபெரும் பிரிவினரை விளக்கிக் கூறுகிறார்.

## ஊர் – பெயர் – சிறப்பு எடுத்துரைத்தல்

ரா. ராகவையங்கார் 'திரு உத்திரகோசமங்கை' எனப்படும் ஊரினைக் குறித்த தகவல்களைக் கூறுவதைக் கீழ்க்காணும் பகுதியின் மூலம் அறிதற்கு இயலும்.

"இனிப் பத்தரெல்லாம்பார் மேற்சிவபுரம் போற்கொண்டாடு முத்தரகோச மங்கையூர்" என்று திருவாதவூரடிகளாற் றிருவாய்மலர்ந்தருளப் பெற்ற திருவுத்தரகோசமங்கைத் தலத்தைத் தன்கட் கொண்ட சிறப்பானும் சேதுநாட்டின் கல்வி ஞான மேம்பாடே தெளிவிதாகும். வடக்கே கைலையங்கிரியினிருந்த உமாதேவியாரும் ஒரு காரணத்தான் இத்திருவுத்தரகோச மங்கைப் பாக்கத்துத் தோன்றியருளி முன்கேளாதன எல்லாம் இத்தலத்தே சிவபிரான்பாற் கேட்டருளினாள் என்பது இத்தல புராணத்தாற்றெரிந்தது. இது திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தானும் தெளியத்தகும்" (ப. 46) என்று தெளிவுபட எடுத்துரைக்கிறார். மகாவித்துவான் சேது நாட்டின் எல்லை வரம்புகளையும் இந்நாட்டின் பகுதியிலுள்ள ஊர்களையும், காட்சிப்படுத்தும் வகையில் (Visualise) கூறிச்செல்லும் பாங்கினை இந்நூலைப் படிக்குங்காலத்தே உணரமுடியும்.

திருப்புல்லாணி, திருப்பெருந்துறை, மணக்குடி, இடைவளநாடு, விஞ்சை எனப்படும் நெட்டூர் என்று சேது

நாட்டிலுள்ள ஊர்களையெல்லாம் பயணம் மேற்கொள்வோருக்கு எங்ஙனம் அதன் அனைத்துச் சிறப்புகளும் விளங்கக்கூறுதல் வேண்டுமோ அம்முறையில் எடுத்து இயம்புகிறார். இவ்வாறு மகாவித்துவான் ஊரினைப் பற்றி விளக்க முற்படும் பொழுது ஊர்ப்பெயர் குறித்தச் சிந்தனை எங்ஙனம் அமைதல் வேண்டும் என்பதை உணர்த்துவது போல ஆய்வு நெறிக்குரிய ஒரு அணுகுமுறையினையும் உய்த்து உணரும் வகையில் படைத்துள்ளார். மேலும் சுற்றுலாக் கல்விக்கும் வழிகாட்டியவராகவும் உள்ளார் என்று சிறப்பித்துக் கூற இயலும்.

## அடுக்கிக் கூறல்

மகாவித்துவான் சேதுசமஸ்தான மன்னர்களைப் பாராட்டிக் கூற விழையும்போது அவருக்கு இலக்கியங்கள் துணை நிற்கின்றன. அவ்விலக்கியங்களில் பிற புலவர்கள் சேது மன்னர்களைப் பலவாறு புகழ்ந்து பாடியுள்ளனர். மகாவித்துவான் அப்பாடல்களில் காணலாகும் போற்றுதலுக்குரிய வரிகளைச் சுட்டிக் காட்ட முயல்பவர் ஓரிருவரிகளை மட்டும் கூறாது அவ்விலக்கியத்திலுள்ள வரிகளில் முக்கியமான வரிகளைத் தேர்வு செய்து கூறவரும் காலத்துத் தொடர்ந்து அடுக்கிக் கூறிக்கொண்டே செல்கிறார்.

அழகிய சிற்றம்பலக் கவிராயர் துளசிங்கமாலை பாடியுள்ளார். இதன்கண் இவர் சேதுபதிகளை

'கல்விசேர் விற்பன்னன்'

'திருப்புல்லாணிக் கோபுரங் கட்டுவித்தவன்'

'காளை யினீ சர் பதம் போற்றி யேத்தினவன்'

'மதுரையுங் காத்து வளருந், தெய்வத் தனுக்கோடி காத்தவன்'

(ப. 56)

என்று பாராட்டினார் என்று மகாவித்துவான் தம் நூலில் இடம் பெறச் செய்கின்றார். மேலும் அமுதகவிராய ரகுநாத சேதுபதி மேல் ஒருதுறைக் கோவை பாடினார். ரகுநாத சேதுபதியை

'தளவாய் குமாரன்'

'மனுக்கலை நூல் தெரிந்த வெங்கோன்'

'நாவுக்கிசையும் பெரும் புகழான்'

'செந்தமிழுங் கீதக் கதையும் வல்லான்'

'கோவைத் துறைக்குப் பதினாயிரம்'

'பொன் கொடுத்திசை கொள், தேவைத்துறைக்குத் துரை'

(ப. 57)

என்று பாடியுள்ளார் என மகாவித்துவான் 'சேதுநாடும் தமிழும்' நூலில் இயைத்துக் கூறுகின்றார். இவ்வாறு அந்நூலாசிரியர் கருத்தினைத் தனக்குத் தேவையான முறையில் தேர்வு செய்து பாராட்டுதலுக்குரிய வரிகளை வரிசையாக அடுக்கிக் கூறல் என்ற நடைத்திறத்தினை உடையவராக விளங்குகின்றார்.

இதே போன்று சேது நாட்டைச் சார்ந்த சங்கப் புலவர் வரிசையினையும் (ப. 48) பிற்காலத்துப் புலவர் வரிசையினையும் (ப. 50) மகாவித்துவான் தொடுத்துள்ள பாங்கு போற்றுதற்குரியது.

## பிற இலக்கியக் கருத்துகளை மேற்கோளாகக் கூறல்

மகாவித்துவான் பன்மொழியறிவு உடையவர் என்பதோடு பல இலக்கியங்களின் கருத்துகளையும் தன் உள்ளமாம் சிறையில் பதிவு செய்து, உரிய நேரத்தில் தனது 'சேதுநாடும் தமிழும்' என்ற நூலில் பதிப்புச் செய்தவராகவும் உள்ளார்.

சேது நாடு குறித்து காணலாகும் கம்பனின் பாடல் வரிகள், மணிமேகலையில் காணலாகும் சேது நாடு குறித்த குறிப்புகள், சங்கப் பாடல்களில் காணப்பெறும் குறிப்புகள், திருவாதவூரடிகள், அழகிய சிற்றம்பலக் கவிராயர் போன்ற பலர் வழங்கியுள்ளத் தகவல்களை மகாவித்துவான் நூல் முழுவதும் இணைத்தும் பிணைத்தும் படைத்துள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது.

'சேதுபாண்டியன்' என்ற பெயர் விளக்கத்தைக் கூறவரும் பொழுது இப்பிணைப்பின் காரணத்தைக் கூறுவதோடு பழங்குடியினர் என்போர் சேர, சோழ, பாண்டியரே என்பதைக் குறிப்பிட்டு விட்டு, இதற்கு விளக்கம் செய்வதற்குத் திருக்குறளை,

"வழங்குவ துள் வீழ்ந்தக்கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப் பிரிதலின்று"

என மேற்கோள் காட்டுவதோடு இதற்குப் பரிமேலழகர் உரை விளக்கத்தையும் ஒரு சேர எடுத்துக்காட்டிப் பழங்குடி என்பது "சேர சோழ பாண்டியரென்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்" (ப. 43) என்பதைக் கூறுகின்றார்.

இவ்வாறு சேதுநாடும் தமிழும் என்ற நூல் முழுவதும் பிற இலக்கியக் கருத்துகள், பாடல்வரிகள் சேது நாட்டின் தமிழ்ச்சிறப்பை விளக்கும் வகையில் ஊடும் பாவுமாகப் பின்னிப் பிணைந்து செல்லும் தன்மையதாக உள்ளன.

## எதுகை – மோனை – மடக்குக் கூறல்

இலக்கண ஆசிரியர்கள் முதல் எழுத்தும், இரண்டாம் எழுத்தும் ஒன்றிவரத் தொடுக்கும் காலத்துத் தோன்றுவன மோனை, எதுகை என்பர். படைப்பாளர்கள் உரைநடையில் கருத்துகளைத் தெரிவிக்கும் பொழுது இத்தகு கவிதை நடைக்குரியக் கூறுகளாம் மோனை, எதுகை போன்றவற்றைப் பயன்படுத்துதலுண்டு. இத்தகு நடைப்போக்கு கவிதை நடை இணைப்போடு இலக்கியச் சுவைப்பிற்கு நயம் பயப்பதாக அமையும். மகாவித்துவான் பல இடங்களில் இத்தகு கவிதை நடைக்கூறுகளாகிய மோனை, எதுகையினைக் கையாளுகின்றார். இதில் சொற்களின் தேர்வில் மடக்குதல் எனப்படும் அமைப்பும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

சேது நாட்டைக் கூறவரும் மகாவித்துவான் "இது மண்ணியனாடு பலவற்றுள்ளும் புண்ணிய நாடென்று போற்றப்படும்" (ப. 41) என்கிறார்.

இதன் கண், 'மண்ணிய .... புண்ணிய ....' என்ற மடக்குக் கூறும், எதுகையும் காணப்படுகின்றது. இதே போன்று,

'பிறந்து சிறந்தவர்'

'இன்றைக்கும் .... என்றைக்கும்'

என்பன போன்ற சான்றுகளைக் காணமுடியும்.

## வினா அமைப்பில் வினாதலும் விடை கூறலும்

உரையாசிரியர்களுக்கே உரிய தனித்தன்மைமிகு நடை அல்லது பாணி வினாதலும் பின் விடை கூறுதலுமாகும். இவ்வகையில் ரா. ராகவையங்காரும் பல்வேறு நூற்களுக்கு உரையெழுதிய பெரும் புலவர். இவர், தம் உரைநடை நூல்களிலும் அத்தன்மைமிகு நடையிலேயே வினா எழுப்பி, விடை கூறும் முகத்தான் தெளிவுபடுத்தும் தன்மையினைக் கையாண்டுள்ளார்.

"இஃதன்றி, அறிவாற் சிவனென்று சிறப்பிக்கப்பட்ட திருவாதவூரடிகள் திவ்ய ஞானம் பெற்ற திருப்பெருந்துறையும் இச்சேது நாட்டதேயாயின் இதன் பெருமையை யாமே எடுத்துரைக்க வல்லேம்? இச்சேது நாட்டுள்ளாய திருவுத்தரகோசமங்கைத் தலத்தைத் தன்கட் கொண்ட ...." (ப. 46) என்ற வரிகள் சான்றுகளாகும்.

## அடைமொழியினைக் கொடுத்து விளக்குதல்

ஒரு கருத்தைச் சொல்லவரும் பொழுது அதனைச் சிறப்பித்து அதற்குரிய பல்வேறு கூறுகளையும் இணைத்துக் கூறுதலே

அடைமொழி கொடுத்து விளக்குதல் என்பதாகும். மகாவித்துவான் 'சேதுநாடும் தமிழும்' நூலின் தொடக்கத்தில் பரத கண்டத்தை அடைகொடுத்து விவரிக்கும் பாங்கில் அவரது நடை நலமும் இறை நலமும் ஒரு சேரப் புலனாகின்றன எனலாம்.

"தெய்வக் கொள்கையானும் தெய்வ ஞானங்களானும் அவை பற்றிய பெரு நூல்களானும் எவ்வுலகுந் தொன்றுதொட்டே ஏத்துதற் சிறப்புடைய இப்பரதகண்டத்துக்கு இருபெரும் வரம்பாகவுள்ள . . ." (ப. 41) என்கிறார். இதே போன்று சேதுமன்னர்களைக் கூறும்பொழுது,

"நம் மாட்சி பொருந்திய மஹாராஜரவர்கட்குத் திருத் தந்தையாரும் பெருங்கொடை வள்ளலுமாகிய பாஸ்கர சேதுபதி மஹாராஜா இத்தமிழின்பால் வைத்த அன்பு அவர்கள் இச்சங்கத்து அளித்த பெருங் கொடையானும்,

புலவரைப் போற்றுவதே கலைவாணிக்குப் பூசையென்ற
நிலவரை யாள்கின்ற வேந்தரினின் போனினைந்தவரியார்
சலவரைப் போற்றுதல் செய்யாமலென்றுந் தலைசிறந்த
நலவரைப் போற்றிய சீராஜராஜ நரேந்திரனே

என்று யான் அன்பாற் பாடியுள்ளேன்" (ப. 71) என்று குறிப்பிடுவதால் நன்றியால் அவரது உள்ளமும் எழுதுகோலும் போட்டி போட்டுக் கொண்டு விரைந்து தமிழருவியாகக் கொட்டுவதை அறியமுடிகிறது. மேலும்,

"இத்தகைச் சேது மன்னர் திருமரபும் அவர் போற்றும் திருத்தமிழும் தமிழ் வள்ளன்மையும் நீடுவாழ்கவென்று வாழ்த்துவதுடன் இத்தமிழ்ச் சங்கத்துக்கும் அதன் தலைவராகவுள்ள நம் மஹாராஜரவர்கட்கும் எல்லா நன்மையுந்தந் தருளுமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவடிகளைச் சிந்திக்கின்றேன்" (ப. 71) என்று கூறி இந்நூலை நிறைவு செய்கின்றார்.

இவ்வாறு சேது நாட்டின் தமிழ் மணத்தைத் தன் கை மணத்தால் சிறந்ததோர் 'விவரிப்பு நடைத்திறத்தால்' பல்வேறு நலங்களும் நயங்களும் புலனாகும் வகையில் படைத்துள்ள மகாவித்துவானின் தமிழ்ப்பணி என்றென்றும் போற்றுதற்குரியது.

ரா. ராகவையங்கார்,

நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவியவர்
ஆசிரியராகப் பணியாற்றியவர்
பாஷா கவி சேகராக விளங்கியவர்

சேதுபதி மன்னர்களின் ஆஸ்தானக் கவிஞர்
செந்தமிழ்ப் பத்திரிகாசிரியர்
பதிப்பாசிரியர்
நூலாசிரியர்

(உரைநடை
செய்யுள் - என்ற இருநிலையிலும் படைத்துள்ளார்.)

காலச் சூழலில் கனிந்த கவிஞர்
மொழியாக்கப் படைப்பாளர்
நயமிகு நாவலர் - பேச்சாளர்

என்று அனைத்துத் தளத்திலும் தமிழ்ப்பணியைச் செய்து மகாவித்துவான் என்ற சிறப்பினைப் பெற்றத் தமிழ் மகான் ஆவார். அன்னாரின் தமிழ்ப்பணியால் தமிழ் இலக்கிய உலகு பெரும் பயனைப் பெற்றது என்றால் மிகையன்று. அவரது தமிழ்ப்பணி இலக்கிய வரலாற்றில் ஒரு மைல்கல் பதித்துத் தமிழ்த் தடத்தை உருவாக்கியுள்ளது.

அவரது தமிழ் உடல் இன்றும் என்றும் தமிழ் உலகில் நின்று நிலவி வருகிறது.

"முத்தமிழும் வல்லாய்! முதுராகவ கவிஞ
இத்தரையில் எல்லாம் இலங்கினாய் - அத்தமிழ்த்தாய்
மன்மறைவு கண்ட வளநகர் போல் வாடிற்றே
உன் மறைவு கண்ட வுலகு" (ஆய்வுலகம், ப. 149)

என்ற செந்தமிழ்ப் பகுதி (ஆனிமாதம் 1946) இவரது புகழை எடுத்துரைக்கும் பகுதியாகும்.

## துணைநின்ற நூல்கள்

1. ஞானப் பிரகாசம், சே.ச & கமலையா, க.சி. (பதிப்பாசிரியர்கள்) ஆய்வுலகம் போற்றும் ஆசிரிய மணிகள்.

2. தமிழண்ணல், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, மறுபதிப்பு, 2002.

3. நீதிவாணன், ஜெ., நடையியல், முல்லை வெளியீடு, மதுரை, மு.ப. 1979.

4. ராகவையங்கார், ரா. சேதுநாடுந் தமிழும் - செந்தமிழ், தொகுதி கஙு. சனவரி 1915, பகுதி. 2.

5. ராகவையங்கார், ரா. ஸேது ஸம்ஸ்தான மகாவித்துவான், வஞ்சிமாநகர், செந்தமிழ்ப் பிரசுரம்-கவ, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1932.

6. ராகவையங்கார், ரா. (பரிசோதிக்கப்பட்டன) முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் (கOஅ) மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை, இரண்டாம் பதிப்பு, செந்தமிழ்ப் பிரசுரம்-கவ, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1932.

7. ராகவையங்கார், ரா. (பரிசோதிக்கப்பட்டன) ஐந்திணை ஐம்பது, செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை, மூன்றாம் பதிப்பு, 1935.

8. ராகவையங்கார், ரா. ஸேது ஸம்ஸ்தான மகாவித்துவான், வஞ்சிமாநகர், செந்தமிழ்ப் பிரசுரம்-கவ, மதுரை, இரண்டாம் பதிப்பு, 1935.

9. ராகவையங்கார், ரா. திருவடிமாலை, பி.என். அச்சுக்கூடம், சென்னை, 1933.

10. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 3, (ராகவையங்கார், ரா. பக். 946) தமிழ் பல்லைக்கழகம், தஞ்சை, 1988.

11. விமலானந்தம், மது.ச. தமிழ் இலக்கிய வரலாறு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1981.

*******

# வரலாற்று நோக்கில் பாரிகாதை

வ. இராசரத்தினம்

தமிழகத்து மண்ணோடும், மக்களோடும் மன்னர்களோடும் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளையே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய தேசியக் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலையைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற காப்பியமாகத் திகழ்வது ரா. ராகவையங்காரின் 'பாரிகாதை'. முடியுடை மன்னர்களான மூவேந்தரையும் வீரத்தாலும் கொடையாலும் விஞ்சியவனாகக் கருதப்படும் பாரியைக் காப்பியத்தலைவனாகக் கொண்டு திகழும் பாரிகாதையை வரலாற்று அடிப்படையில் நோக்கி வேளிர் யார்? பறம்பின் முற்றுகைக்கு மகண் மறுத்தல் தான் காரணமா? பறம்பை முற்றுகையிட்டது மூவேந்தர் தானா? மூவேந்தர் பாரியை வஞ்சித்துக் கொன்றார்களா? மூவேந்தரில் ஒருவரான செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் புகழ்ந்ததன் நோக்கம் என்ன? விச்சிக்கோவும், இருங்கோவேளும் பாரிமகளிரை வெறுத்ததற்கு மூவேந்தரிடம் கொண்ட அச்சம்தான் காரணமா? என்பன போன்ற வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடை காண முயல்வதாக இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியங்களில் முடியுடை மன்னர் மூவரையடுத்து, பல இடங்களில் சிறப்பித்துப் பேசப்படுபவர் வேளிர் என்னும் குறுநில மன்னர்கள். இதனைப் 'பல்கெழுவேந்தரும் வேளிரும்' என்ற புறப்பாடல் வரியும் 'இருபெரு வேந்தரொடு வேளிர்' என்ற மதுரைக்காஞ்சி வரியும் 'வேந்தரும் வேளிரும்' என்ற பதிற்றுப்பத்துத் தொடரும் உறுதிப்படுத்தும். எனவே தமிழகத்தின் பேரரசர்களாகிய மூவேந்தரையும் அடுத்து மதிக்கப்பட்ட சிற்றரசருள் இவ்வேளிரே சிறந்தவர்கள் என்பதை அறியலாம். இவர்கள் தமிழகத்துப் பழங்குடிகளே என்று ஒரு சாராரும் இவர்கள் வடநாட்டிலிருந்து வந்தேறியவர்கள் என ஒரு சாராரும் கூறுவர்.

"தமிழ்நாட்டுப் பழங்குடிகள் இவர்கள். தம்தொழில் வேற்றுமையால் பல பெயருற்றனர் எனவும் கூறும் இவர்களே வேளாளர். இவர்கள் உழுவித்துண்போர். உழுதுண்போர் என இருவகையர்; தமிழ்நாட்டில் இவர்கள் வேள் ஆவி, வேள் ஆய், வேள் எவ்வி, வேள் பாரி, வேள் பேகன் என்னும் பெயர்களால்

அழைக்கப்பட்டனர்" என அபிதான சிந்தாமணி (1982: 1519) கூறுகின்றது.

வேளிரைப்பற்றி விரிவாக ஆய்வு செய்த மு. இராகவையங்கார் "இதுகாறும் கூறியவற்றாற், தமிழ்நாட்டிற் பண்டைக்கால முதலே வருகின்ற 'வேளிர்' என்ற வகுப்பினர் கண்ணன் வழியினராய்த் துவாரகையினின்று வந்தேறியவரென வழங்கும் செய்தி, அவர் யாதவகுலத்தினர் என்பதை விளக்குகின்ற தென்பதும், இக்கொள்கைக்குப் பொருந்த வேளிர் துவாரகையினின்று வந்தவரென்று புறநானூற்று மேற்கோள் உண்டென்பதும், பாரத காலத்தையடுத்த யாதவர் தெற்கே வந்தேறியதைக் குறிப்பாக விளக்கும் செய்திகள் முன்னூல்களினின்று அறியப்படுதலோடு அவர் அக்காலத்தே தென்னாட்டிற்கு வந்து அரசியனாட்டினரென்றும் கர்ணபரம்பரை வடநாட்டிலும் வழங்குவதோடு வேளிர் யாதவக் கூட்டத்தவரேயென்பது, பிற்காலத்தில் துவாரகையினின்று வந்து தென்னாடாண்ட 'ஹொய்சளர்'. இவருடன் பல்லாற்றானும் ஒத்திருத்தலால் விளங்குவதென்பதும், வேள்பலத்தினின்று வந்தமையே அவ்விருவரும் வேளிர் எனவும் பேலாலரெனவும் பெயர் பெற்றதற்குக் காரணமென்பதும், இவ்வேளிர் என்னும் பெயர் வழக்கம் சளுக்கரசர்க்கும் படிக்கப் படுகின்றதென்பதும், இச்சளுக்கரும் யாதவ வகுப்பினரே என்பதும், முனிவரொருவரது தீர்த்த பாத்திரத்திற் தோன்றிய வரலாறு சளுக்கர்க்கும் பண்டை வேளிர்க்கும் உரியதாக அமைதலால், அவ்விருவரும் ஒரு குலத்துதித்தவரென்பதும், கொடுந்தமிழ் நாடுகளில் ஒன்றாகிய 'வேணாடு' என்பது இவ்யாதவரது புராதனநாட்டையே குறிப்பதாம் என்பதும், பண்டை வேளிர் தமிழ்நாட்டுக்கு வந்தேறிய காலம் பாரத காலத்தையடுத்த கி.மு. 11ஆம் நூற்றாண்டாகக் கொள்ளுதல் பொருந்துமென்பதும், வேளிர் பெருங்கூட்டம் தென்னாடடைந்து குடியேறி வாழ்ந்த வரலாறு இதுவென்பதும் விளங்கியவாறு கண்டுகொள்க". (செந்தமிழ் தொ. 3. ப. 7) என்னும் பகுதியில் வேளிர் வடநாட்டினர் என்னும் முடிவுக்கு வருகின்றார்.

"சங்க காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த வேளிர்களுள் இருங்கோவேள் என்னும் குறுநில மன்னனும் ஒருவன். இருங்கோவேளைப் பற்றிய கபிலரின் புறநானூற்றுப் பாடல்,

நீயே, வடபால் முனிவன் தடவினுள் தோன்றிச்,
செம்பு புனைந்து இயற்றிய சேண்நெடும் புரிசை,
உவரா ஈகைத், துவரை யாண்டு,
நாற்பத்து ஒன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே!

என்று குறிப்பிடுகின்றது. துவரை என்பது துவாரகையாகும். துவாரகையின் வேந்தரில் சிறப்பானவன் கண்ணன். இவன் பிறந்த துவாரகை இன்றைய குஜராத்தில் உள்ளது. குஜராத் நாட்டிலிருந்து வந்த மன்னர் வழியில் தமிழ் மன்னர்களாகத் திகழ்ந்தார்கள் என்று அறிகிறோம். இருங்கோவேளின் மரபினர் கொற்கை சூழ்ந்த பகுதியில் இன்னும் வாழ்ந்து வருகின்றனர் என்றும் (தெய்வச் செயல்புரம்) செக்காரக்குடி போன்ற ஊர்களில் இம்மரபினர் வாழ்கின்றனர் என்றும் ச. கணபதிராமன் தம் நூலில் (1988, ப.44) குறிப்பிட்டுள்ளார்.

மேற்கூறியவற்றை நோக்க வேளிரைப் பற்றி இருவிதமான கருத்துகள் நிலவுகின்றன. அபிதான சிந்தாமணி வேளிரைத் தமிழகத்தின் பழங்குடிகளாகக் குறிப்பிடுகின்றது. வேளிர் வரலாற்றைப் பலவாறு ஆய்வு செய்த மு. இராகவையங்காரும், கணபதிராமனும் வேளிர் வடநாட்டினர் என்று குறிப்பிடுகின்றனர். வேளிரைத் தமிழகத்துப் பழங்குடிகளாகக் கருதும் அபிதான சிந்தாமணி வேள் ஆவி, வேள் ஆய், வேள் எவ்வி, வேள் பாரி எனச் சில அரசர்களை மட்டுமே குறிப்பிடுகின்றது. பிற தமிழகராதிகளும் வேளிரைக் குறுநில மன்னர் என்றே குறிப்பிடுகின்றன. குடிமக்களாக அவர்கள் பேசப்படவில்லை. வேளிரை வட நாட்டினராகக் கருதும் மு. இராகவையங்காரும், கணபதிராமனும் வேளிர் கண்ணன் வழித்தோன்றல் என்றும் முனிவர் ஒருவரது தீர்த்தப் பாத்திரத்தில் பிறந்தவர் என்றும் குறிப்பிடுகின்றனர். கண்ணனை வரலாற்றுப் பாத்திரமாகக் கொள்ள முடியுமா? முனிவனின் தீர்த்த பாத்திரத்தில் ஒருவன் தோன்றினான் என்பதை வரலாற்று நிகழ்வாகக் கொள்ள முடியுமா? என்பவை மேலும் ஆய்வுக்குரியன.

பாண்டியரின் சிற்றரசர்களில் தலையாயவன் பாரி. கடையெழு வள்ளல்களிலும், வீரத்தாலும், கொடையாலும், விடாநட்பாலும் புகழ் பெற்றவன். கபிலர் என்னும் புலவர் பெருமானை ஆதரித்தவன். மதுரைக்குக் கீழ்ப்பாலுள்ள பறம்பு மலையையும் அதைச் சேர்ந்த முந்நூறு ஊர்களையும் ஆண்டவன். ஒரு முல்லைக்கொடி தனக்குப் பற்றுக்கோடு இன்றி வாடியபோது தன் தேரை அங்கு நிறுத்திவிட்டு வந்த வள்ளன்மையுடையவன். பாரியின் புகழால் பொறாமை கொண்ட முடியுடை மூவேந்தரும் பறம்பினை முற்றினர். அப்போரில் கபிலர் பாரிக்குப் பெரிதும் உதவினார். மூவேந்தரும் பாரியைப் போரில் வெல்ல இயலாமல் உபாயத்தால் கொன்றனர். கபிலர் அவன் மகளிர் இருவரையும் உடன் கூட்டிச் சென்று தக்கார்க்கு மணம் செய்து வைத்தார். பிறகு அப்புலவர் செல்வக் கடுங்கோவாழியாதன் என்னும் சேரன்

அவைக்களத்திற்குச் சென்று அங்கு அவனால் ஆதரிக்கப் பெற்றார் என்ற வரலாற்று ஆசிரியர்களின் கூற்று (ந. சுப்ரமண்யன் 1979; ப. 67), கபிலரின் கையறுநிலைப் பாடல்களுக்குத் துறைவகுத்தவர்களின் 'மகண் மறுத்தல் துறை' எனும் கூற்று, கல்வெட்டுகள் மற்றும் கர்ணபரம்பரை கதைகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இக்காப்பியம் படைக்கப்பட்டுள்ளது.

காப்பிய வளர்ச்சிக்குத் துணை நிற்கும் நிகழ்வாக அமைவது மகண் மறுத்தலாகும். வேளிர் குடிக்கும் மூவேந்தர் குடிக்கும் காலங்காலமாக நிகழும் வழக்குதான் இம்மணமுறை என்பதை,

> வேளிர் குடிக்குமூவேந்தர் குடிக்குநெடு
> நாளி னிகழு நறுமணத்தை – நீளவிசைத்
> தென்விழைவு தீர்ப்பிக்க வென்றான் வழுதியர்கோன்
> றன்மகிழ்மெய்ப் பாடு தர (பாரிகாதை, 177)

எனும் பாடல் வழித் தெளிவுபடுத்துகிறார். மேலும் பறம்புநாடு பாண்டிய நாட்டுக்குட்பட்ட பகுதியாகையால் பாண்டியனே பெண் கேட்டு வந்ததாகவும் குறிப்பிடுகின்றார். இதனை,

> "எல்லா நலனு மியைமடவாள் வேட்டறத்தா
> னல்லா னிளஞ்செழிய னானன் காண்" (பாரிகாதை, 185)

என்னும் பகுதியால் அறியலாம். இளஞ்செழியன் என்பதற்கு விளக்கம் கூறும் ஆசிரியர் இளமையிலே அரசு பூண்டவனாதலின் இளஞ்செழியன் என்றும், இதுவே பெயரென்பதும் பொருந்தும் என்றும் குறிப்பிடுவதிலிருந்து இளஞ்செழியன் என்னும் பாண்டியனே பாரிமகளிரை மணம் பேசி வந்தவன் என்பதும்; அவனது பட்டப் பெயரே இளஞ்செழியன்; இயற்பெயரல்ல என்பதும் புலனாகும்.

"வெற்றிவேற் செழியனென்னும் பாண்டியனிளஞ்செழியன்" தன் தந்தையிறக்குங்கால் கொற்கையாண்டிருந்தான். இக்கதை நிகழ்ச்சிப் பருவத்திலேயே அரச வாழ்க்கை பெற்றோனாவான். இவன் கண்ணகி கடுங்கோபமாற்ற நூறு பொற்கொல்லரை உயிர்ப் பலியூட்டினா னென்னுஞ் செய்தியொன்று தவிர அவன் விஷயம் மற்றொன்றும் புலப்படவில்லை" (செந்தமிழ் தொ. 4, பகுதி. 9, ப. 477) என்னும் கிருஷ்ணசாமி ஐயங்கார் கூற்றிலிருந்து பாண்டியனிளஞ்செழியன் என்னும் பட்டப்பெயரில் அரசாண்டவன் வெற்றிவேற் செழியனே என்பதும்; கோவலன் வழக்கில் நீதி தவறி அதன் காரணமாக உயிரிழந்த பாண்டியன் நெடுஞ்செழியனின் மகன் என்பதும் புலனாகும்.

"ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனுக்கு வெற்றிவேற்செழியன் எனும் சகோதரன் இருந்தான். அண்ணனின் மறைவை அறிந்த இளவல் மதுரைக்கு விரைந்து அரியணை ஏறினான். பின்னர் கண்ணகிக்குப் பெருமை சேர்க்க விழா எடுத்தான்" (1984: 24) என்று கோமதிநாயகம் கூறுகின்றார்.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் சிலப்பதிகாரத்தில் கூறப்படுபவன். இவன் ஏதோ ஒரு ஆரியப்படையை வென்றவன் போலும், இவனே கோவலனைக் கொல்ல உத்தரவிட்டவனாக அக்காப்பியம் கூறும். இவன் இறந்தபின் மதுரை தீக்கிரையாயிற்று. அதன்பின் கொற்கையில் இருந்து ஆண்டு வந்த இவன் தம்பி வெற்றிவேற் செழியன் மதுரையிலிருந்து ஆண்டான். இவன் காலத்தில் பாண்டி நாட்டிலும் பத்தினிக்கடவுள் வழிபாடு தொடங்கிற்று. இவனே சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன் என்பவன் என்று ந. சுப்பிரமண்யன் (1979:66) கூறுகின்றார்.

மேற்கூறிய கூற்றுகளை நோக்கும்போது கிருஷ்ணசாமி ஐயங்கார் பாண்டியன் நெடுஞ்செழியனின் மகனே இளஞ்செழியன் என்று கூறுகின்றார். வரலாற்று ஆசிரியர்களோ பாண்டியன் நெடுஞ்செழியனின் சகோதரனே இளஞ்செழியன் என்று குறிப்பிடுகின்றனர். எனினும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பின் பாண்டிய நாட்டை ஆண்டவன் வெற்றிவேற் செழியன் என்னும் இளஞ்செழியனே என்பதில் அனைவரும் ஒன்றுபடுகின்றனர்.

பாண்டியனிளஞ் செழியன் பெண் கேட்டு வந்ததையும் பாரி மறுத்துக் கூறியதையும் பின்வரும் பாடல்களில் காட்டுகின்றார்.

> மறுத்தே னெனவழங்கி மாறன்முன் சீர்த்தி
> பொறுத்தே னெனநீர் புகல்வீர் – வெறுத்தாற்
> பகைக்கஞ்சே னெல்லாம் பகுத்துணரும் நல்லோர்
> நகைக்கஞ்சு வேனென்பீர் நன்று (பாரிகாதை; 218)

பாண்டியன் முன்னர் மகண்மறுத்தேனெனச் சொல்லி இவ்வீகை மறுத்தலாற் பழி பொறுத்தேனாகேன் சீர்த்தி பொறுத்தேனாவேன் என்று நீர் விரும்பிக் கூறுவீராகுக என்பதாம். இம்மகண் மறுத்தல் காரணமாக என்னை வெறுத்தானாயின் அவ்வெறுப்பான் மூளும் பகைமைக்கு அஞ்சுவேனல்லேன் எனும் பாரியின் கூற்றாக வரும் பகுதியும்

> தன்னை யதிகனாத் தானினைந்தோ மற்றுலகா
> ளென்னை யெளியனா வெண்ணியோ – வென்னோ

*மகளீதல் செய்யான் மறுத்துவே ளெற்குத்*
*துகளீதல் செய்தான் றுணிந்து (பாரி காதை: 223)*

தன்னை மிக்கோனாகத் தானே கருதிக்கொண்டோ உலகாள் என்னைத் தன்னினுமெளியனாக வெண்ணியோ மற்றிவ்விரண்டும் அல்லவாயின் யாதோ; யார்க்கும் வேண்டியதையீயும் வேள் எற்கு ஈதல் செய்யான் துணிந்து மகஞ்மறுத்து, அம்மறுத்தவளவே யன்றி எற்குத் துகளும் ஈதல் செய்தான் என்றானாகக் கொள்க. மகளிரைத் தந்தீக என்று கேட்ட எற்கு மகளீதல் செய்யான் என்றது இருவருள் ஒருத்தியையும் ஈதற்குடன் படாது மறுத்தல் குறித்தது என பாண்டியன் கூற்றாக வரும் பகுதியும் புறநானூற்றுக் கபிலர் பாடல்களில் காணப்படும் திணை விளக்கங்களும் மூவேந்தரின் முற்றுகைக்கு மகண் மறுத்தலே காரணம் என்று கூறுகின்றன. புறநானூற்றில் பெண்கேட்டு வந்தது பற்றியோ பாரி மகண் மறுத்தது பற்றியோ நேரிடையான குறிப்புகள் இல்லை. ரா. ராகவையங்கார் பாரி மகளிரின் சிறப்பறிந்த பாண்டியன் இளஞ்செழியன் பெண் கேட்டு வந்ததாகக் குறிப்பிடுகின்றார். மகண் மறுத்தல் தான் இப்போருக்குக் காரணம் என்றால் போருக்குப்பின் நிகழ்வாக வரும்,

*'அண்ணல் நெடுவரை ஏறித் தந்தை*
*பெரிய நறவின், கூர் வேற் பாரியது*
*அருமை அறியார் போர்எதிர்ந்து வந்த*
*வலம் படுதானை வேந்தர்*
*பொலம் படைக் கலிமா எண்ணு வோரே*
*பீரை நாறிய சுரை இவர் மருங்கின்*
*ஈத்திலைக் குப்பை ஏறி உமணர்*
*உப்பு ஓய் ஒழுகை எண்ணுப மாதோ*
*நோகோ யானே! தேய்கமா காலை!" (புறம்: 116)*

எனும் கபிலர் கூற்றாக வரும் பாடற்பகுதியையும்

*'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்*
*எந்தையும் உடையேம்; எம் குன்றும் பிறர் கொளார்*
*இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவில்*
*வென்று எறி முரசின் வேந்தர் எம்*
*குன்றும் கொண்டார்; யாம் எந்தையும் இலமே!' (புறம்: 112)*

எனும் பாரி மகளிர் கூற்றாக வரும் பாடலையும் நோக்கப் பாரி இறந்த பிறகும் ஒரு திங்களுக்கு மேல் கபிலரும் பாரி மகளிரும் பறம்பிலே இருந்தார்கள் என்பதை அறியலாம்.

இப்போருக்கு மகண் மறுத்தல் தான் காரணம் என்றால் பாரி இறந்த பிறகு மகளிரைப் பாண்டியன் மணந்து இருக்க வேண்டும். மேலும் 'பூக்கும் அமயந் தெரிந்து கொள்ளவல்ல வண்டு புதிய புதிய மலர்களை விழைந்து போதல் போலத் தம் உளம் புதியர் புதியர் மகளிர்பாற் செல்வது காரணமாகப் பலரை விரும்பாநிற்கும் காவலருடைய தீயகாமத்தின் பொருட்டு அவர் ஏவியனவற்றைச் செய்யும் விலங்களையர் யாங்களல்லேம்' (பாரிகாதை: 217) எனவரும் பாடல் விளக்கத்தாலும் பாண்டியன் மலருக்கு மலர் தாவும் வண்டாகவும் தீய காமம் உடையவனாகவுமே காட்டப்படுவதாலும், பாரி இறந்தபின் அவரது மகளிரை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பான். அங்ஙனம் செய்யாமையே இப்போருக்கு 'மகண்மறுத்தல்' காரணம் அல்ல என்பதை உறுதிப்படுத்தும்.

அடுத்த நிலையில் பறம்பு மலையை முற்றுகையிட்டது மூவேந்தர்தானா? என்பதிலும் ஐயம் ஏற்படுகின்றது.

'நளிகொள் முரசின் மூவிரும் முற்றினும்'

'கடந்தடு தானை மூவிரும் கூடி'

'வென்று எறி முரசின் வேந்தர்'

'வலம்படு தானை வேந்தர்'

'பணை கெழு வேந்தர்'

எனவரும் புறப்பாடல் வரிகளை அடிப்படையாகக் கொண்டே சேர, சோழ, பாண்டியர்தாம் பறம்பை முற்றுகையிட்டது என்ற முடிவுக்கு வந்துள்ளார் என்பதை,

"பாரிக்குத் தென்னர் பகையென்றுல கொழுகச்
சேரற்குஞ் சோழற்குஞ் செய்திவிட்டார்" (பாரிகாதை: 374)

"பறம்பை யடைந்த கொடும் பாவியரிம் மூவர்" (பாரிகாதை: 401)

"மூவேந்தர் வெம்பகையோ மூண்ட தெனத் தினையுங்
கோவேளங் கச்சங் கொளானாகி" (பாரிகாதை: 379)

என்னும் பாடல் வரிகள் காட்டும்.

இச்சிக்கலுக்குத் தீர்வுகாணப் பாரியின் சமகாலத்துச் சேர சோழ பாண்டியர்கள் யார் என்பதை ஆராய்தல் அவசியமாகிறது.

"பத்தினி தேவிக்கு ஆலயம் சமைத்துப் பெருவேள்வி விளைத்த காலத்து அவ்வேள்விக்கண் வந்திருந்த மன்னர்களில்

கடல்சூழிலங்கைக் கயவாகுவேந்தன் ஒருவன். இக்கயவாகுவும் மதுரையில் இளஞ்செழியனும் உறையூரிற் கிள்ளியும் பத்தினிக் கடவுளுக்கு ஆலயம் நிருமித்தனராதலின் அக்கயவாகு அப்பெயர் கொண்ட இருவருள் முதல்வனோ இரண்டாமவனோ என்று விமரிசைப்படுத்த வேண்டும். மகாவம்சத்தின் பிரகாரம் முதற்கயவாகு கி.பி. 113 முதல் 135 வரை இலங்கை முழுவதும் ஒருவனேயாகி ஆண்டவன். (செந்தமிழ் தொ. 4, பகுதி 10, ப. 511) என வரும் கிருஷ்ணசாமி ஐயங்காரின் கூற்றையும்,

"செங்குட்டுவனின் தகப்பன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கிபி. 100இல் தனக்கும் சோழ அரசன் இரண்டாம் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளிக்கும் நடந்த போரில் இருபெரு வேந்தரும் பொருது களத்தொழிய, குட்டுவனின் தாய் நற்சோனை, சில புலவர் நினைக்கிறபடி உடன்கட்டை ஏறவில்லை. செங்குட்டுவன் உடனே முடிசூடிப் பட்டமெய்தினான். அப்போது அவனுக்கு வயது 20. ஆதலின் குட்டுவன் கி.பி. 80இல் பிறந்தவனாவான். 55 ஆண்டுகள் ஆட்சி செய்தான். 75 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான். செல்வக்கடுங்கோ வாழிஆதனின் காலம் கி.பி. 90 - கி.பி. 125" (1972:71) என்னும் சிதம்பரனாரின் கூற்றையும், கபிலர் பாடிய பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் பாட்டுடைத்தலைவன் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பதையும் வைத்துப் பார்க்கும் போது பாண்டியன் இளஞ்செழியன், உறையூர் கிள்ளி, சேரன் செங்குட்டுவன் செல்வக் கடுங்கோ வாழியாதன் ஆகியோர் சமகாலத்தவர் என்பது புலனாகும்.

படையும் கொடியும் குடியும் முரசும்
நடைநவில் புரவியும் களிருந் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய (தொல் மரபு: 72)

எனும் தொல்காப்பியருடைய கூற்றை அடிப்படையாகக் கொண்டே படையும் முரசும் மூவரோடு இணைந்து வந்துவிடத்து அது சேர, சோழ, பாண்டியர்களுக்கு மட்டுமே உரிமையுடையதாகக் கருதி பாரியின் மீது படையெடுத்து வந்தது சேர, சோழ, பாண்டியர்களே என்ற முடிவுக்கு வந்துவிட்டனர்.

அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாடப்புகுந்த ஔவையார் "இமிழ்குரல் முரசின் எழுவரொடு முரணி" என்னுமிடத்து முரசை எழுவருக்கும் உரியதாகக் குறிப்பிடுவதால் மூவேந்தரைத் தவிர பிறரும் முரசுடையவராக இருந்தனர் என்பது தெளிவு.

"ஏரோர்க்கு நிழன்ற கோலினை" எனச் சிறுபாணாற்று நல்லியக்கோடனையும் 'கோல்செம்மையின்' எனக் கபிலர் பாரியையும் பாடியிருப்பதால் செங்கோல் வேளிருக்கும், குறுநில மன்னருக்கும் உரியதாக இருந்தது என்பது புலனாகும்.

'தேர்வண்பாரி படுமணி யானைப் பறம்பிற் கோமான் நெடுமாப்பாரி' என வரும் பகுதிகளால் தேரும் களிரும் குறுநில மன்னர்களுக்கு உரியதாக இருத்தல் புலனாகும்.

சேர, சோழ, பாண்டியராகிய பேரரசர்களுக்குக் கூறியவை சங்க காலத்திலேயே குறுநில மன்னர்களுக்கும் வேளிருக்கும் உரிமையாகி இருப்பது புலனாகும்.

மேலும் சேரமான் கடுங்கோ வாழியாதன் வள்ளல் பாரியைப் போலப் பாவலர்களுக்கு வரையாது கொடுக்கும் வண்மையன் என்றும் நல்ல குணமுடையன் என்றும் கபிலர் கேள்விப்பட்டார். பாரி இறந்தபிறகு அவனைப் போன்ற ஒரு வள்ளல் இருப்பானாயின் அவனைக் காணவேண்டுமென்ற அவா அவருக்குண்டாகியது. பாரிமகளிரை ஒரு பார்ப்பனரிடம் ஒப்படைத்துவிட்டுப் புலவர் சேர நாட்டை நோக்கி நடந்து சென்றார். மன்னனைக் கண்டார். அவனுடைய புகழையும் குணங்களையும், செங்கோன் முறைமையையும் பத்துப்பாடல்களில் வைத்துப் பாடினார். காவலன் கடுங்கோவாழியாதன் அவற்றைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். கபிலருக்குச் சிறுபுறமென நூறாயிரங்காணம் கொடுத்து நன்றா வென்னும் குன்றேறி நின்று தான் கண்ட நாடெல்லாம் காட்டிக் கொடுத்தான் என்று கோவிந்த மூப்பனார் (பாரிவள்ளல் ப. 40) 'கொடை மன்னன் பாரிவள்ளல்' என்னும் தமது கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

> "மலர்ந்த மார்பின் மாவண் பாரி
> முழவுமண் புலர இரவலர் இனைய
> வாராச் சேட்புலம் படர்ந்தோன்" (பதிற்றுப்பத்து: 61)

எனக் கபிலர் கூற்றாக வரும் பதிற்றுப்பத்துப் பாடல் வரியால் இச்சேரன் காலத்தில் பாரி இறந்துபட்டான் என அறியக்கிடக்கின்றது. பாரி இறந்தபின் கபிலர் சேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் என்பவன் "ஈத்த திரங்கான் ஈத்தொறு மகிழான், ஈத்தொறும் மாவள்ளியன்" எனக் கேள்விப்பட்டு, சேர நாடு சென்ற, செல்வக் கடுங்கோவின் பேரில் பத்துப்பாட்டுக்கள் பாடிப் பரிசில் பெற்றார் என அறிகின்றோம். நன்றா என்ற குன்று இக்காலத்து "தோன்றாமலை" என வழங்கும் சேலம் மாவட்டம், ஊற்றங்கரை வட்டத்துத் தென்பகுதியில், மஞ்ச வாடிகணவாயின் வடபால் உள்ளது

என்று சேரன் செங்குட்டுவன் நூலாசிரியர் (பக்கம் 16) பகர்கின்றார். மேற்கூறிய கூற்றுகளை நோக்கும் பொழுது பாரி இறந்த பிறகு கபிலர் செல்வக் கடுங்கோவாழியாதனைச் சந்தித்தார் என்பது புலனாகும். பறம்பை முற்றுகையிட்ட மூவரில் செல்வக்கடுங்கோ வாழியாதன் இருந்திருப்பின்

"சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரையொலி கூந்தல் விறலியர் பின்வர,
ஆடினிர் பாடினிர் செலினே,
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே" (புறம்: 109)

என்று இழித்தும் பழித்தும் பாடிவிட்டு மீண்டும் அவனிடமே சென்று பரிசில் பெற்றிருக்க வாய்ப்பில்லை என்பதாலும், அவனைச் சந்திக்க வேண்டும் என்ற அவாவின் காரணமாக அவனைச் சந்தித்ததாகப் பதிற்றுப்பத்துப்பாடல் கூறுவதாலும் முற்றுகையிட்ட மூவரில் செல்வக்கடுங்கோ வாழியாதன் இல்லை என்பது புலனாகும்.

இனி செல்வக் கடுங்கோவாழியாதனின் சமகாலத்து மற்றொரு சேரமன்னனான சேரன்செங்குட்டுவன்தான் முற்றுகையிட்ட மூவரில் ஒருவனாக இருக்க வேண்டும்.

பறம்புமலையோடு முந்நூறு ஊர்களைக்கொண்ட பறம்பு நாட்டில் 300 ஊர்களையும் இரவலர்களுக்குக் கொடுத்து விட்டு, பறம்புமலையை மட்டும் உரிமையாகயுடைய பாரி, இமயம் வரை படையெடுத்துச் சென்று

"வடதிசை மன்னர் மன்னெயில் முருக்கிக்
கவடி வித்திய கழுதையேர் உழவன்
குடவர் கோமானை" (சிலம்பு. 27:225–227)

வெற்றி கொண்டான் என்பது பொருத்தமானதாக இல்லை. எனவே இதுகாறும் கண்டவற்றால் படையும், கோலும், முரசும், சேர, சோழ, பாண்டியர்களுக்கு மட்டுமல்லாது வேளிருக்கும் குறுநில மன்னர்களுக்கும் உண்டு என்பதாலும், முற்றுகையின் போது பழித்துப் பேசிவிட்டுக் கபிலர் இரவலனாகப் பாடிச்சென்று செல்வக் கடுங்கோவாழியாதனிடம் பரிசு பெற்றிருக்க இயலாது என்பதாலும், இமயம் வரை படை நடத்திச் சென்று வெற்றி வாகை சூடிய சேரன் செங்குட்டுவனை ஒரு குறுநில மன்னனான பாரி வெற்றி கொண்டிருக்க இயலாது என்பதாலும் பறம்பை முற்றுகையிட்டது சேர, சோழ, பாண்டியர்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை என்ற முடிவுக்கு வரலாம். முடியுடை மன்னர் மூவரும் தோற்றுப் பின் வஞ்சித்து அவனைக் கொன்றனர் என்பதை

தளர்ந்தே யுயிர்கொண்டு தப்பியகோ மூவேந்த
ருளந்தேர் வுறாம லுயங்கி – விளைந்த
திதுவாயி னென்னோ விவன்செய்வ தென்று
பொதுவாக வாராய்ந்தார் புக்கு (பாரிகாதை 407)

"படை கொன்ற தில்லையாற் பாரியை யன்னான்
கொடை கொன்றது" (பாரிகாதை 492)

என்னும் பாடல்களில் ஆசிரியர் புலப்படுத்துகின்றார்.

தமிழருடைய வீரத்துக்கு அறமே அடிப்படை இதை "புகழ் எனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்" (புறம் 9) என்னும் புறப்பாடல் வரிகளால் அறியலாம். வெண்ணிப் போர்க் காலத்தில் கரிகாலன் விட்ட அம்பு மார்பைத் துளைத்துப் புறமுதுகினின்று ஊடுறுவியதையே பழியாகக் கருதி நாணிச் சேரமான் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்து உயிர் விட்டதாகப் புறப்பாடல் (66) கூறுகின்றது. இது இறக்கும் போதும் புகழோடு இறக்க வேண்டும் என்னும் தமிழர் உணர்வைக் காட்டுகின்றது. எனவே, பாரியை வஞ்சித்துக் கொன்ற பழிச்செயலை முடியுடை மன்னர் மூவரும் செய்திருக்க மாட்டார்கள் என்ற முடிவுக்கு வரலாம்.

மேலும் பாரி மகளிரை மணமுடிக்க எண்ணிப் பாரி இறப்புக்குக் காரணமானவனாகக் கருதப்படுபவன் வெற்றிவேற் செழியன். இவன், சேரன் செங்குட்டுவன் வடநாட்டுப் போரில் புறமுதுகிட்டு ஓடிய கனக விசயரைச் சிறைப்பிடித்து வந்ததையே

அமர்க்களம் அரசனது ஆகத்துறந்து
தவப்பெருங் கோலம் கொண்டோர் தம்மேற்
கொதியழல் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது என்றனன் போர்வெல் செழியன்

(சிலம்பு. 28: 104–107)

சோழனும் இக்குற்றத்தை இகழ்ந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. புறமுதுகிட்டு ஓடிய அரசனைக் கைது செய்து கொண்டு வந்ததையே பழிச்செயலாகக் கருதும் வெற்றிவேற் செழியன், வஞ்சித்துக்கொல்லும் இழிசெயலை ஒருபோதும் செய்திருக்க மாட்டான் என்பது தெளிவு. பாரி இறந்த பிறகு கபிலர் பாரிமகளிரை அழைத்துக் கொண்டு வேளிர் மன்னர்களான விச்சிக்கோன் மற்றும் இருங்கோவேளிடம் சென்று மணம் பேசியபோது அவர்கள் சேர, சோழ, பாண்டியர்களுக்கு அஞ்சி மறுத்து விட்டதாகவே ஆசிரியர் கருதினார் என்பதை "அவனு

முடிவேந்தற் கஞ்சி யிகழ" (பாரிகாதை. 560) என்னும் தொடரால் அறியலாம். கபிலர்,

> "யானே பரிசிலன் மன்னும் அந்தணன்;நீயே
> வரிசையில் வணங்கும் வாள்மேம் படுநன்;
> நினக்குயான் கொடுப்பக் கொண்மதி"

என விச்சிக்கோனைப் பார்த்துக் கூறியதற்கும்

> "அந்தணன், புலவன், கொண்டுவந் தனனே;
> யான்தர, இவரைக் கொண்மதி"

என இருங்கோவேளைப் பார்த்துக் கூறியதற்கும் விளக்கம் கூறும் ராகவையங்கார் 'விச்சிக்கோனிடையான் கொடுப்பக் கொண்மதி' (புறம் 200) என்று மிக்கோன் கூற்றாற் கூறிய கபிலர் "யான்றரக் கொண்மதி" (புறம் 201) என ஒப்போன் கூற்றாற் கூறியது இவ்விருங்கோவேள் அவனினும் உயர்ந்தவனாதல் புலப்படுத்து வதற்குப் போலும் என்று கூறுகின்றார்.

பேசுவோன் கேட்போனுக்கு இடையிலான சமூக நிலை, வயது ஆகியவற்றை வைத்துதான் கூற்று அமையும். ஆனால் ஆசிரியர் விச்சிக்கோனிடம் 'கொடுப்பக் கொள்' என உயர்ந்தோன் கூற்றால் கூறி, இருங்கோவேளிடம் 'யான் தரக் கொண்மதி' என ஒப்போன் கூற்றால் கூறியது விச்சிக்கோனை விட இருங்கோவேள் உயர்ந்தவன் என்பதைப் புலப்படுத்துவதற்கு எனக் கூறுகின்றார்.

புறப்பாட்டுரைகாரர் (202) "இப்பொழுது எவ்விதொல் குடிப்படீஇயர், இவர் பாரிமகளிர் என்ற புன்சொல்லைப் பொறுப்பாயாக" என இயைத்துரைத்தவாற்றானும் எவ்விகுடியில் வந்தவன் இருங்கோவேள் என்பது உணரலாம். இருபுதல்வரையுடைய இருங்கோவேள் ஆகிய தந்தையை நோக்கிக் கபிலர் கூறினாரென்பது பொருந்தும். விச்சிக்கோவை நோக்கிக் கபிலர் கூறிய புறப்பாட்டில் (200) "நினக்கியான் கொடுப்பக் கொண்மதி" என்றவர் இருங்கோவேளை நோக்கிக் கூறியபாட்டில் (201) நினக்கு என்று கூறாது "யான்றர விவரைக் கொண்மதி" என்றொழிந்த நயத்தானும்இது துணிக. இதற்கியையவே இவன்பால் "எவ்விதொல்குடிப்படீஇயர் மற்றியவர், கைவண்பாரி மகளிர்" (புறம் 202) என்றதனையுநோக்கிக் கொள்க. இனிக் கபிலர் இவனை "ஆண்கடனுடைமையிற் பாண்கடனாற்றிய வொலியற் கண்ணிப் புலிகடிமாஅல்" எனப்பாடுதலானும் இவன் பிராய முதிர்ந்தவனாத லுய்த்துணரலாம்.

புறப்பாட்டுரைகாரர் விச்சிக்கோன் ஆகிய மணமகனை நோக்கி "நினக்குக் யான் கொடுக்கக் கொள்" என்றவர் இருங்கோவேள் ஆகிய தந்தையை நோக்கி 'யான் தர இவரைக் கொண்மதி' என்றார். என்று கூறுவர்.

இங்கு,

"விளங்குமணிக் கொடும்பூண், விச்சிக்கோவே
இவரே 'பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும்பு இருப்பப் பாடா தாயினும்,
கறங்குமணி நெடுந்தேர் கொள்க!' எனக் கொடுத்த
பரந்து ஓங்கு சிறப்பின் பாரிமகளிர்" (புறம்: 200)

என அறிமுகம் செய்திருந்தாலே போதுமானது. அதற்குமேல் "யானே பரிசிலன் மன்னும் அந்தணன்" என யான் இரவலன் என்றாலும் கொடுக்கும் தகுதியுடைய அந்தணன் என உயர்ந்தோனாகத் தன்னையும், இழிந்தவனாக விச்சிக்கோனையும் கருதியதாலேயே அவனைப் பார்த்து "நினக்கு யான் கொடுப்பக் கொள்" என உயர்ந்தோன் கூற்றாகக் கூறினார் எனல் பொருந்தும். "பார்ப்பார்க் கல்லது பணிபறி யலையே" எனப் பதிற்றுப்பத்தில் செல்வக் கடுங்கோவாழியாதனைக் கூறிய கூற்றும் இதனை உறுதிப்படுத்தும்.

இதுகாறும் கண்டவற்றால் பின்வரும் ஆய்வு முடிவுகள் பெறப்படுகின்றன.

பாரி இறந்த பிறகும் ஏறத்தாழ ஒரு திங்கள் பாரிமகளிர் பறம்பு மலையிலே தங்கி இருந்ததால் பாரியின் மீது நிகழ்ந்த படையெடுப்பிற்கு 'மகண் மறுத்தல்' காரணம் அல்ல என்பது தெளிவு.

சேர, சோழ, பாண்டியரைப் போலவே வேளிருக்கும், குறுநில மன்னருக்கும் முரசும், முடியும், கோலும் இருந்ததால் முரசு, மூவர் எனும் சொற்களை வைத்துக் கொண்டு பறம்பை முற்றுகையிட்டது சேர, சோழ, பாண்டியர்தாம் என்ற முடிவுக்கு வர இயலாது என்பது தெளிவு.

பாரி இறந்த பிறகு கபிலர் மூவேந்தரில் ஒருவரான செல்வக் கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்து பாடிப் பெரும் பரிசு பெற்றிருப்பதாலும் பறம்பை முற்றுகையிட்டது மூவேந்தர் அல்ல என்ற முடிவுக்கு வரலாம்.

பாரியின் சமகாலத்துச் சேர மன்னர்களுள் ஒருவனும் இமையம் வரை படை நடத்திச் சென்று வெற்றி வாகை

சூடியவனுமான சேரன் செங்குட்டுவன் ஒரு குறுநில மன்னனிடம் தோற்றான் என்பது ஏற்புடையதாக இல்லை என்பதாலும் பறம்பை முற்றுகையிட்டது மூவேந்தர் அல்ல என்ற முடிவுக்கு வரலாம்.

புகழெனின் உயிரையும் கொடுத்து, பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ள விரும்பாதவர்கள் தமிழரசர்கள் என்பதாலும், புறமுதுகிட்ட கனகவிசயரைச் சிறைசெய்த சேரன் செங்குட்டுவன் செயலையே பழிச்செயலாகக் கருதியதாலும் பாரியை வஞ்சித்துக் கொன்ற இழிசெயலை மூவேந்தர் செய்திருக்க வாய்ப்பில்லை எனலாம்.

இருங்கோவேளும், விச்சிக்கோவும் பாரி மகளிரை மணக்க மறுத்ததற்குச் சேர, சோழ, பாண்டியர் மீது கொண்ட அச்சம் காரணம் அல்ல; கபிலரின் அணுகு முறையே காரணம் என்பது தெளிவு.

## பயன்பட்ட நூல்கள்

1. ராகவையங்கார். ரா., **பாரிகாதை**, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர், 1978.
2. இராகவையங்கார். மு., **வேளிர் வரலாறு**, செந்தமிழ் தொ-3, ப. 7, மதுரைத் தமிழ்ச் சங்கம்.
3. கிருஷ்ணசாமி அய்யங்கார், **கடைவள்ளலார் காலம்**, செந்தமிழ் தொ-4, ப. 7, மதுரைத் தமிழ்ச் சங்கம்.
4. கோமதி நாயகம், **தென்னிந்திய வரலாறு (சங்க காலம் முதல் இன்று வரை)**, நாராயணம்மாள் பதிப்பகம், மதுரை, 1984.
5. சிங்காரவேலு முதலியார், ஆ., **அபிதான சிந்தாமணி**, ஏசியன் எடுகேஷனல் சர்வீஸ், புதுதில்லி, 1982.
6. சிதம்பரனார், அ., சேரர் வரலாறு, கழக வெளியீடு, மதுரை, 1972.
7. சுப்ரமண்யன், ந., **தமிழக வரலாறு**, என்.எஸ். பப்ளிகேஷன், மதுரை, 1979.

**சிலப்பதிகாரம்**, உ.வே.சா., பதிப்பு, 1955.

**தொல்காப்பியம்**, பொருளதிகாரம், கழகம், 1967.

**பதிற்றுப்பத்து**, உ.வே.சா., பதிப்பு, 1980.

புறநானூறு, உ.வே.சா. பதிப்பு, 1971.

******

# பதிப்புப் பணி

சு. கௌசல்யா

பதிப்பு, உரை, ஆராய்ச்சி, சொற்பொழிவு, செய்யுள், மொழிபெயர்ப்பு, சமயம், மொழியியல், நூலியற்றல், இதழாசிரியர், பாடம் பயிற்றல், ஏடு திரட்டல், வரலாறு, இலக்கியம் எனும் பதினைந்து துறைகளில் முன்னோடியாகப் பணியாற்றியவர் ரா. ராகவையங்கார். ஆய்வுலகம் போற்றும் சிறந்த அறிஞராக விளங்கிய இவர், 1901 ஆம் ஆண்டு பாண்டித்துரைத் தேவரால் தோற்றுவிக்கப் பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நூற்பதிப்பு ஆராய்ச்சித் துறைத் தலைவராக இருந்து பல நூற்பதிப்பு, நூலாராய்ச்சி ஆகியவற்றை மேற்கொண்டு, பல அரிய நூற்களைச் 'செந்தமிழ்' இதழின் வாயிலாக வெளியிட்டு உள்ளார்.

## ரா. ராகவையங்கார் பதிப்பித்த நூல்கள்

இவர், சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு, மற்றும் பிற நூல்களையும் 'செந்தமிழ்' இதழின் வாயிலாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

### சங்க நூல்கள்

1. அகநானூறு
2. பெரும்பாணாற்றுப் படை
3. குறுந்தொகை விளக்கம்
4. பட்டினப்பாலை

### பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

1. இனியது நாற்பது
2. ஐந்திணை ஐம்பது
3. திணைமாலை நூற்றைம்பது
4. நான்மணிக்கடிகை

### பிறநூல்கள்

1. கனா நூல்
2. திருநூற்றந்தாதி
3. முத்தொள்ளாயிரச் செய்யுட்கள்
4. புலவராற்றுப்படை

இவற்றில் இனியவை நாற்பது, திணைமாலை நூற்றைம்பது, திருநூற்றந்தாதி, கனா நூல் ஆகிய நூற்களை ரா. ராகவையங்கார் பதிப்பித்துள்ள திறத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பதிப்பு நூல்கள்: ஓர் அறிமுகம்

### 1. இனியது நாற்பது*

1920ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகச் 'செந்தமிழ்' இதழில் ரா. ராகவையங்காரால் வெளிவந்தது 'இனியது நாற்பது'. இந்நூலை இயற்றியவர் பூதஞ்சேந்தனார் ஆவார். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது கடைச்சங்கம் மருவிய காலத்தது ஆகும். இதிலுள்ள பாடல்கள் வெண்பாக்களால் ஆனது. ஒவ்வொரு வெண்பாவிலும் மும்மூன்று பொருள் கொண்டு முடிவாக நூற்றி இருபத்து ஏழு இனிமையான கருத்துகளை எடுத்துரைக்கிறது இந்நூல்.

### 2. திணைமாலை நூற்றைம்பது

இதன் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிதமேதாவியார் ஆவார். 1927ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகச் 'செந்தமிழ்' இதழில் வெளிவந்தது இந்நூல். இந்நூலும் பதினெண்கீழ்க்கணக்கு நூற்களின்பாற்பட்டது. இந்நூல் அகத்திணை ஒழுக்கத்தினை நூற்றைம்பது வெண்பாக்களில் பாடித் திணைமாலை நூற்றைம்பது எனப் பெயர் பெற்றது. இந்நூலில் திணை வைப்பு முறை குறிஞ்சி, நெய்தல், பாலை, முல்லை, மருதம் என அமைக்கப்பட்டுள்ளது.

### 3. திருநூற்றந்தாதி

இந்நூலின் ஆசிரியர் அவிரோதி ஆழ்வார் ஆவார். 1935ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாகச் 'செந்தமிழ்' வெளியிட்டு உள்ளது. இது நூறு கலித்துறைப் பாடல்களால் அந்தாதியாக அமைக்கப் பட்டுள்ள நூலாகும். இது சொல்லாலும் பொருளாலும் சுவைமிக்கது. இந்நூல் அருகக் கடவுளைப் புகழ்ந்து பாடுவதாக அமைக்கப்பட்டதால் ஜைனர்கள் இந்நூலைப் போற்றி இருக்கின்றனர் எனத் தெரிகிறது.

### 4. கனா நூல்

இந்நூலாசிரியர் பொன்னவன் ஆவார். 1920ஆம் ஆண்டு 'இனியது நாற்பது' என்ற நூலுடன் இணைந்து 'செந்தமிழில்'

---

* இனியவை நாற்பது என்பதை ஆசிரியர் இனியது நாற்பது என்றே குறிப்பிடுகின்றார்.

இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. இந்நூல் முப்பது பாடல்களைக் கொண்டது. முப்பது பாடல்களும் கனவின் பயனை எடுத்துக் கூறுகிறது. இந்நூல் அடியார்க்கு நல்லார் காலத்திற்கு முந்தையது என அறிய முடிகிறது.

## நூலாசிரியர்கள் பற்றிய செய்திகள்

ரா. ராகவையங்கார் ஒவ்வொரு நூலைப் பதிப்பிக்கும் போதும் அந்நூலாசிரியர் பற்றிய அரிய கருத்துகளை தம் முன்னுரையில் கூறிச் செல்கிறார். இவ்வாறு அவர் கூறிச் செல்வது, இந்நூலை வாசிப்பவர்களுக்கு நூலாசிரியர் பற்றிய கருத்துகளை முழுமையாக அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கிறது.

இனியவை நாற்பது ஆசிரியர் பூதஞ்சேந்தனார் பற்றி "பூதஞ்சேந்தன் என்பது நிலைமொழி அன்கெட்டு, அம்முச்சாரியை பெற்றுப் புணர்ந்தது. இச்சாரியைப் புணர்ச்சி நிலைவருமொழிகளை முறையே தந்தையும் மகனுமான முறைப் பெயர்களாக்க வருமென்பது "அப்பெயர் மெய்யொழித்து" என்னுந் தொல்காப்பியச் (எழுத். புள்ளி. ருரு) சூத்திரத்தாற் பெறப் படுதலின், 'பூதஞ்சேந்தனார்' என்பதற்குப் பூதற்கு மகனாகிய சேந்தன் என்பது கொள்க. ஆசிரியர் நச்சினார்க்கினியர் அச்சூத்திரத்திற்கு 'கொற்றங் கொற்றனார்' என உதாரணங் காட்டினார். இதனால் இந்நூலாசிரியர் சேந்தன் என்னும் பெயருடையார் என்பதும் இவர் தந்தை பூதனார் என்பதும் நன்கறியலாவன. தந்தையாகிய பூதனார்க்கு 'மதுரைத் தமிழாசிரியர்' என்னுஞ் சிறப்புப் பெயருமுண்டென்பது சேந்தனாரது அடைமொழிகளாற் புலப்படுகின்றது" என்று ஆசிரியரின் பெயர்க் காரணத்தை விளக்கிச் செல்கிறார் ரா. ராகவையங்கார்.

திணைமாலை நூற்றைம்பதின் நூலாசிரியர் கணிமேதாவி யாரும் ஏலாதி நூல் செய்த கணிமேதாவியாரும் ஒருவரே எனக் கூறி, அவர் மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் என்றும் கூறுகிறார். இதனை ஏலாதியில் கூறப்படும் சிறப்புப் பாயிரத்தை எடுத்துக் காட்டி உறுதி செய்கிறார்.

"இல்லறநூ லேற்ற துறவறநூ லேயுங்காற்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து – நல்ல
வணிமேதை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து"

என்ற சிறப்புப் பாயிரத்தால் கணிமேதாவியார் இல்லறவின்பப் பகுதி பற்றி நூல் செய்தமை புலப்படுகிறது என்பதை விளக்குகிறார் ரா. ராகவையங்கார்.

திருநூற்றந்தாதி நூலாசிரியரான அவிரோதியாழ்வார், அவிரோதி நாதர் எனப் பெயர் பெற்றவர்; வைணவ சமயத்தைச் சேர்ந்த இவர், மயிலையில் நேமிசந்திரஸ்வாமி சந்நிதியில் ஜைன சமய ஆச்சாரியார் ஒருவர் மாணாக்கர்களுக்கு உபதேசித்துக் கொண்டிருந்த போது அங்குச் சென்று அவர் கூறிய அறவுரைகளைப் புரிந்து கொள்ள முடியாமல் அவரிடம் விளக்கம் கேட்க, அவரோ ஜைன சமயத்தவர்களன்றி ஏனையோர்க்கு இந்நுணுக்கங்கள் உரைக்கப்பட மாட்டாது எனக் கூறியதைக் கேட்டு, அப்போதே, அச்சமயப் பிரவேசஞ் செய்து, நேமிநாதர் கோயிலை ஒருமுறை வலம் வருவதற்கு உள்ளேயே இந்த நூற்றந்தாதியைப் பாடி முடித்தார் எனவும், பின்பு ஜைன சமயப் பெரியாரால் உபதேசம் பெற்றார் என ஜைனர் கூறுகின்றனர் எனவும் கூறிச் செல்கிறார். மேலும் ஆழ்வார் என்ற பெயர் வைணவப் பெரியார்க்கன்றிப் பௌத்த சமயத்தாருக்கும் வழங்கப்பட்டிருத்தலை 'நீலகேசித் தெருட்டுரையான் அறியப் படுகின்றது' எனவும் விளக்கிச் செல்வதோடு, இக்கதையின் உண்மை அவர் காலத்தே அறிதல் அரிதாக உள்ளது எனவும் கூறிச் செல்கிறார்.

கனாநூல் இயற்றிய ஆசிரியர் பொன்னவன் பற்றிய செய்திகளையும் அந்நூலின் முன்னுரையில் கூறிச் செல்கிறார் ரா. ராகவையங்கார். கனவுப் பயன் பற்றி முதலில் தேவ குருவாகிய வியாழனால் ஒரு நூல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் பொருளை விளக்கி அம்பர் எனும் நகரத்திலிருந்த கணப்புரத்தேவன் என்பான் சொல்ல, அதைக் கேட்டுப் பொன்னவன் இந்நூலை அந்தாதியாக முப்பது பாடல்களாக அமைத்தார் என்றும் ஊகிக்கப்படுகின்றன என்கிறார் ரா. ராகவையங்கார். "எந்தை கணபுரத் தேவன் றன் கட்டுரையே" என இந்நூல் 29ஆம் பாடலில் காண்டலால் இந்நூலை இயற்றியவர் கணபுரத்தேவன் அல்ல என்பதும் 'கட்டுரை யார்மகப் பொன்னவன் சொன்ன கனவு நன்னூ லெட்டு மிரண்டு மிருபதும்' என இந்நூலின் இறுதிச் செய்யுளில் கூறப்பட்டுள்ளமையால் இம்முப்பது பாடலையும் இயற்றியவர் பொன்னவன் ஆவார் என்றும் 'எந்தை கணபுரத் தேவன்' எனவும் 'மகப் பொன்னவன்' என்பதால் உண்மையில் இந்நூல் இயற்றிய பொன்னவன் அம்பர்க் கணபுரத் தேவர்க்கு மகன் என்றும் ஆய்ந்து உறுதியாகக் கூறிச் செல்கிறார் ராகவையங்கார்.

## நூல் அமைப்பு பற்றிய விளக்கம்

ரா. ராகவையங்கார் தாம் பதிப்பித்து வெளியிட்ட நூல்களை நன்கு ஆராய்ந்து, அந்நூலை வாசிக்கும் அனைவருக்கும் எந்தவித குழப்பமோ, தடுமாற்றமோ வரக் கூடாது என்பதில் உறுதியாக

இருந்து, தம் பதிப்புப் பணியைச் செவ்வனே ஆற்றியிருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

இனியது நாற்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று என்பதால் முன்னுரையில் எவை எவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் பாற்படும் என்பதையும், கீழ்க்கணக்கு நூல்கள், மேற்கணக்கு நூல்கள் பற்றிய விளக்கமும் கூறி, அவற்றிற்கான இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் சூத்திரங்களைக் கொண்டு விளக்கிச் செல்கிறார். இந்நூல் அறம், பொருள், இன்பம் பற்றிச் சிலவாய மெல்லிய சொற்களால் ஐந்தடிக்கு மிகாது நாற்பது பாடல்கள், வெண்பாவால் வந்தமையால் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றானது என்றும் விளக்கிச் செல்கிறார்.

மேலும், முற்காலத்தே கபிலர் என்னும் புலவரால் 'இன்னா நாற்பது' என்னும் நூலும், பூதஞ்சேந்தனாரால் 'இனியது நாற்பது' என்னும் நூலும் வெண்பா யாப்பில் பாடப் பெற்றிருத்தலை நோக்கும் போது அவ்விரு சான்றோருள் முன்னவர் விட்ட குறையைப் பின்னவர் நீக்க முயன்றமை தோன்றுகிறது என்றும் இவ்வினியவை நாற்பது செய்யுட்களில் ஒருசில 'புறத்திரட்டு' என்னும் தொகை நூலில் சேர்க்கப்பட்டுள்ளன என்றும் கூறிச் செல்கிறார். இந்நூலிற்குப் பொழிப்புரை எழுதியவர் இன்னாரென அறிய முடியவில்லை என்றும் அதனுரை நடையினை நோக்குமிடத்து அதுவும் முற்காலத்தது என்றே தோன்றுகிறது என்றும் தெரியப்படுத்துகிறார்.

இந்நூலின் பிரதி தமிழ்ச்சங்கத்துக் கையெழுத்துப் புத்தகச் சாலைக்கண் கிடைத்ததாகக் கூறுகிறார். இப்பிரதி கும்பகோணம் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராய் இருந்த ஸ்ரீ வே.வை.மு. சடகோபராமாநுஜாசாரிய ஸ்வாமிகள் மூலம் கிடைக்கப் பெற்றது என்றும் அப்பிரதி அவ்வாசிரியரால் ஆராய்ந்து எழுதப் பெற்றிருந்ததால் தன்னுடைய வேலை வெளியிடுதல் மட்டுமே என்றும் தம் முன்னுரையில் கூறிச் செல்கிறார்.

திணைமாலை நூற்றைம்பது நூலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று என்பதால் இனியவை நாற்பது நூலில் உள்ள அதே விளக்கங்களை இங்கும் கூறிச் சென்றுள்ளார். நச்சினார்க்கினியர் தன் தொல்காப்பிய உரையில் பலவிடத்தும் இந்நூலை எடுத்துக்காட்டி விளக்கிச் செல்வதால், இந்நூல் பழமையும் பெருமையும் வாய்ந்தது என்றும் சுட்டிக்காட்டிச் செல்கிறார்.

இந்நூலின் ஏடு மழவராயனேந்தல் வித்துவான் சின்னஸ்வாமி ஐயர் அவர்களுடையது என்றும் இது சென்னையிலுள்ள

யாழ்ப்பாணம் ஸ்வாமிநாத பண்டிதர் அவர்களின் நல்லுதவியால் கிடைக்கப்பெற்றது என்றும் கூறுகிறார்.

திருநூற்றந்தாதி, அந்தாதி அமைப்பில் அமைக்கப் பட்டுள்ளதால் முன்னுரையில் தொடக்கத்திலேயே 'அந்தாதி' பற்றி விளக்கம் கொடுக்கிறார். இவருடைய இவ்விளக்கமானது இந்நூலைக் கற்பவருக்கு அந்தாதி பற்றிய முழு விளக்கமும் தெரிய வேண்டும் என்பதில் விருப்பமும் நாட்டமும் கொண்டவராக ரா. ராகவையங்கார் விளங்குகின்றார் என்பதைக் காட்டுகிறது.

எழுத்தந்தாதி, அசையந்தாதி, சீரந்தாதி, அடியந்தாதி என்று ஒவ்வொன்றையும் விளக்கிச் செல்கிறார். அந்தாதியைத் தொல்காப்பியனார் 'இயைபு' என்று குறிப்பிடுவார் என்பதையும் கூறிச் செல்கிறார். எந்தெந்த இலக்கியம் அந்தாதி அமைப்பில் உள்ளது என்பதையும் எடுத்துக்காட்டி விளக்கிச் செல்கிறார். பின்பு, திருநூற்றந்தாதி கலித்துறை அந்தாதி அமைப்பில் அமைந்துள்ளது என்றும் அது அருகக் கடவுளைப் பற்றிப் பாடுவதால் ஜைன இலக்கியம் என்றும் கூறிச் செல்கிறார்.

திருநூற்றந்தாதிப் பிரதியொன்றே ஒன்றுதான் கிடைக்கப் பெற்றது என்றும் உரையருமையும் நூலின் இனிமையும் கருதி இதனை அவ்வொரு பிரதிகொண்டே ஆராய்ந்து வெளியிட்டதாகவும் கூறுகிறார். இப்பிரதியானது காஞ்சிபுரத்துக்கடுத்த திருப்பருத்திக் குன்றத்திலுள்ள மகா.எ.எ.ஸ்ரீ தருமையர் கொடுத்ததாகவும் கூறுகிறார்.

முப்பது பாடல்களைக் கொண்ட கனாநூலின் உண்மை, சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரையாற் பலரும் அறியப் பெற்றது என்றும் கூறிச் செல்கிறார். தான் தமிழ்ச் சங்கத்திற்காக ஏடு தேடிச் சென்ற காலத்தில் இந்நூலின் பிரதி ஒன்று ஆழ்வார் திருநகரியில் கள்ளபிரான்நாதர் வீட்டில் கிடைக்கப் பெற்றது என்று முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இந்நூலில், சிலப்பதிகார உரைக்கண் அடியார்க்கு நல்லார் எடுத்தாண்ட கனாப்பயனைப் பற்றிய பாடல்கள் நான்கும் சிலபாடபேதங்களுடன் உள்ளன என்கிறார். அவை என்னென்ன பாடல்கள் என்பதையும் கூறிச் செல்கிறார். (உ, ச, க0, கரு பாடல்கள், சிலப்பதிகாரம், கரு - அடைக்கலக்காதை, கூரு - க0கூ அடிகள்)

### பாடவேறுபாடு சுட்டிச் செல்லல்

ரா. ராகவையங்கார் தான் பதிப்பித்த நூல்களை நன்கு விளக்கும் போது ஆங்காங்கே தான் ஆராய்ந்து கண்ட பாடவேறுபாடுகளையும் அடிக்குறிப்பில் சுட்டிக் காட்டிச் செல்கிறார்.

இனியது நாற்பது, கனா நூல் ஆகிய இரு நூல்களிலும் பாடவேறுபாடு இருப்பதாகச் சுட்டிக் காட்டவில்லை. திணைமாலை நூற்றைம்பதில் பத்து இடங்களில் பாடவேறுபாடு இருப்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

| | | |
|---|---|---|
| நறைபடர் சாந்தம் | - | நறைபரந்த சாந்தம் |
| பனைவிளைவு | - | பனையளவு |
| மயிலன்னாய் | - | மடநல்லாய் |
| மாநீலம் | - | மானீலம் |
| இளவேங்கை | - | இனவேங்கை |
| யுலகு | - | யிலகு |

போன்ற பாடவேறுபாடுகளை அடிக்குறிப்பில் கூறுகிறார்.

திருநூற்றந்தாதியிலும் ஐந்து இடங்களில் பாட வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார். இந்நூலில் செய்யுள், பொருள், பொழிப்புரை ஆகியவற்றில் காணப்படுகின்ற பாடவேறுபாடுகளைக் கூறிச்செல்கிறார். சான்றுகள் சில:

| | | |
|---|---|---|
| நன்முதற் றேவரை | - | நம்துற் றேவரை |
| மித்தாக்கள் கர்த்தாக்கள்<br>கொல் வெவ் வினைக்கே | - | மிச்சத்தர்கள் கர்த்தர்கள்<br>வெவ் வினைக்கே |
| தீசரல் லாமை | - | தீசரல்லாரை |
| செந்தாதியை | - | செந்தாதியல் |

## அருஞ்சொற் பொருள் கூறல்

ரா.ராகவையங்கார், அருஞ்சொற்பொருள்களையும் கூறிச் செல்கிறார். காட்டாக, திணைமாலை நூற்றைம்பதில்

திமில் = மீன்படகு, உவர்க்கம் = கடற்கரை
சாலிகை = மெய்புகுகருவி வேலாழி = கடல்

எனப் பல இடங்களில் அருஞ்சொற்களுக்குப் பொருள் கூறிச் செல்கிறார்.

திருநூற்றந்தாதியிலும், கேவல ஞானம் = திரிகால உணர்ச்சி, மிச்சர் = மித்தியாவாதி, ஆர்தல் = உண்ணுதல் என்று அருஞ்சொற்பொருள் கூறுகிறார்.

## பிற இலக்கியக் கருத்துகளைச் சான்று கூறி விளக்கல்

ஒவ்வொரு நூலைப் பற்றிய விளக்கங்களைக் கூறுமிடத்து, முன்னுரையிலேயே, பன்னிருபாட்டியல், திருச்சிற்றம்பலக் கோவை,

ஏலாதி போன்ற நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி விளக்கிச் செல்வது இவரின் தனித்தன்மை என்றே கூறலாம்.

திணைமாலை நூற்றைம்பதில் தொல்காப்பியத்தில் நச்சினார்க்கினியர் தம் உரையில் சுட்டும் உதாரணங்களை அதிகமான இடங்களில் சுட்டிக் காட்டுகிறார். 'சுள்ளி'எனத் தொடங்கும் இரண்டாவது பாடலுக்கு, ஏதீட்டிற்கு நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டாகக் கூறிச் செல்வதை எடுத்துக் காட்டி, மேல் விளக்கமும் கூறுகிறார். ரா. ராகவையங்கார். அதாவது, 'ஏதிடு - ஒருவன் களிறும் புலியும் நாயும் போல்வன காத்து எம்மைக் கைக்கொண்டான் எனவும் பூத்தந்தான், தழைதந்தான் எனவும் இவை முதலிய காரணமிட்டுணர்த்தல் என்பர்' என மேல் விளக்கம் கூறுகிறார் ஆசிரியர்.

இதேபோல் நூலின் பல இடங்களில் நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டும் உதாரணங்களைச் சுட்டிக் காட்டி விளக்குகிறார்.

திருச்சிற்றம்பலக்கோவை, சிந்தாமணி போன்ற இலக்கியங்களிலும் புலமையும் ஈடுபாடும் இருந்ததை, அவர் எடுத்துக்காட்டி விளக்கிச் செல்லும் முகத்தான் உணர முடிகிறது. திணைமாலை நூற்றைம்பதில் 'பண்ணாது' எனத் தொடங்கும் முப்பத்து ஏழாம் பாடலில் "கயிறுரீஇவிட் டார்" என்ற சொல் 'சிந்தாமணியிலும் கையாளப்பட்டுள்ளது என்பதை, "வண்டலர் கோதை வாட்கண் வனமுலை வளர்த்த தாயர், கண்டுயிருண்ணுங் கூற்றங் கயிறுரீஇக் காட்டியிட்டார்" (இலக்கணை. அ0) என்று கூறிச் செல்கிறார்.

'வண்டிமை' எனத் தொடங்கும் நூற்று ஒன்றாவது பாடலின் பொருளில் கூறப்பெறும் ஆம்பலென்னும் பெயருடைய குழலும் என்றதற்கு, 'கஞ்சத்தாற் குமுதவடிவாக அணைசு பண்ணிச் செறித்தலின் ஆம்பற் குழலாயிற்று" என்று சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் கூறிச் செல்லும் கருத்தைக் காட்டி விளக்குகிறார் ராகவையங்கார்.

திருநூற்றந்தாதியில் உரைமேற்கோள்களை, திருக்குறள், நாலடியார், அறநெறிச்சாரம், அருங்கலச் செப்பு, சிந்தாமணி, யசோதரகாவியம் ஆகிய நூல்களில் இருந்து காட்டிச் செல்கிறார்.

இந்நூல் பல அரிய அறக்கருத்துகளைக் கூறுவதால் திருக்குறளில் இருந்து அதிகமான மேற்கோள் காட்டி விளக்கிச் செல்கிறார்.

திருநூற்றந்தாதி ஜைன சமய நூலாதலால், அவர்களின் கொள்கைகளையும் கூறிச் செல்கிறார். பதினோராம் பாடலுக்கு விளக்கம் கூறுமிடத்து, "இப்பூவுலகில் ஏதேனும் விசேடம் நிகழுமாயின் தேவர்களுடைய ஆசனம் நடுக்கமுறும் என்பதும் அக்குறிப்பால் அதனை அறிந்து அவர்கள் செய்ய வேண்டுவன வற்றைச் செய்வரென்பதும் ஜைன பௌத்தர்களுடைய கொள்கை. இதனை 'தரணேந்திரன் தனது ஆஸனங்கம்பித்தலில் அறிந்து" எனவரும் ஸ்ரீபுராண வசனத்தாலும், "ஈண்டுநீர் ஞாலத் திவன் செயலிந்திரன் - பாண்டு கம்பளந் துளக்கிய தாதலின்" எனவரும் மணிமேகலை அடிகளையும் மேற்கோள்காட்டிச் செல்கிறார். ஒரு பொருளை விளக்க முற்படும் போது அதற்குத் தொடர்பான, பிற இலக்கியக் கருத்துகள் பலவற்றைக் கூறி விளக்கம் தருவது ரா. ராகவையங்காரின் தனித்தன்மையாகும்.

திருநூற்றந்தாதியில் தொண்ணூற்று மூன்றாம் பாடலின் பொருளுக்கு, மேலும் விளக்கம் கூற முற்படுகிறார் ரா. ராகவையங்கார். அதாவது, "அருகர், அசரீரி, ஆசிரியர் ஆகிய இவ்வியற்கைப் பெயர்களிலே முதலெழுத்துக்களும் உபாத்தியாயரின், முதலெழுத்தாகிய உகரமும் முனிவர்களின் முதலெழுத்தாகிய மகரவொற்றும் எனப்படுகின்ற இவைகளை ஒன்று முதலாய் ஐந்து இறுதியாகச் சொல்வதனால் உண்டாகிய ஓங்காரத்தை முச்சந்தியிலுந் துதித்துத் தியானிப்பேன்" என மேலும் விளக்கம் கூறுகிறார்.

இவ்வாறு ஒவ்வொரு நூலிலும் பிற இலக்கியக் கருத்துகளை மேற்கோள் காட்டுவதோடு தனக்குத் தெரிந்த, ஆழ்ந்து அறிந்த கருத்துகளையும் கூறிச் செல்கிறார்.

## ரா. ராகவையங்காரின் பதிப்புக் கொள்கை

ரா. ராகவையங்கார் இதுகாறும் வெளிவராத மறைந்து கிடக்கும் பண்டையோர் உரைத்த தண்டமிழ்ச் சிறுநூல்களை 'செந்தமிழ்' இதழ் வாயிலாக வெளிக் கொணர்வதை முக்கியக் கடமையாகக் கொண்டு செயலாற்றி இருக்கிறார் என்பதை உணர முடிகிறது.

ஏட்டுப் பிரதியிலிருக்கும் அரிய இலக்கியங்கள் முழு நூலாக வெளிவர வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர் என்பதை அறிய முடிகிறது.

எடுத்துக் கொண்ட இலக்கியத்தின் முழு விவரங்களை ஆராய்ந்து அறிந்த பின்பே பதிப்புப் பணியை மேற்கொண்டுள்ளார்.

பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூலை மற்ற இலக்கியங்களைக் கொண்டு மேற்கோள் காட்டி விளக்கிச் செல்வதைக் கொள்கையாகக் கொண்டுள்ளார்.

குறிப்பிட்ட சமயப் பற்றுடையவராக அல்லாமல் அனைத்து சமயக் கருத்துகளை - சமயக் காழ்ப்புணர்ச்சி அற்றவராக இருந்து, ஆய்ந்து கூறிச் சென்றுள்ளார்.

நூலின் முன்னுரையிலேயே நூலின் ஆசிரியர், நூலைப் பற்றிய முழு விவரங்களையும் கூறி அந்நூலைக் கற்பவருக்கு எளிமையாகவும், மேலும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டும் விதமாகவும் அமைத்துள்ளார்.

இனியது நாற்பதில் செய்யுண் முதற்குறிப்பு, அரும்பத அகராதி ஆகியவற்றைப் பிற்சேர்க்கையாகக் கொடுத்துள்ளார். ஆனால் திருநூற்றந்தாதியில், இரண்டாம் பதிப்பு என்பதால் முதற்பதிப்பின் முகவுரை, பொருளடக்கம், தொகையகராதி, அரும்பத அகராதி, மேற்கோள் விளக்கம், இடம் விளங்கா மேற்கோள்கள், உரைமேற்கோள் நூல்கள், செய்யுண் முதற்குறிப்பகராதி ஆகியவற்றை நூலின் முற்பகுதியிலேயே கூறிச் செல்கிறார்.

இனியது நாற்பது 1920 ஆம் ஆண்டு பிரசுரமானது; திருநூற்றந்தாதி 1935ஆம் ஆண்டு பிரசுரமானது என்பதால் ஒரு புதிய உத்தியாகப் பிற்சேர்க்கையில் வரவேண்டிய செய்திகளை நூலின் முதற் பகுதியிலேயே வெளியிட்டு உள்ளார்.

திணைமாலை நூற்றைம்பதில் நூற்றி இருபத்து ஏழாம் பாடலுக்குப் பின்னுரையும் அதன் பின்வரும் பாடல்களின் உரையும் கிடைக்கப் பெறவில்லை எனவும் சில பாடல்களிலும் எழுத்துகள் விடுபட்டும் பிறழ்ந்தும் காணப்படுகின்றன எனவும் அடிக்குறிப்பில் சுட்டிக் காட்டுகிறார். படைப்பாசிரியர் படைப்பில் மாற்றம் வந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்து, தம் கருத்தைத் திணிக்காமல் விட்டு விடுவதை அவர்தம் பதிப்புக்கொள்கையாகக் கொண்டு செயல்பட்டிருக்கின்றார் என உணர முடிகிறது.

நூலில் காணப்படுகின்ற பிழைகளுக்கான திருத்தங்களை நூலின் பிற்பகுதியில் கூறிச் செல்கிறார்.

கனாநூலில் விளங்காத இடங்களை [ ] அடையாளமிட்டுச் செல்கிறார். அடிக்குறிப்பில் அதைக் குறிப்பிட்டும் செல்கிறார்.

ஆயுட்காலம் முழுமையும் தமிழை அயராது கற்றும் கற்பித்தும் வந்த ரா. ராகவையங்கார், தமக்கென ஒரு பதிப்புப்

பாணியை அமைத்துக் கொண்டு கிடைப்பதற்கு அரிதான பல நூல்களைப் பதிப்பித்துத் தமிழுலகிற்கு அரிய பணியை ஆற்றியுள்ளார். 'செந்தமிழ்' வாயிலாகப் பல அரிய இலக்கியங்களைப் பதிப்பித்த பெருமை இவரையே சாரும்.

எந்தவொரு இலக்கியமும் காலத்தால் அழிந்து விடக் கூடாது என்பதை மனத்தில் கொண்டு, தனக்குக் கிடைத்த சொற்களாலும் பொருளாலும் நடையாலும் உயர்ந்த இலக்கியங்களை, ஏட்டிலிருந்து நூலாகப் பதிப்பித்துத் தமிழுக்கு அரிய பெரிய தொண்டினை ஆற்றியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

## முதன்மை நூல்கள்

1. இனியது நாற்பது - மூலமும் உரையும் கனா நூலும், செந்தமிழ், இரண்டாம் பதிப்பு, தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, 1920.
2. திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும், செந்தமிழ், இரண்டாம் பதிப்பு, தமிழ்ச்சங்க முத்திராசாலை, மதுரை, 1927.
3. திருநூற்றந்தாதி மூலமும் உரையும், செந்தமிழ், இரண்டாம் பதிப்பு, தமிழ்ச் சங்க முத்திரா சாலை, மதுரை, 1935.

## துணை நூல்கள்

1. குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1993.
2. தமிழ் இலக்கிய வரலாறு, மது.ச. விமலானந்தம்.
3. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள் (கருத்தரங்கக் கட்டுரைகள்) தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

******

# சங்க இலக்கிய ஆய்வுகள்

வீ. நிர்மலா ராணி

தமிழ் இலக்கிய ஆய்வு வரலாற்றில் சங்க இலக்கியங்கள் முதன்மையும், முக்கியத்துவமும் பெற்றுத் திகழ்கின்றன. சமூகம், பொருளாதாரம், அரசியல், வரலாறு, மொழியியல், உளவியல், வாழ்வியல், ஒப்பியல் எனப் பன்முகங்களிலும் பரிணாமங்களிலும் ஆய்வுகள் வலம் வந்துள்ளன. தமிழ் இலக்கிய நூல்களைத் தம் வாழ்நாள் முழுவதும் ஆழ்ந்துகற்று, மகிழ்ந்து, சுவைநலன்களை மாணாக்கரும் ஆர்வலரும் அறியும் வண்ணம் சொற்பொழிவுகளாற்றியும், இலக்கியங்களைப் படைத்தும், ஆய்வுகள் மேற்கொண்டும் தமிழன்னைக்குப் புகழாரம் சூட்டியவர் சேதுசமத்தான அவைக்களப் புலவர் மகாவித்துவான் ரா. ராகவையங்கார். அவருடைய சங்க இலக்கிய ஆய்வு நூல்களில் காணப்பெறும் சிறப்பியல்புகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## சங்க இலக்கிய ஆய்வு நூல்கள்

இவர் உரை நல்கிய சங்க இலக்கியங்கள்

1. குறுந்தொகை விளக்கம் 1946
2. பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும் 1949
3. பட்டினப்பாலை ஆராய்ச்சியும் உரையும் 1951

ஆகியன. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக மேற்சுட்டிய நூல்கள் விளங்குகின்றன. இவர் குறுந்தொகைப் பாடல்கள் (400) முழுமைக்கும் உரை வகுத்துள்ளார். எனினும் 111 பாடல்களே உரையுடன் 'குறுந்தொகை விளக்கம்' என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. இங்குப் பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், குறுந்தொகை விளக்கம் ஆகிய இரு நூல்களும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## சிறப்பியல்புகள்

"இலக்கியம் தோன்றியவுடனே ஆராய்ச்சியும் தோன்றியது. தமிழ் இலக்கிய ஆராய்ச்சி பழமையானது. இலக்கிய விருந்தை நம் முன்னோர்கள் வாரி வழங்கியுள்ளனர். தலைமுறை தலைமுறையாக - வழிவழியாக அதை நாம் பார்த்து நுகர்ந்து வருகிறோம்.

எழுத்தினால் எழுதி வைக்கும் பழக்கம் பிற்காலத்தில் ஏற்பட்டதே என்றாலும், ஆராய்ச்சி தொன்று தொட்டு இருந்து வருகிறது. பாட்டை, ஆராய்ச்சியாளர் புகழ்ந்தனர். அதை உலகிற்கு விளம்பரப் படுத்த முயன்றனர். உரையாசிரியர்கள் ஒருபடி முன்னே போய் இது தங்கள் கருத்து, இது இதரர் கருத்து என்று காட்டினர்" (மு.வை. அரவிந்தன் உரையாசிரியர்கள் ப. 129) என்று வரும் பகுதி மூலம், ஆராய்ச்சியாளர்க்கும், உரையாசிரியர்க்கும் உள்ள தொடர்பை அறியலாம். இங்ஙனம் ஆராய்ச்சியாளராகவும், உரையாசிரியராகவும், திகழும் ரா. ராகவையங்காரின் சங்க இலக்கிய ஆய்வு நூல்களின் உரைத்திறன்களைக் கீழ்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

வடமொழி ஒப்பீடு
பன்னூற் பயிற்சி
பல்துறையறிவு
நூலாசிரியரைப் போற்றுதல்
முன்னோர் கருத்துகளை ஏற்றல்
முன்னோர் கருத்துகளை மறுத்தல்
அனுபவ அறிவு
இலக்கணக்குறிப்புத் தருதல்
ஊர்ப்பெயராய்வு
சொற்பொருள் விளக்கம்
எதுகை மோனை இயைந்துவரல்
பொருள் நயமுரைத்தல்
பாடவேறுபாடு காட்டுதல்

ஆகியன.

## வடமொழி ஒப்பீடு

ரா. ராகவையங்கார், தமிழிலும் வடமொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர். அதனை அவர் இயற்றிய உரைகளில் அதிகமாகக் கண்டுகொள்ளலாம்.

1. குறுந்தொகையில் 68-ஆம் பாடலில் வரும் 'இனங்கவரும்' என்பதற்கு, "இனமாகக்கவர்தல் தலைவிக்குக் காமஏது ஆகும். இதனை வடநூலார் உத்தீபன ஏது என்பர்" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 116) என்ற வடநூலாரின் கருத்தினை இணைத்துக் காட்டுகிறார்.
2. 57ஆம் பாடலில் வரும் 'மகன்றில்' என்பதை விளக்குவதற்கு, "காளிதாசரும் தாமரையிலையிடைப்

பட்ட சேவலைக்காணாது பெடை புலம்புவது கூறினார். (சாகுந்தலம் அங்கம் 4)" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 116) என வடமொழிப்புலவர் காளிதாசரின் கூற்றினை எடுத்துரைக்கிறார்.

3. 2ஆவது பாடலில் வரும் 'தும்பி' குறித்து விளக்குகையில் "உயிர்க்கு ஊறு செய்யாத வாழ்க்கையினஞ் சிறந்து நறுமணந்தேரும் வாழ்க்கையுடைமையாற் 'சாரக்கிராகி' என வண்டினைக் கூறுதல் வடநூல் வழக்கு. 'வண்டனார்' (சிந். 1632) எனப் பெரியோரால் வழங்கப்படுதலுங் காண்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 27) என்று வடநூலில் வழங்கப்பெறும் பெயரைக் குறிப்பிடுகிறார்.

4. பெரும்பாணாற்றுப்படையில் 53ஆம் வரியில் வரும் 'முளையெயிறு' என்பதற்கு, "மூங்கில் முளை போலுங்கொம்பு. யானைக்கொம்பினை எயிறு என்பது புலவர் இட்ட வழக்கு. வடநூலார் தந்தம் என்பது போலக்கொள்க." (ரா. ராகவையங்கார், மேலது ப. 25) என வடநூலாரின் கருத்துடன் ஒப்பிட்டு விளக்கம் தருகிறார்.

5. பெரும்பாணாற்றுப்படை பாடல் 411இல் வரும் 'பழவிறல் மூதூர்' என்பதை ஆராய்ந்து விளக்கும்போது, 'பழமை யாகவே விறலாற்சிறந்த பல்லூர்களுந்தோற்றற்கு முன்னரே தோன்றிய ஊர்; 'நகரேஷுகாஞ்சி' என்னும் வடமொழி வழக்கால் இதன் சிறப்பும் பழமையுமுணரலாம்' (ரா. ராகவையங்கார், மேலது, ப. 89) என வடமொழியிலும் அவ்வூரின் சிறப்பும் இடம் பெற்றிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மேற்கண்ட சான்றுகளின் வழி ரா. ராகவையங்கார் இருமொழிப் புலமையாளர் என்பதையும் ஒப்பீட்டு முறைத் திறனாய்வாளர் என்பதையும் அறியலாம்.

## பன்னூற் பயிற்சி

ரா. ராகவையங்கார் தாம் ஆய்வில் கண்ட உண்மைகளை நிலைநாட்டவும், மற்றவரின் கருத்தினை மறுக்கவும், மேலும் ஆராயவும் பல நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாண்டுள்ளார். அந்நூல்கள் பின்வருமாறு.

1. சங்க இலக்கியங்கள் (பாட்டும், தொகையும்)
2. நீதி இலக்கியங்கள் (திருக்குறள், நாலடியார், கார்நாற்பது—)

3. பக்தி இலக்கியங்கள் (தேவாரம், திருத்தொண்டர் திருவந்தாதி, பெரிய திருவாய்மொழி, திருநெடுந்தாண்டகம்)
4. காப்பியங்கள் (சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம்)
5. உரையாசிரியர்கள் (நச்சினார்க்கினியர், பேராசிரியர், பரிமேலழகர் -----)
6. சாசனங்கள் (பல்லவசாசனம், அமராவதிசாசனம், காஞ்சிபுரவை கந்தப்பெருமாள் கோவிற்சாசனம், பாகூர்ச்சாசனம், கச்சிஏகாம்பரநாதர் கோயில் அர்த்தமண்டபச்சாசனம், விரிஞ்சிபுரஞ்சாசனம்)
7. இலக்கண நூல்கள், சிற்றிலக்கியங்கள்

இதன் வழி ரா. ராகவையங்காரின் தமிழ் இலக்கிய ஆர்வமும், முயன்று கற்றுத் துறைபோகிய அறிவும், பயிற்சியும் புலனாகுகின்றன. இவற்றில் பெரும்பான்மையாகச் சங்க இலக்கியங்களிலிருந்து மேற்கோள் எடுத்தாண்டிருப்பது, அவ்விலக்கியங்கள்பால் அவர் கொண்டுள்ள பற்றும் நாட்டமுமேயாகும்.

## பல்துறையறிவு

"ஒரு நூல் இலக்கிய அறிவை மாத்திரம் தருவதில்லை. மக்கள் வழக்கின் பல்வேறு கூறுகளும் அமையப் படைப்பது தான் இலக்கியம். அத்தகைய இலக்கியக் கலைக்குப் பொருள் காண வேண்டும் எனின் பொருள் காண்பார்க்குப் பல்துறையறிவு வேண்டும் என்பதுதானே விளங்கும்" (வ.சுப. மாணிக்கம், சிந்தனைக்களங்கள், ப. 313) என்ற வ.சுப. மாணிக்கனாரின் கூற்றிற்கேற்ப ரா. ராகவையங்கார் பல்துறையறிவு பெற்றவராகத் திகழ்கிறார்.

## சோதிடவியல்

ரா. ராகவையங்கார் சோதிடநூலும் கற்றவர் என்பதை அவரது உரையில் காணலாம். அதனை "வானத்துப் பெருநல்வடவயின் விளங்குஞ்சிறுமீன் -- ஆகாயத்திற் பெரியநல்ல வடக்கண் விளங்கும் அருந்ததி. வானினும் வடக்கண்ணே உயர்ந்ததாதல் சோதிடநூலிற் கண்டது. வடக்கண் வெள்ளியே உலகு வளம்படும் மழைக்குக் காரணமாதல் கண்டு கொள்க" (ரா. ராகவையங்கார் பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும் ப. 59) என்றும் மற்றோர் இடத்தில் "சிறுகோட்டுத் திங்கட்குழவியைக் கோள் நேர்ந்தாங்கு - கேதுக்கோள் தீண்டினாற் போல. கேதுவைச் செம்பாம்பெனவும் இராகுவைக் கரும்பாம்பெனவுங் கூறுதல் சோதிடநூல் வழக்கு" (ரா. ராகவையங்கார் மேலது, ப. 79) என்றும் வரும் பெரும்பாணாற்றுப்படை உரைப்பகுதிகள் வழி உணரலாம்.

**பயிரியல்**

மனித வாழ்க்கைக்கு அடி உரமாக விளங்குவது பயிர்த்தொழில். அதன் விளைவாகக் கிட்டும் உணவு தானியங்களுள் 'நெல்' குறித்த செய்தியினைத் தமது உரையில் எடுத்தோதுகின்றார்.

'பறவை பெயர்ப்படுத்தம்' என்ற பெரும்பாணாற்றுப்படை யின் 305ஆவது வரிக்குப் பின் வரும் விளக்கத்தினை அளிக்கிறார்.

"பறவையின் பெயரைப் பெற்ற நெல். இது கருடன் சம்பா எனப்படும். இதுவே ஸாரஸாந்தம் என வழங்கப்படும். ஸாரஸம் என்பது ஸரஸ்ஸில் உண்டாயதற்கும் பறவைக்கும் பெயரென்பது. இதுவே சாரசாந்நம் என எழுதப்பெற்றது. முதலெழுத்துக் கெட்டு ராசான்னம் எனப் பிழைபட்டது ஏடெழுதினர் பிழைப்பென்க. கருடன் சம்பா நெல் என்பது தலை வெளுத்து உடல் சிவந்து கருடனைப் போன்றே இருத்தல் நோக்கிக் கொள்க. இஃது ஆறுதிங்கள் நீரினின்று விளைவதால் ஸாரஸமாதல் (நீர் நிலையில் உண்டாவது ஆதல்) காண்க. இதுவே ஆகுதிக்குச் சிறந்தது" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 61) இதன் வழி அவரது பயிர்த்தொழில் குறித்த அறிவும் நுட்பமும் புரிதலும் வெளிப்படுத்தப் படுவதைக் காணலாம்.

**உணவியல்**

சமைப்பது, உண்பது போன்ற மனிதனது அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளையும், நுண்மாண் நுழைபுலம் மிக்க அறிஞரால் விட்டு வைக்க இயலாது. வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த இலக்கியத்திலும் செய்யும் ஆய்விலும் வகுக்கும் உரையிலும் தவறாது 'உணவு' குறித்த செய்தி இடம் பெறும். அவ்வகையில் ரா. ராகவையங்கார் தமது பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும் என்னும் நூலில் பின்வருமாறு எடுத்து விளக்குகிறார்.

"கூவியன் காரகற் பாகொடு பிடித்த நூலிழை வட்டம் -- அப்ப வாணிகன் கரிய அகலிலுள்ள வெல்லப்பாகொடு சேர்த்துப் பிடித்த நூற்ற இழை போன்றுள்ள தேங்குழலுருண்டை இழை போல் மெல்லியதாகவுஞ் சிறியதாகவும் பிழியப்பட்டதனால் தேங்குழல் நூலிழையெனப்பட்டது. புறங்கரிய அகலிற் காய்ச்சிய பாகொடு பிடித்த வட்டம் என்க. பாகு அகலை விட்டு வேறாய்க் குளிர்ந்தால் உருண்டையாகப் பிடித்தல் இயலாதாகலின் காரகற் பாகொடு என்றார். பாகொடு பிடித்த நூலிழை வட்டம் என்றதனாலிஃது இடியப்பமாகாதென்க. அது பாகொடு பிடிப்பதாகாமையும் உணர்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 78) இப்பகுதி தேங்குழல் தயாரிக்கும் விதம் பற்றியும், தேங்குழல் - இடியாப்பம் இரண்டிற்குமுள்ள

வேறுபாடு பற்றியும் தெளிவாக்குவதை அறியலாம். அவரது உணவியல் சார்ந்த நுட்பவறிவும் புலனாகிறது.

இவற்றோடு, பாலியல், இசை, வரலாற்றுத் துறைகளறிவும் பெற்றவர் என்பதை உரையின் பல விடங்கள் வழி அறிய முடிகிறது.

## நூலாசிரியரைப் போற்றுதல்

பெரும்பாணாற்றுப்படை நூலாசிரியராகிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்தும் விதத்தை ரா. ராகவையங்கார் தமது உரையில் வியந்து போற்றுகிறார்.

"இத்திரையன் ஆளும் இவ்வமயம் இவ்வாசிரியரானே பாடப்பட்ட திருமாவளவன் இளையனாக இருந்தான் எனக் கருதல் பொருந்தும். இச்செய்தியை அவனைக் கொடுவரிக்குருளை கூட்டில் வளர்ந்தாங்கு என இவரே பாடுதலான் உய்த்துணரலாகும். இதன்கட் சோழனைப் புலிக்குட்டியோடுவமித்தது கண்டு தெளிக. இவ்வாறே இப்புலவர் பெருமான் உண்மை வரலாறுகளை அழகு பொலிய அணிந்துரைக்கும் சிறப்பு அறிஞர்க்கெல்லாம் வியப்பும் உவப்பும் தருவதாகும்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 100) என்பதன் வழி அறியலாம்.

தாம் உரை வகுத்த 111 குறுந்தொகைப் பாடல்களுக்கு புலவர்களின் பெயராலேயே தலைப்பிட்டுள்ளார். பெயரில் 'ஆர்' விகுதியைச் சேர்த்து 'மதுரைக் கண்ணனார்', 'வாயிலான் தேவனார்', 'நம்பிகுட்டுவனார்', 'கிள்ளி மங்கலங்கிழார்' எனத் தந்திருப்பதால் அவர் புலவர்களை உயர்வாகக் கருதியமை புலனாகும்.

தீன்மிதி நாகனார், வாயிலான் தேவனார், விட்டகுதிரையார், மள்ளனார், கருவூர் ஓதஞானியார், கருந்தோட் காவீரனார், அள்ளூர் நன்முல்லையார், கருவூர்க்கதப்பிள்ளையார் (கந்தப் பிள்ளை சாத்தனார் என்பதும் பாடம், வந்த என என்பது வந்தென எனத்திரிந்தது) சிறைக்குடி ஆந்தையார், நெய்தற்கார்க்கியார், செம்புலப் பெயனீரார், கொல்லிக் கண்ணனார், படுமரத்து மோசி கீரனார் ஆகிய புலவர்களின் பெயர்க்காரணத்தை ஆராய்ந்து ஒவ்வொரு பாடலுக்குமுரிய உரையின் இறுதியில் தந்துள்ளார்.

இது பாடல்களின் சுவை, பொருள்நயம் மட்டுமின்றிப் பாடிய புலவர்களின் வாழ்க்கை பின்புலத்தையும் அறிந்து கொள்ள பெருந்துணையாக அமைகிறது.

## முன்னோர் கருத்துகளை ஏற்றல்

தமக்கு முன்பு உரை வகுத்த ஆசிரியர்களின் கருத்துகளைத் தமது உரைகளில் தேவையான இடங்களில் பொருத்தமுறக் கோடிட்டுக் காட்டுகிறார்.

1. குறுந்தொகை 102ஆம் பாடலுக்கான உரையில்,

> "காதலர் வரை விடை வைத்துப் பொருட் செல்வங்கருதிப் பிரிந்தவரெனின் ஈண்டு நன்கு பொருந்தும். இதனைக் களவியலுள், 'வழிபாடு மறுத்தற்கு' (சூத்.20) நச்சினார்க்கினியர் உதாரணங்காட்டுதலான் இது களவிற்றலைவி கூற்றாதலுணர்க. பேராசிரியரும் இதனைக் 'காதல் கைம்மிகல்' (சூத். 23) என்னும் மெய்ப்பாட்டிற்கு எடுத்தோதி வரைந்து எய்துங் கூட்டத்திற்கு ஏதுவாம் எனக் கொள்ளுதலான் இது களவிற் கூற்றாதலுணரப்படும்" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 163).

2. 100-ஆவது பாடலில் வரும் 'மடவந்தனள்' என்பதற்கு

> " 'கடவுளெழுதிய பாவையின் மடவது மாண்ட மாயோளே' (அகம் - 62) என்புழிப் பாவை போலக் கண்டார்க்குச் செய்யும் மடமைக் கண் மாட்சிமைப்பட்ட மாயோள் என்று பொருள் கொள்ளக் கிடத்தல் காண்க. நச்சினார்க்கினியர் குறிஞ்சிக்கலியில் (24) 'மடமருங்குல் என்புழி நோக்கினார்க்கு மடமையைக் கொடுக்கும் மருங்குல் எனப்பொருள் கூறுதலான் உண்மை உணர்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 159).

3. இளந்திரையன் வரலாறு ஆராயுமிடத்து, "இனி இத்திரையனைத் தொண்டையர் மருக' என்றதனால் இவன் பிறந்த குடி தொண்டையர் குடியெனப்படுதல் அறியலாம். நச்சினார்க்கினியர் தொல்காப்பிய எழுத்ததிகார இறுதியில் (தொல். எழுத். 483) தொண்டைமானாடு தொண்டை நாடு என மரீஇ யிற்றெனக் கொள்ளுதலின் முதன்கண் தொண்டை என்பது குடிப்பெயராகவிருந்து அப்பால் அக்குடியின் ஆட்சியுட்பட்டதனால் நாட்டிற்குப் பெயராயிற்றென்று துணிதற்கு அவருரை இடந்தருவது காண்க" (ரா. ராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், ப. 28).

4. மேற்கண்ட நூலில் 44ஆம் வரியில் இடம் பெறும் 'நசைவுழித்தங்கி' என்பதற்கு "நின்னை விரும்பிய

இடத்துத்தாங்குதல் செய்து நசைதல் - நச்சுதல், புறப்பாட்டில் 'நின்னை வேட்கையின்' என்பதற்கு நின்னை நச்சியவிருப்பத்தால் எனப்பழைய உரைகாரர் பொருள் கூறியதனாலுணர்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 22) இச்சான்றுகள் வழி ரா. ராகவையங்காரின் காய்தல், உவத்தலின்றி முன்னோர் கருத்துகளை மதிக்கும் பண்பினையும் முந்தைய உரைகளை ஆழ்ந்து கற்கும் திறனையும் அறிய முடிகின்றது.

## முன்னோர் கருத்துகளை மறுத்தல்

முன்னோர் கூறும் கருத்து தவறு எனின் துணிவாகச் சுட்டிக்காட்டித் திருத்தமான உரை தரும் போக்கினை இவரது, ஆராய்ச்சியில் காணலாம்.

1. 'புதவின்' என்ற சொல்லிற்குப் "புதவி - ஒட்டுக்கதவு. கதவிற்கழுநிறைந்த வாயில்என்க. இது சுட்கதவு என்பது; உரையில் உட்கதவு என்பது எழுதினர் பிழைப்பென்க. சுள்ளாணிகளாகக் கழு நிரைத்தல் காண்க. தம்முள் செறிந்த ஒட்டுக் கதவாதல் உணர்க" (ரா. ராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், ப. 41) இங்கு, 'உட்கதவு' என்ற பிழைசுட்டி, நீக்கி, 'சுட்கதவு' என்ற உண்மைப் பொருளை விளக்கும் திறனை அறியலாம்.

2. 'சோறடு குழிசியிளக வீழும்' என்ற பெரும்பாணாற்றுப் பாடல் வரிக்குத் தந்துள்ள விளக்கம் ஆழ்ந்த நுட்பமும் திட்பமுமிக்கது. "சோற்றை அடுகின்ற பானை அசையும்படி நிலத்தே வீழும்; வளங்கெழு பாக்கத்து என்க. சோறடுங்காறும் பொறாது காய்கின்ற பசி தீரும்படி முப்படைத் திரள்காய் வம்பலர் பக்கல் வீழ்தலால் வளங்கெழு பாக்கம் என்றார். வீழ்ந்த காயாற் காய்பசியும் தாகமும் தீர்தல் குறிக்கொள்க. சமைக்கும் உணவிற்கு முன்னர் இயற்கையுணவு அவர்க்குக் கிடைத்தல் குறித்தார். இங்ஙனங் கொள்ளாது சோறடுகுழிசியைத் தெங்கங்காய் உடைக்க வீழும் என்றால் அது வளங்கெழீஇய தாகாமை உணர்க. காய் பசிதீர அடும் என்றும் காய் பசி தீர வீழும் என்றும் இயைத்துப் பொருள் கொள்க. கமுகஞ் சோலையினீழலில் வம்பலர் சோறடுவாரென்றும் அக்கமுகின் புடைசூழ் தெங்கின்திரள்காய் அவ்வம்பலர் பக்கல் வீழுமென்றும் கொள்க. இதற்காகவே கமுகின் புடை சூழ் தெங்கின என்று கூறிக் கொண்டாரென்க.

வீழ் முதிர்ந்தது என்று குறித்து முப்புடைத்திரள் காய் என்றார். இளகுதல் - அசைதல். "வெளிவிளக்குங்களிறு" (பட்டினப்பாலை, 172) என்பதனாலுணர்க. இதனாற் குழிசியசைதல் அளவிற் கொள்க. உரைகாரர் இந்நயனெல்லா நோக்காது பானை அடுப்பினின்று அசைந்து விழும்படி வீழுமென்றார். அங்ஙனங்கூறின் இது வளங்கூறியதாகுமோ ஆராய்ந்து கொள்க'' (ரா. ராகவையங்கார், மேலது, பக். 73-74) இங்கு முன்னோர் கருத்தை நயமாக மறுத்துரைக்கும் பாங்கினை உணரலாம்.

3. "கொடுவரிக்குருளை கொள வேட்டாங்கு - உடம்பில் வளைந்த வரிகளையுடைய வேங்கையின் குட்டியைப் பாய்ந்து கொள்ள விரும்பினாற் போல என்க. தொண்டையர் தமக்குப் பகைவராகி வடக்கணுள்ள கங்கருடைய கொடியாகிய யானையைப் பாய்ந்து அங்ஙனமே தெற்கணுள்ள சோழர் கொடியையும் பாய்ந்து கொள்ள விருக்கும் நிலையைக் குறித்தார் என்று நினைக. தொண்டையராகிய பல்லவர்க்குச் சிங்கக் கொடி என்பதும் நினைக. உரைகாரர் 'வயமானுடைய கொடுவரிக்குருளை' எனக்கொண்டு சிங்கத்தினுடைய வளைந்த வரிகளையுடைய குருளை எனவுரைத்தார். சிங்கத்திற்குக் கொடுவரியின்மை அவர் நினைந்திலர் 'கொடுவரியிரும்புலி' (குறுந். 215), (அகம் 27, 92) எனப் பல்லிடத்தும் வருதல் காண்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 100) என்று ராகவையங்கார், முந்தைய உரைகாரரின் கருத்தை நயமாக மறுத்து, 'கொடுவரிக்குருளை' யென்பது வேங்கை எனத் தெளிவு படுத்துகின்றார். இங்கு, அவரது விலங்கியல், வரலாற்றுத் துறை சார்ந்த அறிவு புலனாவதை அறியலாம்.

## அனுபவ அறிவினை வெளிப்படுத்தல்

தான் நேரில் கண்ட உண்மை அனுபவங்களையும் உரையினுள் வெளிப்படுத்தும் பாங்கினை ரா. ராகவையங்காரிடத்தில் காணலாம். சான்றாக,

1. "முட்கால் இறவின் - முள்ளைப் போன்ற கால்களையுடைய இறாமீனின் கால்கள் முள்ளையொத்தல் கண்கூடாகக் கண்டது; இக்கால்களால் இவை நடத்தலுண்டு என்பது, 'நடையிறவு' (10-85) எனப் பரிபாடலின் வருதலானறியப்படும்" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 71) என்பதிலும்

2. " 'ஆரை வேய்ந்த அறை வாய்ச்சகடம்' - தேர்த்தாளிப்பாய் வேய்ந்த, செல்லும் வழியை அறுத்துச் செல்லுதலையுடைய சகடம் எ - று. தேர்த்தாளி என்பது கூந்தற்பனை என்க. இது பூத்தாற்றேரலங்கரித்தது போறல் கண்கூடாகக் கண்டது; இதன் ஓலை மிடைந்தார்த்த பாய் ஆரை என வழங்கப்பட்டது போலும். ஆர்வை என்ற பாடத்திற்கு எருதுண்ணும் வைக்கோல் என்று பொருள் கொள்க. உண்ணும் வைக்கோலை மேலே வேய்ந்து சகடு செல்வது இன்றுங் கண்டது" (ரா. ராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், பக். 24-25) என்பதிலும் வரும் அவரது அனுபவம் உரையினுக்குச் சிறப்பையும், கற்போர்க்கு ஆர்வத்தையும் தருவதாக உள்ளது.

## இலக்கணக் குறிப்புத்தருதல்

"மூலநூலில் வருகின்ற பழைய மரபுகளை நன்கு அறிந்து, இலக்கண, இலக்கிய ஆட்சிகளை நன்கு உணர்ந்து உரை வகுக்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள் உரையாசிரியர்கள் ஆவார்" (இரா. மோகன், ந. சொக்கலிங்கம், உரைமரபுகள், ப. 249) இக்கூற்றிற்கேற்ப ரா. ராகவையங்காரும் தமது உரையில் இலக்கணக் குறிப்புகளைத் தருகிறார்.

1. "சென்றோர்க்குத் தவறெனின் என்பது 'இல்லை தவறவர்க்காயினும்' (குறள் - 1321) என்புழிப் போல வேற்றுமை" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 128).
2. "கிளைத்தூண் - கிளைத்து என்னும் வினையெச்சம் ஊன் என்னும் வினைப்பெயரில் உண் என்னும் வினை கொண்டது" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 99).
3. "காலெடு - காற்றால் முத்திற்பாறி என்க; வினையுவமம்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 92).
4. "வல்லுவோர்க்கே - வன்மை என்பாள் வல்லுவோர் என்றாள். வல்லுதல் - வினை. அது முக்காலத்தும் வல்லியோர், வல்லுநர், வல்லுவோர் என வருதல் காண்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 74) இச்சான்றுகள் வழி அவரது இலக்கண அறிவும் தெளிவும் புலனாகுகின்றன.

## ஊர்ப்பெயராய்வு

இவரது உரையினுள் ஊர்கள் பெயர் பெற்ற விதம், வள்ளல்கள் பற்றிய குறிப்புகள் ஆகியனவும் காணக் கிடைக்கின்றன.

1. "அரலைக்குன்றம் - சேலம் ஒசூர்ப்புறத்து 'அரவிகுண்டா' என்பது ஒன்றுண்டு; ஆண்டே நள்ளியென்னும் பெருவள்ளலுடைய தோட்டி மலையாகிய அங்குசகிரியும் உண்டு. இவற்றால் இக்கோமான் நள்ளி என்பது பொருந்தும்" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 104) இங்குக் குறிப்பிடப்படும் அரவிகுண்டா - நள்ளி மலை ஆகிய இடப்பெயர்கள் வியப்பினையும் உரையின்பாற் ஆர்வத்தையும் தூண்டுகின்றன.

2. " 'குட்டுவன் மாந்தையன்ன' - முத்தொள்ளாயிரத்து 'மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோக் கோதைக்கு' என வெண்பாவடியின் வருவதலால் இவ்வூர்ப்பெயர் மாந்தையாகாமை நன்கு துணியப்படும். மேற்றிசை யாத்திரிகரால் இவ்வூர் பின்னாளில் மாதையென வழங்கப்பட்டது. ஆ அய் வேட்கரிய பொதியிற் புறத்துக் கடவில்லாத அகநாட்டில் மாந்தை, முரந்தை எனப் பெயரிய தோரூருண்மை தாலமி பூகோள நூலிற் கண்டதாம். அது கடற்றுறை யூரில்லாமையால் இம்மாந்தை அதனின் வேறாய கடற்றுறைப் பட்டினமாதல் நன்குணரலாம். மாந்தை வருமிடங்களிற் கடல் கூறப்படுதல் நோக்கியறிக." (ரா. ராகவையங்கார், மேலது, ப. 70) இப்பகுதி வழி, 'மாந்தை' என்பது கடல் உள்ள துறையைக் குறிக்கப் பெற்ற பெயர் என்பதையும் மரந்தை, முரந்தை என்பன கடற்றுறை இல்லாத இடங்களைக் குறிக்கப் பெற்ற பெயர்கள் என்பதையும் பூகோள நூலின் துணைக் கொண்டு உரை வகுத்தது சிறப்பு.

3. " 'படுமாத்தூர் என்பது சேது நாட்டுச் சிவகங்கையைச் சார்ந்துள்ள ஊர்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 68) என விளக்குகிறார். இப்பகுதி வழி, இடம் குறித்த ஆய்வுச் சிந்தனை தெள்ளிதின் விளங்கும்.

## சொற்பொருள் விளக்கம்

ரா. ராகவையங்கார், தம் உரைகளில் சொற்களுக்கு இனிமையும் சுவையுமிக்க பொருள் விளக்கத்தினைத் தந்துள்ளார்.

1. "நல்நலம் என்றது பெண் தன்மைக்கு இயல்பாகிய நாணினாகிய நலத்தை". (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 150).

2. "புலவி என்பது அன்புடைக் காதலர் குழையத் தழுவி இன்பமிகத் துய்த்தற் பொருட்டு முன்னிகழ்வதாகும்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 150)

3. "தூண்டில் என்பது விழுங்கிய மீன் அகப்படும்படி செய்யப்பட்டு இரைகோத்த கொடுவாயிருப்புக் கருவி". (ரா. ராகவையங்கார், மேலது, ப. 150)

4. "அருந்திறற் கடவுள் - கடவுள் என்றதனால் நித்தர்க்கு மேலோனென்பதும், திறற்கடவுள் என்றதனால் முத்தர்க்கு மேலோன் என்பதும், அருந்திறற் கடவுள் என்றதனாற் பத்தர்க்கு மேலோன் என்பதும் கருதினார். மூவகையுயிர்க்கும் மேலானமை காட்டியவாறு". (ரா. ராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும் உரையும், ப. 81).

5. "பரதர் மலிந்த பல்வேறு தெரு வாணிகர் மலிந்த பலவாய் வேறுபட்ட தெரு. பண்ட வாணிகர், அறுசுவை வாணிகர், பொன் வாணிகர், என்றாற் போலப் பலராதலால் அவரவர் தெருவைப் பல்வேறு தெரு என்பர்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 66).

மேற்கூறிய விளக்கங்கள் அவரது நுண்ணறிவுத்திறனைப் பறைசாற்றுகின்றன.

### எதுகை மோனை இயைந்து வரல்

முதலெழுத்துகள் ஒன்றி வரும் மோனை அமைப்பும் இரண்டாம் எழுத்துகள் ஒன்றி வரும் எதுகை அமைப்பும் செய்யுள் வடிவங்களின் தாக்கத்தினால் உரைநடையில் இயல்பாக இடம் பெறுவதுண்டு. அத்தன்மையினை இவரது உரையில் காண முடிகின்றது.

1. "இளையர் விரும்புவதல்லது தாம் விரும்புதல் அஃது என்றது வந்த விருந்திற்குச் செய்யும் விருந்தினை" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 133) என்பதில் விரும்பு, விருந்து ஆகிய சொற்களும்,

2. 'பொருளான் அறனும் பொருளாற் பொருளும் பொருளான் இன்பமும் எய்தலாமென்ற நெஞ்சிற்கு அறப்பயனும் பொருட்பேறும் இன்பப் பெருக்கும் எனக்குக் கானவர் நல்குற மகளே யாயினள் என்றானென்க" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 119) என்பதில் பொருள் என்ற சொல்லும் மீண்டும் மீண்டும் வந்து நடைக்கு அழகினையும் இனிமையும் சேர்க்கின்றன.

## பொருள் நயமுரைத்தல்

"கலை நுணுக்கத்தில் புதைந்து கிடக்கும் கூறுகளையெல்லாம் வெளிப்படுத்தல் திறனாய்வாளரின் பணியாகும். படைப்போன் செறிவாகப் படைத்த படைப்புகளில் திட்பமும் நுட்பமும் நோக்கி அவற்றுள் காணக்கிடக்கும் பல்வேறு திறங்களையும் நயம்பட எடுத்துக் கூறும் ஆற்றல் திறனாய்வாளனுக்குத் தேவை'' (இ. சுந்தரமூர்த்தி, பரிமேலழகர் திருக்குறள், உரைத்திறன், ப. 165) இத்திறனை, கீழ்வரும் சான்றுகளில் தெளிவாகக் காணலாம்.

1. "மடவாக மடந்தை நாமே - அருளுமன்பு நீக்கித் துணை துறந்து பொருள் மேற்பிரியும் அறிவினும், அருளுமன்பும் நீங்கவும் துணை துறக்கவும் இயையாத மடமை உயர்ந்தது என்பது கருத்தாகக் கொள்க" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 60-61) இங்குத் தலைவனின் பொருள் வலிமையைவிட, பிரிவை விரும்பாத தலைவியின் மடமையே உயர்வு என அவர் சுட்டி யிருப்பது நயம் பயப்பது.

2. **"இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா கியரென் கணவனை**
**யானா கியர் நின் னெஞ்சுநேர் பவளே"** (குறுந் 49வது பாடல்)

என்ற பாடல் வரிகளுக்குப் புதிய விளக்கம் தருகிறார்.

"இப்பிறப்பு மாறி மறுபிறப்பு உண்டாயினும் நீ என் கணவன் ஆகுக; நின் மனமொத்தவள் யானாகுக என்றது தலைவன் பரத்தைமையில்லாது தனக்கே உரியனாதல் கருதினாள். தன்னெஞ்சு நேர்தல் தானறிகலாற் கூறாது விடுத்தான். பிறன் கற்புடையாட்டி வாயினாலும் சொல்லத் தகானாதல் காண்க. உள்ளம் பொருந்துபவள் என்பதுமாம். 'எந்நெஞ்சமர்ந்தோளே' (குறுந். 56) இம்மை மாறி மறுமையாயினும் நீயாகிய ரென் கணவனை என்றது இம்மையிலும் நீ பரத்தையர்க்குக் கணவன் ஆகாய் என்பதும், அவர் நினைக்கு மனைவியர் ஆகார் என்பதும் குறித்தாம்" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 90) இது தனது கணவன் பரத்தையருடன் உறவு கொள்வதைத் தலைவி எப்போதும் எப்பிறவியிலும் விரும்பவில்லை என்பதும் உள்ளத்தோடும் உடலோடும் கணவனோடு பொருந்தக் கூடியவள் மனைவி என்பதும் கோடிட்டுக் காட்டப்படுகின்றன.

3. "கூழ் உடை நல் இல் கூழுடையதாயும் வழங்காத மனையை நீக்கற்கு நல்லில் என்றார். வழங்குமனைக்கும் கூழில்லாமை குறையென்று கூழுடை நல்லில் என்றார்" (ரா. ராகவையங்கார், பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சியும், உரையும், ப. 67) என்பதிலும்,

4. "கொடும்பூண் மகளிர் - கொடும்பூண் மகளிரென்ற அமங்கலைகளே இல்லை யென்னுங்கருத்தால். கொடும்பூண் - வளைந்த அணிகலம். வளையல் முதலியன. அழகு செய்யும் போதே பாரத்தாற்றாங்கலாற்றாக் கொடுமையுஞ் செய்தலாற் கொடும்பூண் என்றார் எனினுமமையும்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 67) என்பதிலும், அவர் தரும் பொருள் நயமிக்கதாக அமைகின்றது.

## பாடவேறுபாடு காட்டல்

"பாடபேதம் சுட்டும் கோட்பாடு திறனாய்வில் இடம் பெற்றிருத்தலை 'மூலப்பாடத்திறனாய்வு' என்ற திறனாய்வு உணர்த்துகின்றது" (கி. ஆதிநாராயணன், உரையாசிரியர்களும் திறனாய்வுக் கோட்பாடுகளும், ப. 176) என ஆதிநாராயணன் தமது நூலில் கூறுகிறார். இக்கோட்பாடு உரையாசிரியராகிய ரா. ராகவையங்காராலும் கையாளப்பட்டுள்ளது. சான்றாக,

"ஒரு மரப்பாணியிற்றூங்கி யாங்கு - ஒற்றைத் தோணியால் நேர்ந்த தாமத நிலையிற் றோணிவரும் வரைத் துஞ்சினாற்போல. பாணி - காலதாமதம். இதனுரையில் 'விடுகின்ற தோணி ஆகையாலே என்றிருப்பதை விடுகின்ற தொன்றி யாகையாலே எனத்திருத்திப் படிக்க விடுகின்றது. ஒன்றியாகையினாலே எ.று. தொன்றி என்று படிக்காது தோணி என்று படித்த பாடம் பிழைப்பாகும். 'விடுகின்ற தோணி யாகையினாலே' என்று கூறுவது பாணிக்கு ஏதுவாகாமை நோக்கிக் கொள்க. நூலில் ஒரு மரம் என்றதனையே விளக்குதல் கண்டு இதனுண்மையுணரலாம்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 94) இப்பகுதிவழித் தொன்றி தோணி வேறுபாடுகாட்டி உண்மையைத் தெளிவு படுத்தியமையைக் காணலாம்.

## மறுபார்வைக்குரியன

ரா. ராகவையங்கார் சில இடங்களில் வலிந்து பொருள் கூறுவதால் உரை மறுபார்வைக்குரியதாக அமைகின்றது. சான்றாக,

1. குறுந்தொகை 97ஆவது பாடலில் 'என்நலனே ஆனா நோயொடு கானலஃதே' என்று வரும் வரிக்கு, அவர்தரும் விளக்கவுரையைக் கவனிப்போம்.

'இவ்வாறு நோய் தந்து நலங்கொண்ட தலைவன் தம்மூரான் அவன் களவினிகழ்த்திய இப்பண்டமாற்றுச் செய்தி அலராகி மன்றத்தஃது என்று கூறி இப்பழி பரிகரிக்க வரைவொடு விரைந்து வருகின்றிலன் எனக் குறித்தாள் என்க" (ரா. ராகவையங்கார், குறுந்தொகை விளக்கம், ப. 155). இதனில் குறிப்பிடப்படும் 'பண்டமாற்று' என்பது ஒருவர் பொருளை இன்னொருவரிடம் கொடுத்து அதற்கு ஈடாக, நிகரான, தனக்கு வேண்டிய பொருளைப் பெற்றுக் கொள்வது. களவினில் தனது நலனை எடுத்து, நோயைக் கொடுத்தான் என்று தலைவி உரைக்கின்றாள். ஒருவர் இன்பம் தந்து ஈடாகத் துன்பம் பெறுவதுண்டோ? மாறாக, இன்பம் அல்லவா பெறவேண்டும். ஆனால், தலைவி, தலைவனிடம் நலன் தந்து நோய் பெற்று வருந்துவதாகக் கூறுகிறாள். இதனைப் பண்ட மாற்று முறை என உரை வகுத்தது பொருந்துமா என்பது மேலும் ஆய்வுக்குரியது.

2. குறுந்தொகை 75ஆம் பாடற் பொருள் விளக்கம்

"நீ கண்டனையாயின் அவரைத் தனிவிட்டு இங்கு வருதல் செய்யாய் என்ற கண்டார்க் கேட்டனையோ என்றாள். பாணர் பொய்ப்பது பல்காலறிந்தவளாதலால் ஐயப்பாட்டால் இங்ஙனம் வினவினாள். 'ஒரு நின் பாணன் பொய்யனாக (குறுந். 127) என்பது காண்க...... தலைவிக் குரைத்த பாணற்குக் காதலர் வரவு கண்டதாகக் கூறியவனும் ஒரு பாணன் என்பது ஈண்டைக்கு நன்கியையும். இருவரும் பொய்யர் என்று தான் துணிந்தது. தெளியத் தன்னாலாகாத பெருங் கொடையை அவர் பெறுக என்றாளெனக் கொள்" (ரா. ராகவையங்கார், மேலது, ப. 126) இங்குத் தலைவி, தலைவன் வரவுணர்த்திய பாணர் (கண்டவர், கேட்பவர்) இருவரும் பொய்யர் எனத் துணிந்து தெளிபவளாக உரை வகுக்கப்பட்டுள்ளது. ராகவையங்கார் மேற்கோள் காட்டிய 127 - ஆம் பாடலும் பாணன் ஒருவன் பொய்யன் என்பதற்காக எல்லாப் பாணர்களும் பொய்யர் அல்லர் என ஓர் உவமையுடன் விளக்குகிறது. பல அகப்பாடல்களில் தலைவன் தனது வருகையைத் தலைவிக்கு உரைக்குமாறு தூதுவிட்ட இடங்களும் உண்டு. 'கனவு நிலை உரைத்தல்' என்னும் அதிகாரத்தில்

"காதலன் தூதொடு வந்த கனவினுக்கு
யாது செய்குவன் விருந்து"

என்று வரும் குறளில் தலைவி கனவில் தலைவன் விடுத்த தூதிற்கு விருந்து படைக்க யாது செய்வேன் என ஆர்ப்பரிக்கின்றாள். தலைவனது வருகைக்காகத் தலைவி ஆவலோடு காத்திருக்கும் வேளையில் தலைவனின் வரவுச் செய்தி அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரக்கூடியதாக இருக்கும். நேரில் வந்து வரவுணர்த்திய பாணர்க்கு வியப்பில், ஆனந்தத்தில் செல்வம் நிறைந்த

பாடலிபுரத்தைப் பரிசாகத் தர எண்ணுவது இயல்பு. இங்ஙனம் கொள்ளாது, பாணர்கள் பொய்யர் என்று தலைவி கூற்றாக உரை தந்ததும் மறுசிந்தனைக்குரியது.

## முடிவுரை

ரா. ராகவையங்கார் சிறந்த நூலாசிரியராக, பத்திரிகாசிரியராக, பதிப்பாசிரியராக, சொற்பொழிவாளராக, கவிஞராக, மொழி பெயர்ப்பாளராக, சமய நூலாசிரியராக, மொழி நூலறிஞராக விளங்குவதுடன், வடமொழிப் புலமையும் பன்னூற் பயிற்சியும் பெற்றவராக, பலதுறையறிவாளராக, உரையாசிரியராக, நுண்மாண் நுழைபுலமிக்க ஆராய்ச்சியாளராகத் திகழ்கிறார் என்பதை அறியலாம்.

## துணைநூற்பட்டியல்

அரவிந்தன், மு. வை., உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மூன்றாம்பதிப்பு, 1995.

ஆதி நாராயணன், கி., உரையாசிரியர்களும், திறனாய்வுக் கோட்பாடுகளும், சித்திரா நிலையம், சென்னை, 2001.

ராகவையங்கார். ரா., இராசராச சேதுபதி, ஒரு துறைக்கோவை மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1984.

ராகவையங்கார். ரா., பெரும்பாணாற்றுப்படை (ஆராய்ச்சியும் - உரையும்) அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1949.

ராகவையங்கார். ரா., குறுந்தொகை விளக்கம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1949.

சண்முகம் பிள்ளை, மு. (பதி. ஆ.), குறுந்தொகை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985.

சுதாகர், ம.வி., பத்துப்பாட்டு (மூலமும் தெளிவுரையும்) வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, 1990.

சுந்தரமூர்த்தி. இ., பரிமேலழகர், திருக்குறள் உரைத்திறன், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1985.

மாணிக்கம், வ.சுப., சிந்தனைக்களங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1975.

மோகன், இரா. சொக்கலிங்கம். ந., உரைமரபுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1988.

*******

# வரலாற்று நூல்கள்

**ப. பத்மநாப பிள்ளை**

தமிழ் இலக்கியங்கள் வரலாற்றுத் துறைக்குச் செய்த பங்களிப்பு அளவிடற்கரியது. முடியுடை மன்னர், வேளிர், குறுநில மன்னர் எனப் பலதிறப்பட்ட மக்களின் வரலாற்றுப் பதிவுகளாகப் புறமும், உதியன் மரபினர், பொறையன் மரபினர் என இரு பிரிவாக ஆண்ட சேரர்களின் வரலாற்றுப் பதிவுகளாகப் பதிற்றுப்பத்தும், தமிழகத்தின் ஆவணங்களாக சிலம்பும், மேகலையும் திகழ்கின்றன. இந்த வரலாற்றுப் பகுதிகளில் குழப்பமுடைய இருண்ட பகுதிகளைத் திறனாய்வாளர்களும் படைப்பாளர்களும் வெளிச்சம் போட்டுக் காட்டி வந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் ரா. ராகவையங்கார். அவரது, வரலாற்று நூல்களைக் குறிப்பாக வஞ்சிமாநகர், பாரி காதை, பாரி மகளிர், சேதுநாடுந் தமிழும் ஆகியவற்றை ஆய்வது தேவையானதாகும்.

முதற்கண் கொங்குநாடு எது என்பதைக் கூறப் போந்த ராகவையங்கார் "கொங்கு முற்காலத்துக் கொங்கன் என்னும் சேரனாலாளப்பட்ட தன்மையாற் கொங்க நாடெனப்பட்டதெனத் தெரிகின்றது" என்று குறிப்பிட்டுக் கச்சியப்ப முனிவரின்

"கோதைபயில் விற்கொடி குலாவிய புயத்தன்
கோதையர் விழிக்கணை குளிக்குமரு மத்தன்
கோதைகம ழுங்கவிதைக் கொங்கனென விள்ளுங்
கோதைநனி யாண்டதொரு கொங்குவள நாடு"

என்ற பாடலையும் சான்றாகத் தருகின்றார். கொங்கனென விள்ளுங் கோதை-கொங்கன் என்று வழங்கப்படும் சேரன் என்றது காண்க. கொங்கன - சேரன் எனப் பொருளையும் தந்து "வில்லவன் கொங்கன் வஞ்சி வேந்தனே போந்தின் தாரோன்" என்பது சூடாமணி நிகண்டு. 'பூழியனுதியன் கொங்கன்' என்பது பிங்கலமும் திவாகரமுமாம்" என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் கேரளோத்பத்தி என்னும் நூலில் சேரன் பாண்டியன் சோழன் என்பது கூற வேண்டிய இடங்களில் கொங்கன், பாண்டியன், சோழராஜன் எனக் கூறிச்செல்வதால் கொங்கன் சேரமன்னனே என்றும் கொங்குநாடு சேரநாடு என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தன் கருத்தை அரண் செய்ய இலக்கியங்களேயன்றி நிகண்டுகளையும் பிறமொழி நூல்களையும் சான்றாக எடுத்திருப்பது ராகவையங்காரின் ஆய்வு நுட்பத்தைப் புலப்படுத்துகின்றது.

மேலே கூறப்பட்ட கொங்குநாட்டில் இருக்கும் கொல்லிமலை யாருடைய மலை என்பதைக் கூறப்போந்த ஆசிரியர் "கொல்லிமலை சேரர்க்கே சிறந்த தலைமையான மலையென்பது 'கொல்லிச்சிலம்பன்' எனச் சேரனை வழங்குமாற்றானறியப்படும்" என்று கூறி,

"வாழியர், வில்லெழுதிய விமயநெற்றியோடு
கொல்லியாண்ட குடவர் கோவே"

என்ற சிலப்பதிகார அடிகளையும் தருகின்றார். மேலும், "சோழர்க்கு நேரிமலையும், பாண்டியர்க்குப் பொதியமலையும் எங்ஙனம் சிறந்தனவோ, அங்ஙனமே சேரர்க்கு இது சிறந்ததாகும். எத்துணையோ மலைகளையுடைமையாற் குடபுலம் மலைமண்டலம் எனப்படும். அம்மலைமண்டலங் காவல் புரிகின்ற சேரர் பெயர் சிறந்தது இக்கொல்லிமலையானே என்பது ஈண்டைக்கு நினைக்கத்தகும்" என்று கூறி இம்மலை கருவூர்க்கு அடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொங்கு சேரருடையதென்று கூறி அந்நாட்டுரெல்லாம் சேரரையே சேர்ந்தன என்றும் அக்கொங்குநாட்டுப் பல்லூருள் கருவூரும் ஒன்று என்றும் குறிப்பிட்டுள்ளார். கருவூர் கொங்க நாட்டிலுள்ள ஊர்தான் என்பதை நிறுவ "இக்காலத்தும் அக்கருவூர் கொங்கு நாட்டதென்றே தமிழுலகாற் கருதப்படும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். கருவூருக்கு வஞ்சி என்ற பெயரும் உண்டு என்பதைக் குறிப்பிடும் ஆசிரியர் உரையாசிரியர்களின் உரைகளையும் நிகண்டுகளின் பகுதிகளையும் சான்றாக ஏற்றுக் கொள்கின்றார். "புறப்பாட்டுரையாசிரியரும், சிலப்பதிகார அரும்பத உரையாசிரியரும் வஞ்சி-கருவூர் என்று உரையெழுதினர் என்பது அறிஞர் பலரும் அறிவர். இங்ஙனமே நிகண்டு நூலுடையாரெல்லாங் கூறினர். இவற்றால் ஓரூர் இருபெயர்களுடையதென்பது பெறப்பட்டதாகும். இவ்விருபெயரும் இவ்வாசிரியர்களிட்ட பெயரன்று பண்டைச் சங்க நூல்களிற் கண்டனவேயாகும்" என்று கூறி,

"கடும்பகட்டியானை நெடுந்தேர்க் கோதை
திருமாவியனகர்க் கருவூர்" (அகம் – 93)

"ஒன்று வேற்கோதை யோம்பிக்காக்கும் வஞ்சி" (அகம் – 263)

என்பனவற்றைச் சான்றுகளாகத் தந்திருக்கிறார்.

இவ்வஞ்சி என்னும் பெயர் கருவூரைச் சுட்டவில்லை. அது மேலைக் கடற்கரையிலுள்ளதோர் ஊர் என்று கூறுவாரும் உளர் என்று கூறி அவர் அவ்வாறு கூறுவதற்குக் காரணம் "கலிகெழுவஞ்சி எனச் சிலப்பதிகாரத்து வருதல் பற்றி வஞ்சி கடலுடைத்தென மயங்குவார் என்பதாகும்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இளங்கோவடிகள்

மதுரையினைக் 'கலிகெழுகூடல்' எனக் குறிப்பிட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி அவர் வாதத்தை மறுத்துள்ளார்.

சேரனாட்டுப்புலவரெனத் துணியப்பட்ட புலவர்களான,

கருவூர்ச் சேரமான் சாத்தன்
கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூதநாதன்
கருவூர்க் கண்ணம்பாளனார்
கருவூர்க்கதப் பிள்ளை
கருவூர்க்கதப் பிள்ளை சாத்தனார்
கருவூர்க் கிழார்
கருவூர்ப்பவுத்திரன்
கருவூர்க் கோசனார்
கருவூர்ப் பூதன் மகனார் பெருங் கொற்றனார்

முதலியோர் கருவூரினராக வழங்கப்படுதல்லது வஞ்சிப்புலவரென வழங்கப்படாமையான் வஞ்சி செய்யுள் வழக்குப் பெயரென்றும், கருவூரென்பதே உலக வழக்கினுமுள்ள பெயரென்றும் அறியத்தகும் என்று குறிப்பிட்டுள்ளார். இதைப்போன்று உலக வழக்கு, செய்யுள் வழக்கு என இருபெயர் பெற்ற ஓர் ஊரைச் சான்று தந்து மேற்கூறிய முடிவிற்கு வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். மேலும் கருவூரும் வஞ்சியும் வேறு வேறு எனக் கொண்டால் சேரர் தலைநகராகிய வஞ்சியின்கண் நல்லிசைப்புலவரே இல்லாமலொழிய நேரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஊரினைக் கருவூர் என்பது போல நாட்டினைக் கருநிலம் என வழங்கியிருப்பர் என்று கூறிக் கருநிலம்-கன்னடம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதனை அரண் செய்ய சேலம் என்பது சேரம் என்பதன் திரிபு என வழங்குவதாகக் குறிப்பிடுகின்றார். கருநிலம் சேரம் என்ற இரண்டு சொற்களில் வரும் ரகரம் னகரமாகவும், லகரமாகவும் திரிந்துள்ளது என்பதற்கு மொழியியல் அடிப்படையில் சான்றுகள் தந்திருந்தால் ஏற்புடையதாக இருந்திருக்கும்.

கருவூரும் வஞ்சியும் ஒன்றே எனக் காட்டச் சிலப்பதிகாரத்துக் காட்சிக்காதைக்கண் வரும்,

"கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சிமாநகர்"

என்னும் அடிகளைத் தந்து அதற்கு அரும்பதவுரையாசிரியர் வஞ்சி மாநகர் என்பதற்குக் கருவூரிலே எனப் பொருள் கூறியுள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் புறப்பாட்டில்,

"விண்பொருபுகழ்விறல் வஞ்சி" *(11)*

என்பதற்கு உரையாசிரியர் வஞ்சி - கருவூர் என்று கூறியதையும் புறப்பாட்டில்,

"பூவா வஞ்சியுந் தருகுவனொன்றோ" (32)

என்பதற்கு அவர் "பூவாவஞ்சியென்றது கருவூர்க்கு வெளிப்படை" என்று கூறியதையும் புறப்பாட்டில்,

"மாண்வினை நெடுந்தேர் வானவன் றொலைய
வாடா வஞ்சி வாட்டு நின்" (39)

என்பதற்கு அவர் "மாட்சிமைப்பட்ட தொழில் பொருந்திய நெடிய தேரையுடைய சேரனழிய அவனது அழிவில்லாத கருவூரை அழிக்கும் நினது" என்று கூறியதையும் சுட்டிக்காட்டியுள்ளார். உரையாசிரியர் கூறியதோடன்றித் திவாகரநிகண்டு நூலார்,

"கருவூர் வஞ்சி"

என்று கூறியதையும், பிங்கலந்தை நூலார்

"கருவூர் வஞ்சி"

என்று கூறியதையும் சான்றுகளாகத் தந்து கருவூரும் வஞ்சியும் ஒன்றே என்பதை நிறுவியுள்ளார்.

கருவூர்தான் சேரனின் தலைநகர் என்பதை அவ்வூரில் பாயும் பொருநையை அடிப்படையாகக் கொண்டு நிறுவுகின்றார். பழந்தமிழ் நூல்கள் பாண்டியனை வையைத்துறைவன் என்றும், சோழனைப் பொன்னித்துறைவன் என்றும் சேரனைப் பொருநைத் துறைவன் என்றும் கூறுவதிலிருந்து இவ் ஆறு பாயும் மூன்று ஊர்களும் அவர்களுடைய தலைநகரங்களே என்று குறிப்பிடுகின்றார். பாண்டியநாட்டில் தாம்பிரபரணி ஜீவநதியாக இருந்தாலும் பாண்டிய மன்னன் அத்துறையாற் பெயர் பெறாது தன் தலைநகர் மதுரையில் பாயும் வையையால் வையைத்துறைவன் என்றழைக்கப் படுதல் போன்று சேரனும் தன் தலைநகரில் பாயும் பொருநையால் பொருநைத்துறைவன் என்றழைக்கப்பட்டான் என்று குறிப்பிடுவது சிறப்பானதாக அமைந்துள்ளது.

கருவூர் ஆன்பொருநையாற்றுக் கரையிலுள்ளது என்று கூறி அதனை நிறுவும் பொருட்டு,

"கரும்பகட்டியானை நெடுந்தேர்க்கோதை
திருமாவியனகர்க் கருவூர் முன்றுறைத்
தெண்ணீருயர்கரைக்குவை இய
தண்ணான்பொருநை மணலினும் பலவே" (அகம் - 93)

என்பதையும்

*"வஞ்சிப்புறமதிலலைக்கும்*
*கல்லென்பொருநை மணலினும்" (புறம் - 347)*

என்பதையும் தந்துள்ளார்.

மேலும் இக்கருவூர் தலபுராணங்களில் கோவூர், ஆனூர் என வழங்கப்படுதலை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இப்பெயர்கள் எவ்வாறு தோன்றியிருக்கும் என்பதையும் தந்திருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

ஆ என்னும் சொல் பொருநை என்னும் சொல்லோடு புணரும்போது னகர ஒற்றுப் பெறுவதைக் காப்பியரின்

*"மாமரக்கிளவியும் ஆவும் மாவும்*
*ஆமுப்பெயரும் அவற்றோரன்ன*
*அகரம் வல்லெழுத்து அவையவண் நிலையா*
*னகரம் ஒற்றும் ஆவும் மாவும்" (சொல், எழுத்து 232)*

என்னும் நூற்பா கொண்டு விளக்கலாம். எனவே

ஆ + பொருநை = ஆன் பொருநை

ஆ + ஊர் = ஆனூர்

என்பவை பொருத்தமானதே என்ற முடிவிற்கு வரலாம். தமிழில் வழங்கும் ஆ என்னும் சொல்லிற்கு வடமொழியில் கோ என்னும் சொல் வழங்குவதால்

கோ + ஊர் = கோவூர்

எனத் தலபுராணங்கள் சுட்டியுள்ளமையை ஆசிரியர் விரிவாக விளக்கவில்லை, எனினும் பொருத்தமாகவே உள்ளது.

கருவூர் சேரனின் தலைநகரமே என்பதை இறையனார் களவியல் உரையில் வரும் செய்தியை அடிப்படையாகக் கொண்டும் நிறுவுகின்றார். களவியலுரை "மதுரை ஆவணியவிட்டமே, உறையூர்ப் பங்குனியுத்தரமே, கருவூர் உள்ளிவிழாவே என இவை போல்வன" (16 சூத் - உரை) எனத் தமிழகத்தில் நிகழும் விழாக்களைக் குறிப்பிட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு "இதன்கண் கூறப்பட்ட கருவூர் சேரர் தலைநகரேயென்பது பாண்டியர் தலைநகராகிய மதுரையுடனும் சோழர் தலைநகராகிய உறையூருடனும் சேர உரைத்ததனாலுணரப்படும். மூன்று தலைநகர்களிலும் நிகழும் விழாக்களே ஈண்டுக் குறிக்கப்பட்டனவாதல் கண்டு கொள்க" என்று குறிப்பிட்டுள்ளார். பலபொருள் ஒரு சொல்லின் உண்மைப்பொருளை வேறுபடு வினை, இனம், சார்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அறியலாம் என்பதைக்

காப்பியர்,

"அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொருள் ஒரு சொல்
வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே" (தொல் – சொல் – 53)

என்ற நூற்பாவில் குறிப்பிட்டுள்ளார். தலைநகரங்களைக் குறிப்பிடும் போது பலபொருள் ஒரு சொல் இல்லையென்றாலும், அங்குக் கூறப்பட்ட 'சார்பு' என்பதை அடிப்படையாகக் கொண்டு மதுரை, உறையூர், கருவூர் மூன்றுமே தலைநகரங்களாகும் என்ற முடிவிற்கு வரலாம்.

கருவூர், சுரன் கைப்பற்றிய காலத்துச் சுரபுரம் எனவும், வீரசோழன் கைப்பற்றிய காலத்து வீரசோழபுரம் எனவும் பெயர் பெற்றது என்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். ஒரு ஊர், அதுவும் குறிப்பாக ஒரு தலைநகரம் அரசாட்சி செய்த மன்னனின் பெயரை ஏற்று மாறி வரும் என்பது ஏற்புடையதாக இல்லை.

ஆசிரியர், சேரன் செங்குட்டுவன் வடநாட்டுக்குப் படையெடுத்துச் செல்வதை,

"தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவர் போல வஞ்சி நீங்கித்
தண்டத் தலைவரும் தலைச்சாரச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளம்புசூழ் போக
மலைமுதுகுநெளிய நிலைநாட தர்பட
வுலகமன்னனொருங்குடன் சென்றான்" (சிலம்பு – கல்கோள்)

என்ற சிலப்பதிகார அடிகளால் காட்டி, "பெரும்படையுடன் எழுந்த செங்குட்டுவன் தன் படையினை இடஞ்சுற்ற விட்டுச் செல்லாது தமிழ்நாட்டரசர் வழக்கப்படி வலஞ்சுற்றவிட்டு வடநாடு செல்ல நினைத்ததனாற் புணரியின் விளிம்புசூழ் போக" என்று குறிப்பிட்டுள்ளார். இங்கு ஆசிரியர் வலஞ்சுற்றுதல் என்பது தமிழ்நாட்டரசர் வழக்கமென்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இது அரசர் வழக்கமன்று; தமிழ் மக்கள் வழக்கம் ஆகும். இன்றும் மக்கள் கோயில்களில் வலமாகத்தான் செல்கின்றனர். திருவண்ணாமலையில் மக்கள் கிரிவலம் வருவதைக் காண முடிகின்றது. சிலப்பதிகாரத்திலும் கோவலன் கண்ணகி தீவலம் செய்வதை,

"மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்க ணோன்பென்னை"
(சிலம்பு – மங்கலம்)

என்னும் பகுதியால் அறியமுடிகின்றது.

ரா. ராகவையங்கார் நாட்டரசன் கோட்டை என்பது சேது நாட்டரசனுடைய அரண் என்று கூறிப் புகார்ப்பட்டினத்திலிருந்து சேதுநாட்டுக்கு வந்த வணிக நன்மக்கள் இன்னும் நாட்டுக் கோட்டையார் என்று தம்மை வழங்குவதையும் குறிப்பிட்டுள்ளார். மேலும் இம்மக்கள் நாட்டார் என்று பெயர் சிறந்த சேதுநாட்டாரினின்று தம்மைப் பிரித்துணரவே நகரத்தார் என்னும் வழக்குப் பெற்றார் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனை ஏற்றால் பாண்டிய நாட்டில் வணிகர்களே இல்லை என்ற முடிவிற்கு வரவேண்டியிருக்கும். கோவலன் மதுரையில் வணிகர்களைச் சந்தித்தான் எனச் சிலப்பதிகாரம் கூறும். மேலும் நாட்டார் என்னும் பெயர் சோழநாட்டிற்குரியது என்பது வேங்கட சாமி நாட்டார் போன்ற பெயர்களை நோக்கப் புலப்படும். சேதுநாட்டு வணிக மக்கள் நகரங்களில் தங்கியதால் நகரத்தார் எனத் தம்மை குறிப்பிட்டிருப் பாரேயன்றி நாட்டாரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக அன்று என்ற முடிவிற்கு வரலாம்.

ரா. ராகவையங்கார் பாரி இறந்தவுடன் அவன் மக்களைக் கபிலர் அழைத்துக் கொண்டு சென்றார் என்றும் இறுதியில் வடக்கிருந்து உயிர் துறந்தார் என்றும் 'பாரி மகளிர்' என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் பாரிகாதையில் கபிலர் தீப்பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு கபிலர் முடிவு இருதிறத்தனவாக அமைந்ததை வெவ்வேறு ஆசிரியர்கள் சுட்டிச் செல்கின்றனர். ஆனால் வரலாற்றில் குழப்பான நிகழ்வுகள் வரும்போது ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவது திறனாய்வாளர்களின் கடமை. ரா. ராகவையங்கார் அம்முயற்சியை மேற்கொள்ளாமல் வழக்கில் இருக்கும் ஒன்றிற்கொன்று முரண்பட்ட இருவேறு கூற்றுகளை இரண்டு நூல்களில் அப்படியே தந்திருப்பது வியப்பாக இருக்கிறது.

ஔவை பாரியைச் சந்தித்திருக்க வாய்ப்பில்லை. சந்தித்திருப்பின் ஔவை பாரியைப் புகழ்ந்து பாடிய பாடல்கள் புறநானூற்றில் கண்டிப்பாக இடம் பெற்றிருக்கும். கபிலரைத் தவிர பிற புலவர்கள் யாரும் பாரியைப் பாடாததும் இவண் குறிப்பிடத்தக்கது. ஆனால் அது பாரி காதையில் இடம்பெற்றுள்ளது. அகப்பாடலில் வரும் "பாரி பறியுண்ட திறம்" எனும் ஒரு தொடரை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்ட கர்ணபரம்பரை கதையை வரலாற்றுக் காப்பியமாக வரும் பாரி காதையில் ஔவை பறியுண்ட கதையைச் சேர்த்திருக் கின்றார். கர்ண பரம்பரையாக வரும் செய்தியை வரலாறாக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது சிந்திக்கத்தக்கது.

## மேற்கூறியவற்றால் கீழ்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன

கொங்கன் என்னும் சேர மன்னன் ஆண்டதால் அந்நாடு கொங்குநாடு எனப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

சோழர்க்கு நேரிமலையும், பாண்டியர்க்குப் பொதிய மலையும் போன்று சேரர்க்குக் கொல்லி மலை சிறப்புற்று விளங்கியது என்பதை அறிய முடிகிறது.

சேரநாட்டுப் புலவரெனத் துணியப்பட்ட புலவரெல்லாம் கருவூர் என்னும் பெயரை அடையாகப் பெற்றிருந்ததால் வஞ்சி என்பது இலக்கிய வழக்கு, கருவூர் என்பது உலகியல் வழக்கு என்பது தெளிவு.

வையையும், பொன்னியும், பாயும் ஊர்களையே தலைநகராகக் கொண்டு ஆளும் மன்னர்கள் வையைத்துறைவன், பொன்னித் துறைவன் என வழங்குதல் போன்று சேரன் பொருநைத்துறைவன் என அழைக்கப்படுவதால் பொருநை பாயும் கருவூரே அவனது தலைநகரம் என்பது தெளிவு.

கருவூர் சுரன் கைப்பற்றிய காலத்துச் சுரபுரம் எனவும், வீரசோழன் கைப்பற்றிய காலத்து வீரசோழபுரம் எனவும் வழங்கப்பட்டது என்பது ஏற்புடையதாக இல்லை எனலாம்.

வலம் வருதல் என்பது அரச வழக்கு என்னும் கூற்று ஏற்புடையதாக இல்லை. இது நாட்டார் வழக்கு என்பது தெளிவு.

வரலாற்றின் இருண்ட பகுதிகளைச் சிறப்பாக ஆய்வு செய்த ராகவையங்கார் இரண்டாயிரம் ஆண்டுகளாகக் குழப்பமான பகுதியாக விளங்கும் பாரி வரலாற்றின் இருவேறுபட்ட வடிவங்களை ஆய்வு செய்து ஒரு முடிவுக்கு வராமல் அப்படியே ஏற்றுக் கொண்டிருப்பது வியப்பாக உள்ளது.

### பயன்பட்ட நூல்கள்


*ராகவையங்கார். ரா., சேதுநாடுந் தமிழும், செந்தமிழ்ப் பிரசுரம், மதுரை - 1928.*

*---------------------- பாரிமகளிர், செந்தமிழ் 2:8, 21981.*

*---------------------- வஞ்சி மாநகர்*

*---------------------- பாரி காதை*

*சுப்ரமண்யன், ந. தமிழக வரலாறு (கி.பி. 1565 வரை), என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை - 1979.*

*அகநானூறு, கழகப்பதிப்பு, 1968.*

*சிலப்பதிகாரம், உவே.சா. பதிப்பு, 1955.*

*தொல்காப்பியம் மூலம், நியூ செஞ்சுரி பிரிண்டர்ஸ், 1981.*

*புறநானூறு, உவே.சா., பதிப்பு, 1971.*


******

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113**

**அண்மை வெளியீடுகள்**

| | |
|---|---|
| இலக்கிய இதழ்கள் | 110.00 |
| இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள் - தொகுதி 3 | 60.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| தமிழில் பிற துறைக் கோட்பாட்டாய்வுகள் | 25.00 |
| வ.உ.சி. ஒரு பன்முகப் பார்வை | 25.00 |
| இலக்கண நூல்களில் கருத்து வளர்ச்சி | 35.00 |
| தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின்தமிழ்த்தொண்டும்மொழியியல்பங்களிப்பும் | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பண்டைத் தமிழக வரைவுகளும் குறியீடுகளும் | 80.00 |
| தமிழெனப்படுவது | 115.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - இலக்கணம் & மொழியியல் | 105.00 |
| வலங்கை மாலையும் சான்றோர் சமூகச் செப்பேடுகளும் | 70.00 |
| தொல்லியல் நோக்கில் சங்ககாலம் | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (தொன்மை முதல் கி.பி.500 வரை) | 45.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு (கி.பி.501 - கி.பி.900) | 70.00 |
| பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர் | 35.00 |
| திருமணம் செல்வக்கேசவராய முதலியார் | 30.00 |
| அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார் | 55.00 |
| சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணியமுதலியார் | 40.00 |
| மூதறிஞர் மு. இராகவையங்கார் | 40.00 |
| ம.பொ.சி. யின் பார்வையில் தமிழ்மொழி இலக்கியம் பண்பாடு | 30.00 |
| தணிகைமணி வ.சு. செங்கல்வராயப் பிள்ளை | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

---

Pub.No. 536 **மகாவித்துவான் ரா. ராகவையங்கார் 30.00**